விழி 06 பார்வை 67 மார்ச் 2010

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விலை | ரூபா 50.00



## தகவலும் அறிவும்

நான்காம் தரம்: தேசியமட்டத்திலான கணிப்பீடு

செயலமைவுக் கோவை

கலைத்திட்டம்



# வெளிவந்துவிட்டது

# கூடம் - 15




**விலை: 100.00**

*தொடர்பு:*
*3, டொரிங்டன் அவனியூ*
*கொழும்பு 07*
njhiyNgrp: 011 250 6272
kpd;dQ;ry;: koodam2006@gmail.com

K.BHARANEETHARAN
Editor Jeevanathy
Editor Kadal
Kalaiaham, Alvai.

ஆசிரியர் : தெ. மதுசூதனன்

ஆசிரியர் குழு : பேராசிரியர். சபா. ஜெயராசா
பேராசிரியர். சோ. சந்திரசேகரன்

ஆலோசகர் குழு : முனைவர் மா. கருணாநிதி
பேராசிரியர். மா. சின்னத்தம்பி
பேராசிரியர். மா. செல்வராஜா
திரு. தை. தனராஜ்

நிர்வாக ஆசிரியர் : சாந்தி சச்சிதானந்தம்

துணை நிர்வாக ஆசிரியர் : காசுபதி நடராஜா

ISSN 1888 - 1246

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

மாத இதழ்

இதழ் வடிவமைப்பு : த. மைதிலி

அச்சு : சேமமடு பதிப்பகம்

தொலைபேசி: 011-2472362

வெளியீடு மற்றும் தொடர்புகட்கு:

: AHAVILI

3, Torrington Avenue, Colombo - 07

Tel: 011-2506272

E-mail : ahavili2004@gmail.com
ahavili2004@yahoo.com

# உள்ளே...

□ தகவலும் அறிவும் 03

□ தொடர் - தொடர்பியல்: பயன்நிலைகள் 06

□ கற்பித்தல் நுட்பமாக செயலடைவுக்கோவை 11

□ செயலடைவுக்கோவை: கணிப்பீட்டிற்கான அணுகுமுறை 15

□ பாடசாலைகளின் ஒன்றிணைந்த வளப்பயன்பாடு... 23

□ தேவை ஒரு தேடல் 28

□ நான்காம் தரம்: தேசிய மட்டத்திலான கணிப்பீடு 30

□ சமூக மாற்றமும் இலக்கணம் மற்றும் மொழியியல்... 34

அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு.
கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் "அகவிழி"யின் கருத்துக்கள் அல்ல.

ஆசிரியரிடமிருந்து...

# காத்திருப்பு...

இன்று சமகாலச் கல்விச் சிந்தனையில் பல்வேறு புதிய போக்குகள், பன்முகச் சிந்தனைகள் வெளிப்பட்டு வருகின்றன. இவற்றில் ஆழமான ஈடுபாடு கொண்டவர்கள் தான் உயிர்ப்பான கல்வியியலாளர்களாக இருக்க முடியும். ஆயினும் சிலர் கல்வியாளர்களாக மட்டும் சுருங்கிவிடும் நிலைமைகளும் உள்ளன. பெரும்பாலும் இவைதான் தற்போது நடைபெறுகின்றன.

விருத்தி பெறும் கல்விச் சிந்தனைகளின் வளத்தை உள்வாங்கி கல்வியியலாளர்களாக தொழிற்படுவதற்கான ஈடுபாடும் உழைப்பும் கொண்டவர்களிடம் தான் நாளைய எதிர்காலத்திற்கான கல்விக் கொள்கையும் கல்வித் திட்டமிடலும் அமையும்.

சமகாலத்தில் பன்முக ஆளுமைப் பரிமாணங் கொண்ட கல்வியியலாளர்கள் எம்மத்தியில் இருந்து உருவாவதில் பின்னடைவு காணப்படுகின்றது. அப்படி இதையும் மீறி உருவாகி உள்ளவர்களும் தமது கொள்ளளவை, திறனை வளம்படுத்துவதில் ஆற்றல் இல்லாதவர்களாகவே உள்ளனர். இதனால் நீண்ட குறுகிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றோம். இவற்றின் மோதல்நிலை எமது கல்விப் பரப்பிலும் சமூகத் தளத்திலும் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இவை யாவற்றையும் கடந்து சமகாலக் கல்விச் சிந்தனைகளை தகவலாக உள்வாங்கிக் கொண்டு செயல்படும் போலிகளை உற்பத்தி செய்யும் பண்பாட்டு இறுக்கம் எம்மிடையே ஆழமாக நிலவுகின்றது. இப் போலிகளது கருத்தாடல்கள் பொருத்தமான மாற்றங்களை விளைவிக்கும் பண்புசார் விருத்திக் கோலங்களைக் கொண்டதாக இல்லை. குறிப்பாக இந்தப் போலிகளால் எழுதப்படும் கட்டுரைகள், ஆய்வுகள் எம்மிடையே குவிக்கின்றன.

இந்த ஆக்கங்களில் நாம் எதிர்நோக்கும் கல்விசார் பிரச்சினைகளை அறைகூவல்களைக் குவியப்படுத்தும் மற்றும் பிரச்சினைகளை தீர்க்கும் பண்புகள் இல்லாமல் உள்ளன.

பொதுவில் அகவிழியும் இவைபோன்ற கட்டுரைகளைத் தாங்கிய வண்ணம் தான் வெளிவருகின்றது. எமக்கு புதிய சிந்தனைகளைப் பரவலாக்கம் செய்வதென்பது உடனடித் தேவையாக உள்ளது. இருப்பினும் இப்புதிய சிந்தனைகளின் வழி நின்று எமது கல்விப் பரப்பை, சமூகத்தை நுண்ணாய்வுக்குட்படுத்தும் பாரிய பொறுப்பு எமக்குண்டு. இதனை புரிந்து செயலாற்றும் மனவுறுதிப்பாடு மற்றும் தரிசனம் எமக்கு முக்கியம்.

இவற்றைத் தளமாக கொண்ட விமர்சன ரீதியிலான கல்விச் சிந்தனைகள் ஆய்வுப் போக்குகள் இன்னும் விரிவாக்கம் பெற வேண்டும். இவற்றின் விசைகளே எமது எதார்த்த கல்வி மரபை, பாட ஏற்பாடுகளை ஆசிரியத்துவ அறிகை மற்றும் ஆற்றுகை மரபுகளை மற்றும் மாணவ நலன்களை கேள்விக்குட்படுத்தும் பண்பாடு எழுச்சி பெறும். இதுவே நமக்கான கல்விச் சிந்தனை, நடைமுறைப்படுத்த வேண்டிய கல்விச் செயல முறைகள் யாவற்றையும் துல்லியமாக அடையாளப் படுத்தும் புதிய பண்பாட்டு மறுமலர்ச்சிக்கான வேர் களைத் தேடியலையச் செய்யும்.

'பாடசாலையும் சமூகமும்', 'மாணவரும் சமூகமும்', 'பாடசாலையும் பெற்றோரும்' முதலான விடயங்கள் தொடர்பில் விரிசிந்தனைகள் வேண்டும். இவை மாற்றுவகையிலான செயற்பாடுகளை ஒருங்கிணைத்து குவிக்கச் செய்யும். ஆகவே எமது தமிழ் சூழலில் உருவாகும எழுத்துகள், கட்டுரைகள், ஆய்வுகள் யாவும் சமூகத்தை விளங்கவும் விளக்கவும் கூடிய ஆக்கங்களாக உருவாக வேண்டும்.

கல்விக்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவை நுண்ணாய்வுக்கு உட்படுத்தும் பண்புகள் இல்லாமல் போகின்றன. இதனால் பொருத்தமான சந்தப்பத்தில் வெளிப்படுத்த வேண்டிய கருத்துகள் விமரிசனங்கள் மற்றும் மாற்றுப் பார்வைகள் ஆகியன வெளிப்படாது உயிர்ப்பற்ற வெறுச் சொற்களின் குவியல்கள் குவிக்கப் படுகின்றன. இவற்றின் நிழல்களில் மறைந்து ஒதுங்கும் கல்விச் சமூகமே கல்வியியலாளர்களாக உலா வருகின்றனர்.

'கல்விச்சமூகவியல்', 'கல்வியும்சமூகவியலும்' முதலான எண்ணக்கருக்கள் நமக்கு அறிமுகமாகி உள்ளன. இவற்றைப் பாட அலகுகள் மட்டத்திலாவது நாம் புரிந்து வைத்துள்ளோம். ஆனால் இந்த அறிவுத் தொகுதிகள் மூலம் நமக்கு கையளிக்கப்பட்டுள்ள அறிகைமரபு 'தமிழ் சூழலின் சமகால இருப்பு', 'கல்வி சார் பிரச்சினைகள்', 'கல்விவழியாக சமூகநீதியை நிலைநாட்டுதல்', 'கல்வியின் சமூக நோக்கை மீளவலி யுறுத்துதல்' போன்ற விடயங்களை நோக்குவதற்கான கொள்ளளவு போதுமானதாக இல்லை.

எம்மிடையே அறிவுப் பண்பாடு, ஆய்வறிவு மூலதனம், அறிவினாக்கம் முதலானவை பல்பரிமாண வீச்சாக எழுச்சி பெறவில்லை. அப்படி அமைந்திருப்பின் எமது சில நூல்கள் சில கட்டுரைகள் உன்னதமான மாற்றங்களை விசைப்படுத்தும் கருவிகளாக அமைந்திருக்கும். கல்வியில் புதுமைகள் மறுமலர்ச்சியாக உருவாக்கப் பட்டிருக்கும். கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலான 'போரும்வாழ்வும்' தமிழ் மொழிமூலமான கல்வித்துறையில ஏற்படுத்திய பாதிப்புகளை இழப்புகளை தொடர்ச்சியின்மைகளை முழுமையாக ஆராயத்தக்க தற்துணிவு கொண்டவர்கள் தற்போது எமக்கு வேண்டும்.

மாற்று ஏற்பாடுகளை உருவாக்கும் வல்லமை பொருந்திய கல்வியியலாளர்கள் எம்மிடையே உருவாக வேண்டும். உயிர்ப்புமிகு கல்வியியலாளர்கள் கல்வி மேம்பாட்டிலும் சமூக மேம்பாட்டிலும் நம்பிக்கை கொண்டு உழைப்பவர்களாக இருக்க வேண்டும். இத் தகைய தேவ தூதர்களுக்காக சமூகம் காத்துக் கொண்டிருக்கிறது.

தெ.மதுசூதனன்



# தகவலும் அறிவும்

சபா.ஜெயராசா

தகவல் அல்லது அறிபரவல் என்றால் என்ன என்பது பற்றிய இலக்கியங்களிற் பொதுவாக இல்லாதவையும் இடம் பெறாதவையும் தகவல் என்று பொதுவாகக் கூறப்படுகின்றது. இங்கே இலக்கியம் என்ற எண்ணக்கரு ஆக்க இலக்கியங்களை மட்டும் குறித்து நிற்காத பரந்த எழுத்தாக்கப் பொருளுடையதாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால் மேற்கூறிய வரைவிலக்கணம் தகவல் என்ற எண்ணக்கருவை விளக்குவதற்குப் போதுமானதன்று. இந்நிலையிலே வேறுபல வரைவிலக்கணங்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

குறிகளாலும் சைகைகளினாலும் கையளிக்கப்படும கருத்து வடிவங்களே தகவல் என்ற வரைவிலக்கணமும் தரப்படுகின்றது. அந்த வரைவிலக்கணம் மேலும் விரிவுபடுத்தப்படுகின்றது. ஒருவருடைய மனம் இன்னொருவரின் மனத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் குறியீட்டுவழி வகையே தகவல் என்ற கருத்து விரிவாக்கம் இடம் பெற்றுள்ளது. வினைப்படுவதற்கும் தீர்மானங்களை எடுப்பதற்கும் உரியவகையிலே தரவுகளை நிரற்படுத்தி வழங்கும் வடிவமே தகவல் என்ற முன்மொழிவும் உண்டு. ஆனால் தரவு என்பதிலும் மேலான பரிமாணங்களைத் தகவல் கொண்டிருத்தல் மனங்கொள்ளத் தக்கது. அறிவின் பரிமாணங்கள் பலவற்றைத் தகவல் கொண்டிருத்தலை மேற்கூறிய வரைவிலக்கணம் உள்ளடக்கவில்லை.

நடைமுறையிலே தகவல் என்ற எண்ணக்கரு பல நிலைகளிலே பயன்படுத்தப்படுதலை நோக்க வேண்டியுள்ளது. அவ்வகையிலே பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

- தகவற் சமூகம்
- தகவல் தொழில் நுட்பம்
- தகவல் யுகம்
- தகவற் பொருளாதாரம்
- தகவல் முகாமைத்துவம்
- தகவல் இடமாற்றம்
- தகவற் கணக்காய்வு
- தகவற் கோட்பாடு
- தகவல் அரசியல்
- தகவல் மீள்பொதியாக்கல்
- தகவற் களஞ்சியப்படுத்தல்

தகவல் என்பது பல நிலைகளிலே எடுத்தாளப்படும் எண்ணக்கருவாக வளர்ச்சி பெற்று வருதலை மேற்குறித்த தொடர்கள் எடுத்துக்காட்டுகின்றன.

தகவல் பற்றிய ஆய்வில் தகவல் இயற்பியல் அல்லது பௌதிகவியல் முக்கியத்துவம் பெற்று வருகின்றது. தகவல் ஒலி, ஒளி ஊடகங்கள் வழியாகக் கடத்தப்படுகின்றது. அந்நிலையிற் பௌதிகவியற் பண்புகள் முக்கியம் பெறுகின்றது. தூண்டிகள் புலன் உறுப்புக்களால் உள்வாங்கப்பட்டு மூளையிலே காட்சிகள் உருவாக்கப்படுகின்றன.

உலகில் உள்ள எல்லா உயிர்ப் பொருட்களும் உள்ளார்ந்த தகவற் செயற்றொகுதியை உள்ளடக்கி இயங்கிய வண்ணமுள்ளன. அந்நிலையில் மனிதரது உருவாக்கத்துக்கு முன்னரே தகவல் என்ற செயற்பாடு இடம்பெறத் தொடங்கிவிட்டமை உயிரியல் ஆய்வாளர்களாற் சுட்டிக் காட்டப்படுகின்றது. சூரிய வெளிச்சத்தை நோக்கித் தாவரங்கள் திரும்புதலே தகவலை அடிப்படையாகக் கொண்ட வினைப்பாடு என்று அவர்கள் குறிப்பிடுவர்.

தகவல்கள் மூளையில் உள்ள நியூறொனல் (Neuronal) இணைப்புக்களால் தேக்கிவைக்கப் பயன்படுத்தப்படுகின்றன. தகவலை அடிப்படையாகக் கொண்டே அறிவின் உருவாக்கம் நிகழ்கின்றது. புலன்கள் வழியாகத்தகவல்களை உள்வாங்கள் முதலாம் நிலைத்தகவல் ஆக்கம் என்று குறிப்பிடப்படும். மூளையில் உருவாக்கப்பட்ட அனுபவங்களை அடியொற்றித் தகவல்களுக்குப் பொருள் கோடல் கொண்டு விளக்கம் பெறல் இரண்டாம் வழித்தகவல்கள எனப்படும்.

தகவலில் இருந்து நிகழும் படிமலர்ச்சிகள் பின்வருமாறு சுட்டிக்காட்டப்படுகின்றன.

- தகவல்
- அறிவு
- அறிவு ஒளிர்தல்
- ஞானம்

தகவல் மூளைக்குச் சென்றதும் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற முடியும்.

→ முன்புள்ள தகவல்களை நிச்சயப்படுத்தல் அல்லது இரட்டிப் பாக்குதல்.

→ இருப்பில் உள்ள அறிவோடு இணைத்தல்.

→ இருப்பில் உள்ள அறிவைச் செம்மைப்படுத்துதல்

→ புதிய அறிவின் உருவாக்கம் நிகழ்த்தப்படுதல்

தகவலிலிருந்து அறிவு என்ற எண்ணக்கரு படி மலர்ச்சி கொள்கின்றது. தகவல் நிரலாக்கம் செயற்படுத்தப்பட்டு, விளக்கத்தின் வழியாகச் செழுமைப்படுத்தப்பட்டு அறிவாக உருவாக்கம் செய்யப்படுகின்றது. தகவல் அறிவாகாது, ஆனால் அறிவின் உருவாக்கத்துக்குரிய உள்ளிருப்பு ஆகின்றது. எண்ணக்கருவாக்கம் செய்தல், பொதுமைப்படுத்தல், பயன்படுத்தல், பிரச்சினைவிடுவித்தல், தீர்மானித்தல், உறுநேர்வுகளைப் (Facts) பிரதிநிதித்துவம் செய்தல் முதலியவை அறிவின் செயற்பாடுகளாகின்றன.


தெரிவுறல் (Know-How) அறிவின் பரிமாணமாகின்றது. தெரிவுறல் அனுபவத்தின் வழியாகத் திரட்டப்படுகின்றது. முறையான பயிற்சி தெரிவுறலுக்கு இட்டுச் செல்கின்றது.

தகவலை உள்வாங்கிக் கொள்ளல் மூளையின் கிரகிக்கும் ஆற்றலோடு தீர்மானிப்பதிலே பங்கு கொள்கின்றன.

- ⊙ குறிப்பிட்ட பொருள் பற்றிய முன்னறிவு.
- ⊙ சொற்களும், வசனங்களும் எப்பொருள்களைக் குறித்து நிற்கின்றன என்பது பற்றிய விளக்கம்.
- ⊙ தகவல் கையளிக்கப்படும் முறைமை.
- ⊙ கிரகிப்பவரின் உளச்சார்பு
- ⊙ முற்சாய்வுகளும், மனவெழுச்சி நிலைகளும்

தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் கற்றலுக்குரிய அடிப்படையாகின்றது. தகவலைப் பெற்றுக்கொள்ளல் ஓர் உரிமையாகவும் வலியுறுத்தப்படுகின்றது. கற்றலும் ஆய்வு செய்தலும், தகவலைத் தொடர்பாடலுக்கு உட்படுத்தலும் உரிமைகளாகக் கொள்ளப்படுகின்றன.

கல்வியின் சமகாலத்தைய நோக்கங்கள் தொடர்பாடலோடும் தகவலோடும் இணைத்துக் கூறப்படுகின்றன. தாய்மொழியிலும் பிறமொழிகளிலும் வினைத்திறன் கொண்ட தொடர்பாடலை மேற்கொள்ளல், பொது அறிவுத் தகவல்களை அறிந்து கொள்ளல், புதியதகவல்களை அறிந்து கொள்வதில் விருப்பம் காட்டுதல், மரபு வழிகளிலும், நவீன வழிகளிலும் தகவல்களைத் திரட்டிக் கொள்ளல், தகவல்களைப் புதுப்பித்துப் பகிர்தல், தகவலின் தரஉறுதிபாட்டை அறிந்து கொள்ளல், சமூக நோக்கில் அவற்றைப் பயன்படுத்துதல் முதலியவை குறித்துரைக்கப்படுகின்றன.



சமூக மாற்றத்துக்குரிய கருவிகளுள் ஒன்றாகத் தகவல் அமைகின்றது. ஒடுக்கப்பட்டவர்களின் எழுச்சிக்கும் வலுவூட்டலுக்கும் தகவல் முக்கியமானது. நவீன கோளமயச் சூழலும், எண்மப் புரட்சியும் தகவல் நுகர்ச்சியை அதிகரிக்கச் செய்து வருகின்றது.

கார்ல் பொப்பர் அறிவுக்கும் (Knowledge) அறிதலுக்கும் (Knowing) இடையே வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றார். தனிமனித அகவயப்பாங்கினை அடியொற்றியே மரபு வழியான 'அறிவு' விளக்கப்பட்டது. தனிமனித உணர்வுவையும் ஆய்வறிவு சார்ந்த புலத்தையும் (Intellectual Foield) வேறுபடுத்தி நோக்குதல் முக்கியமானது. ஆய்வறிவுப்புலத்தை தனியாள் அறிவு என்ற வரையறைக்குள் சுருக்கிவிட முடியாது. சமூக இருப்பே ஆய்வறிவுப்புலத்தையும் தனியாள் அறிவையும் தீர்மானிப்பதிலே அடிப்படையாகின்றது.

தனிமனித அறிவு ஆய்வறிவு சார்ந்த அறிவும் சமூகத்தாற் கட்டுமை செய்யப்படுகின்றன. சமூகச் செயல் முறையோடும் வரலாற்று வளர்ச்சியோடும் அறிவு திரட்டப்படுகின்றது. கல்வியும் தொடர்பாடலும் சமூக மயமாக்கலை முன்னெடுத்த வண்ணமுள்ளன. சமூக ஒழுங்கமைப் போடும் சமூக அடுக்கமைப்போடும் அவை இணைந்துள்ளன.

சமூகம் பல்வேறு நிலைகளிலே மனிதத் தொடர்பாடலையும் அறிவுக் கையளிப்பையும் தூண்டல்களை ஏற்படுத்தும் தூண்டிகளாக அமைய முடியும். சமூக இயக்கத்தில் தூண்டலும், தூண்டற் பேறுகளும் முக்கியம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. அவ்வாறான தொடர்பாடலும் துலங்கலும் கூட்டுறவை வளர்க்கலாம் அல்லது முரண்பாடுகளை வளர்க்கலாம். பொதுவான இலக்கை நோக்கிய தொடர்பாடல் கூட்டுறவை வளர்க்கும். இலக்குகள் முரண்படும் பொழுது முரண்பாடுகள் எழும்.

எளிமையான பூர்விக சமூகங்கள் எளிதில் மாற்றங்களை விரும்பமாட்டா என்றும் சிக்கலான சமூகங்களிலே மாற்றங்கள் எளிதாக நிகழும் என்றும் மானிட-

வியலிலே ஒரு கருத்து முன்வைக்கப்படுகின்றது. சிக்கலான சமூகங்களிலே தொடர்பாடற் செயல்முறையும் அறிவுக் கையளிப்பும் சிக்கலான இயல்புகளைக் கொண்டிருக்கும். சிக்கலான சமூகங்களிலே மாற்றத்துக்குரிய உட்கட்டுப்(Inbuilt) பொறி முறைமை காணப்படும். மாற்றத்துக்குரிய உட்கட்டுப் பொறி முறையை ஆக்கும் கருத்தேற்றத்தை (Indoctrination) உட்கொண்ட தொடர்பாடலாலும் கல்வியாலும் உருவாக்கப்படுகின்றன.

தொடர்பாடல் இடைவினைகள் நுண்பாக நிலையிலும் பெறுகின்றன. குடும்பம், இணைந்த குழு, வகுப்பறை, தொழில் புரியும் அலகு முதலியவற்றிலே நுண்பாக நிலைத் தொடர்பாடல் இடம் பெறுகின்றது. வெகுசன ஊடகங்கள் பருநிலைத் தொடர் பாடலை முன்னெடுக்கின்றன. பருநிலையின் கருத்தேற்றப்பலம் வலிமையானதாகவும், தீவிர விளைவுகள் (Effects) தழுவியதாகவும் காணப்படும். அவற்றின் பின்னணியிலே பெரும் முதலாளியத்தின் கரங்கள் இயங்கிய வண்ணமிருக்கும்.

சமூக மாற்றமானது தொடரும் மாற்றம் என்றும் தொங்கும் மாற்றம் என்றும் எழுந்து வீழ்ச்சியடையும் மற்றும் என்றும் மூன்று வகைப்படும். தொடரும் மாற்றம் திரண்டெழுமாற்றம் (Cumulative Change) என்றும் குறிப்பிடும். சோசலிச நிலைப்பட்ட தொடர்பாடலும் அறிவும் இவ்வாறான மாற்றத்தையே (சமூக அடுக்கமைப்பைக் குலைத்த பின்னர்) வேண்டி நிற்கின்றன.

முதலாளிய சிந்தனைகள் வழியாக உருவாக்கப்படும் மாற்றங்கள் எழுந்து இடை நடுவில் நின்றுவிடும் "தொங்கும்" மாற்றங்களாகவும், எழுந்து வீழ்ச்சியடையும் மாற்றங்களாகவும் அமையும். அண்மைக்காலத்தில முதலாளிய நாடுகளில் அனுபவிக்கப்படும் பொருண்மியப் பின்னடைவு அக்கருத்தை நன்கு வெளிப்படுத்தும்.

அறிவும் தகவலும் பற்றிய ஆய்வுகள் நவீன கல்விச் செயன் முறையை வினைத்திறன்படுத்துவதற்குப் பல வழிகளிலும் பலபரிமாணங்களிலும் துணை நிற்கும்.

| மரபுவழிக் கல்வி | வாழ்க்கை நீடித்த கல்வி |
|---|---|
| 1. ஆசிரியரே அறிவின் மூலாதாரம் | 1. ஆசிரியர்கள் கற்றல் வளங்களுக்கு வழிகாட்டுபவர்கள் |
| 2. மாணவர்கள் ஆசிரியரிடமிருந்து அறிவைப் பெறுகின்றனர். | 2. செய்து பார்த்துக் கற்பர் |
| 3. மாணவர்கள் தாமே பணியாற்றுகின்றனர். மற்றவரிடமிருந்து கற்பர். | 3. மாணவர் குழுக்களாகக் கற்பர், ஒருவர் |
| 4. மாணவர்கள் ஒரு தொகுதி திறன்களை கற்ற பின்னரே பரீட்சை. அதன் பின்னரே அடுத்த கற்றல் கட்டம் | 4. கற்றல் உபாயங்களுக்கு வழிகாட்டக்கணிப்பீடு பயன்படுத்தப்படும் எதிர்காலக் கற்றல் மார்க்கங்களை அவை காட்டும். |
| 5. சகல மாணவர்களும் ஒரே பணியில் ஈடுபடல். | 5. மாணவர்கள் கற்பதற்கான தனிப்பட்ட திட்டங்களை ஆசிரியர்கள் விருத்தி செய்வர். |
| 6. ஆசிரியர்கள் ஆரம்பப் பயிற்சியையும் பின்னர் அவ்வப்போது சேவை காலப் பயிற்சியையும் பெறுவர். | 6. ஆசிரியர்கள் வாழ் நாள் முழுவதும் கற்பவர்கள். அதனுடன் தொழிற் தகைமை விருத்தி தொடர்படுத்தப்படும் |
| 7. நன்றாகப் கற்பவர்கள் இனங்காணப்பட்டு தொடர்ந்து கற்க அனுமதிக்கப்படுவர். | 7. மாணவர்கள் வாழ்நாள் முழுவதும் கற்கும் வாய்ப்புகளை பெறுவர். |

(பேரா.சோ.சந்திரசேகரன், "சமகால கல்வி முறைகள் ஒரு விரிநிலை நோக்கு" பக்:119)



# தொடர் - தொடர்பியல்: பயன்நிலைகள் - வகுப்பறை மட்ட நோக்கு

ப.இராஜேஸ்வரன்

புதிய சகத்திரத்தின் கலைத்திட்ட அறிமுகத்தில் ஆளிடை திறன், சமூக திறன், திறன் தகவு நிலைகளை எய்துதல் என்பன முக்கியம் பெற்றுள்ளன. இதைவிட, தொடர்பாடல் மற்றும் ஊடக கற்கை சார்ந்த அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி நிலைகள், பயன்பாட்டு பரிமாணங்கள் என்பனவும் வலியுறுத்தப்படும் அம்சங்களாக உள்ளன. அறிகை சார்ந்த மாற்றங்களை உருவாக்குதில் தொடர்பு சார்ந்த ஊடகங்களும் கணிசமான பங்கு வகிக்கின்றன. இக்கட்டுரை வகுப்பறை மட்ட அறிக்கை சார்ந்த விருத்தி நிலையை அடிப்படையாக கொண்டதும் அவற்றுடன் தொடர்புடையதுமான தொடர்பு எண்ணக்கருக்கள், அவற்றின் பரிமாணங்கள் பற்றியும், தொடர்பு ஊடகங்கள் அறிகை மாற்றத்துக்கான கற்றல் ஊடகமாகவும், கற்பித்தல் குவிக்கின்றது இதைவிட தொடர்பு ஊடகப் பயன்பாடுகள் பற்றியும், கருவிகளின் தெரிவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள், வகைப்பாடுகள், பொருத்தப்பாடுகள் பற்றிய கருத்தாடல்களை ஆராய்வு ரீதியில் முன்வைப்பதாகவுள்ளது.

வாரன் லீவர் என்பவர் "ஒருவரின் அறிவு இன்னொருவரின் அறிவை பாதிக்கும் அல்லது மாற்றியமைக்கும் வலுவை தொடர்பு" என்று குறிப்பிடுகின்றார். மார்டின் பின் ஆன்டர்சன்; "சூழலுக்கு ஏற்ப எப்போதும் மாறிக் கொண்டேயிருக்கும் பிறரை நாம் புரிந்து கொள்ளும் செயன்முறையே தொடர்பு" என்கின்றார். பூருக்கர்; "கருத்துப் பரிமாற்றத்தை தொடர்பு" என்றும், ஒருவர் இன்னொருவருக்கு பொருள் உள்ள செய்திகளைத் தருவது" என்றும் குறிப்பிடுகின்றார். தொடர்பு பற்றி மேற் கூறப்பட்ட கூற்றுக்கள் அறிகை செயலுடன் அதாவது கற்றல செயற்பாட்டுடன் இணைவுபட்ட தன்மையினை எடுத்துக்காட்டுகின்றது.

அறிகை செயற்பாட்டுக்கு" தொடர்பு சார் திறன் தகவுகள்" அடிப்படையாகின்றன. தேடலுக்கான நுழைவாகவே தொடர்பு நிலைகள் முக்கியம் பெறுகின்றன. கல்வியின் தொலைநோக்குப் பார்வையில் தொடர்பு சார் எண்ணக் கருக்கள் உணர்த்தப்பட்டுள்ளமையும் அவதானிக்க முடிகின்றன.

நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த அறிகை அதாவது அறிவு அடிப்படையான காரணியாக அமைவது போல் தொடர்புசார் திறன் தகவுநிலைகளும் நடத்தைய மாற்றுவதிலும், தூண்டலை மேற்கொள்வதிலும் அதிக வகிபங்கை நேடியாகவும், மறைமுகமாகவும் ஆற்றுகின்றன. தொடர்புத் திறன் மேல் எழுகை நிலமைகள் அறிவராய்ச்சிப் பரப்பில் பல மாற்றங்களை உடனடியாகவும், நீண்டகால அடிப்படையிலும் ஏற்படுத்தும். நாம் அறிவுலகத்தை கையாளவும், அறிவுசார் பொருளாதார நிலமைகளை எதிர்கொள்வதற்கான தகைசார் நிலைகளை விரிவடையச் செய்வதிலும் முக்கிய வகிபங்கை "தொடர்பு எண்ணக்கரு" வகிக்கின்றது.

சககாலத்தில் தொடர்பாடல் திறன் தகவு நிலைகள எல்லாத் துறைகளிலும் நுழைந்துள்ளன. உணர்வுகளை, எண்ணங்களை, அனுபவங்களை தெரியப்படுத்தல் அல்லது அறிவித்தல் என்பதாக தொடர்பாடலுக்கு பொருள் கொள்ளப்படுகிறது. இது தனியாளிடையேயும் இரு நபர்களிடையேயும், மக்கள் கூட்டத்தினிடையேயும் பரஸ்பரம் இடம்பெறலாம். உயிரிகளிடையே உணர்வுகள், எண்ணங்கள், அனுபங்கள், தேவைகள் அறிவிக்கப்படுகின்றன. பிறிதொருவருக்கு தகவலை கொடுப்பதற்கும் தெரிவிப்பதற்கும், பெறுவதற்கும் பயன்படும் ஒரு குறியீட்டு வடிவம் என்றும் இதைக் குறிப்பிட முடியும்.

தொடர்பு செயன்முறை மனிதரிடம் மட்டுமன்றி விலங்குகளிடத்திலும் ஏற்படுகின்றன. சிந்தனையாற்றலுடைய மனிதனின் தொடர்பு நிலைகள் கருவிகளின பயன்நிலைகளினாலும், தொழில்நுட்ப அறிமுகங்களினாலும் பல்வேறு மாற்றங்களை தொடர்பு நிலையில் ஏற்படுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது.

எட்வர்ட்சாபிர் (1935); "எந்தவித கருவிகளின் குறுக்கீடு இன்றி மக்கள் இயல்பாக சொற்களாலோ, குறியீடுகளாலோ, மெய்ப்பாட்டினாலோ பரிமாறிக் கொள்ளும் தகவல்களையே தகவல்கள் என்றும், கருவிகளின் உதவியோடு குறிப்பிட்ட வழிமுறைகளில தகவல்கள் பரிமாறிக்கொள்ளும் நிலையையும் கருவி வழிப்பட்ட தகவல்கள்" என்றும் இதைக் குறிப்பிடுகிறார்.

தொடர்பாடலில் கருத்துக்கள், எண்ணங்கள், உணர்வுகள், செய்திகள் யாவும் ஒருவர் வெளிப்படுத்த மற்றவர் பெற்றுக்கொள்ளும் செயற்பாடு இடம்பெறுகின்றது. ஒருவிடயத்தை பொதுமைப்படுத்தி அதனை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் பகிர்தல் என்பதன் மூலம் கருத்துப்பரிமாற்றம் செயற்படுத்-

தப்பட்டு பொது வடிவம் உருவாக்கப்படுகின்றது. குறியீடு, பேச்சு, எழுத்து, படம், எண்விளக்கம், வரைபடம், ஊடாக தொடர்பு நிலைகளை பரவலாக்கம் செய்ய முடியும். குறியீட்டு நிலைகள் உடலசைவாகவோ, படமாகவோ, சொற்களாவோ, ஆற்றுகை நிகழ்ச்சியாகவோ அமையலாம். மறந்து போன விடயத்தை ஒருவரிடம் மீள ஞாபகப்படுத்தும் வகையிலான செயன்முறை கூட தொடர்பு செயன்முறையாக இடம் பெறலாம்.

எச்.இ. கல்லி என்பவர் "Communication" என்ற பதத்திற்கு "பொதுமையாக்கல்" என்பது நேர் பொருள் என்றும், பெறுநருடைய மனதில் அனுப்புநரின் கருத்து படிமத்தை உருவாக்குதல் என்றும் குறிப்பிடுவார். லீகன் என்பவர், இருவரோ இருவருக்கு மேற்பட்டவரோ ஒரு செய்தியின் பொதுமைக் கருத்தை பகிர்ந்து கொள்ளும் முறையில் எண்ணங்களையோ, உணர்வுகளையோ பரிமாறிக் கொள்ளும் தன்மை தொடர்பு என்கிறார்.

ஆக தொடர்பாடல் செயன்முறை இடம் பெறுவதற்கு பின்வரும் மூன்று அம்சங்கள் அவசியமாகின்றன.

- தகவல்
- தகவல் அனுப்புதலும், பெறுதலும்
- தகவலை அனுப்பும் ஊடகம்

தொடர்பு நிலையில் தகவல் என்பது மிக அடிப்படையானது. அதற்கு அடுத்த நிலையில் தகவலை அனுப்பவும் பெறுவதற்கும் உகந்த சூழ்நிலை அவசியமாகின்றது. இதற்கு ஓர் மார்க்கமாகவே அதாவது வழிமுறையாகவே ஊடகம் தேவைப்படுகின்றது. ஊடகவழி மூலமான தொடர்நிலைகள் தனியாளிடையேயும், மக்கள் கூடத்தினரிடையேயும் வளர்ச்சி பெற்றுள்ளதைக் காண முடிகின்றது.

ஆரம்ப மனிதவரலாற்று நிலையில் பேச்சுமொழி, எழுத்து மொழி மூலமான தொடர்பாடலும் மற்றும் முன் ஒலி எழுப்புதல், உடல்மொழி அதாவது சைகை முயற்சிகளே முதன்மைப்படுத்தப்பட்டு இருந்தன. இவை பொதுவானவை. ஆனால் இவற்றை புரிதல் என்பது அறிவுசார் செயற்பாட்டுடன் தொடர்புபட்டதாக அமைகிறது. அறிவுவிருத்தி தேர்ச்சிநிலைகளின் ஒரு கூறாகவே தொடர்பாடல் திறன் குறிப்பிடப்பட்டுள்ளது. கற்றல் நீடித்த கருவிகள் என அழைக்கப்படும் கணிப்பீட்டு நியதிகளிலும், கருவிகளிலும், தேர்ச்சிகளிலும் தொடர்பு நிலைமாற்றம் முதன்மைப்படுத்தப்படுகின்றது.

தொடர்புநிலைத் திறன் விருத்தியில் குறிப்பாக சிறு பிள்ளைகளில் உடல், முக அசைவு முக்கியமாகின்றன. ஆரம்பநிலையில் உற்று நோக்கல், சத்தம் வந்த திசை நோக்கி திருப்புதல் அடிப்படைச் செயற்பாடுகளாக உள்ளன. பின்னர் கண்வழித் தொடர்பாடல் ஊடாக கவனத்துடன் அவதானித்தல், உணர்வு நிலைக்கு உட்பட்ட ரீதியான அவதானிப்புக்கள் போன்றவை இடம் பெறுகின்றன.



| வயது | தொடர்பு செயல்முறை |
|---|---|
| இரண்டுமாதம் | கவிழ்ந்துபடுத்து கைகளை அழுத்தி உயர்த்துதல் |
| மூன்று | பொருட்களை பற்றி பிடித்து, நழுவவிடுதல் |
| நான்கு | பிறர் உதவியுடன் இருத்தல் |
| ஆறு | அசையும் பொருட்களை பற்றி பிடித்தல் |
| ஏழு | பிறர் உதவி இன்றி நிமிர்ந்து இருத்தல் |
| எட்டு | பிறர் உதவியுடன் எழுந்து நிற்றல் |
| ஒன்பது | தளபாடத்தை பிடித்து எழுந்து நிற்றல் |
| பத்து | சுயமாக தவழுதல் |
| பதினொன்று | பிறர் உதவியுடன் நடத்தல் |
| பதின்மூன்று | தனித்து நடத்தல் |
| பதினாறு | தடி பயன்படுத்தி பொருட்களை எடுத்தல் |

(மூலம் :- சபா ஜெயராசா, குழந்தை உளவியல்)

மேற்காட்டப்பட்ட தகவல் பிள்ளையினுடைய உடல் சார் தொடர்பாடல் விருத்தி நிலைகளை கால வயதுடன் ஒப்பீடு செய்து விளக்குவனவாக உள்ளது.

மொழிசார்ந்த தொடர்பு நிலைகளை பொறுத்தமட்டில் அறிவுசார்ந்த நிலைகளினூடான விருத்தி நிலைகளையே காணமுடிகின்றது. மனித மூளையமைப்பினுள் முறைசார்ந்தும், முறைசாராத வகையிலும் மொழிசார் விருத்திநிலைகள் உள்வாங்கிக் கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகிறது. மொழி

விருத்தியில் சூழல் காரணிகளும் கணிசமான அளவு செல்வாக்குச் செலுத்துகின்றமையை சுட்டிக் காட்ட முடியும்.


பிள்ளையின் அடிப்படை மொழிசார் தொடர்பு நிலைகளில் உணர்ச்சிவயப்பட்ட இயல்பு நிலை, தொலைப்பன்னி பண்பு அதாவது சுருக்கி கூறும் தன்மை, பொதுமைப்படுத்திக் கூறும் இயல்பு, வினா எழுப்பும் நிலை போன்றவைகளை அவதானிக்க முடியும். இந்நிலைமைகள் படிப்படியாக விருத்தியடைந்து இரண்டு - ஆறுவயதுக்கு இடையில் அதிக படைப்பாற்றல் மற்றும் கற்பனைத்திறன், சொற்களை இணைக்கும் வள ஆற்றல் கொண்டதாகவும் உருப்பெறும். ஆறு வயதுக்கு பின் இந்நிலைமைகளில் மாற்றம் பெற்று வளர்ந்தோரின் பேச்சுத் தொடர்பாடலைப் பின்பற்ற தொடங்கும்.

தொடர்பு தகவு நிலையில் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் தன்மையும், அதற்கான சமூகமயத்திறன்களும் அவசியமாகின்றன. உறவுகளை அதாவது தொடர்புகளை கட்டியெழுப்புதல் நீடித்த காலத்துக்கு தொடர்ச்சியாக பேணுதல், தொடர்பு கொள்ள ஊக்குவித்தல் என்பனவும் வலுவான எண்ணக்கருக்களாக இங்கு உள்ளன. இதில் தொடர்பு கொள்பவர், செவிமடுப்பவர் ஆகிய இருநபர்கள் முக்கியம் பெறுகின்றனர். இதனால்,

- உணர்வுபூர்வமாக செவிமடுத்தல்
- தெளிவாகப் பேசுதல்
- கூறப்படும் விடயங்களை ஆக்கபூர்வமாக அதாவது நேர்மயமாக பெற்றுக்கொள்ளுதல்
- விடயங்களை தெளிவாக நினைவுறுத்திக் கொள்ளும் வகையில் உருவகித்தல்.
- சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு மாற்று தீர்வுகளை முன்வைக்கத் தூண்டுதல்
- விருப்புணர்வுக்கும் மாற்று வழிக்கும் சந்தப்பம் வழங்குதல்.
- இணைக்கப்பாட்டு நிலைக்கு அல்லது உடன்பாட்டு நிலைக்கு வழிவகுத்தல்.

யாவும் முக்கியமாகின்றன. பொதுவில் இந்நிலைகளுக்குப்பட்ட தொடர்புத்திறன்கள் சமூக மயப்பட்டதும், ஆரோக்கியநிலைக்கு உட்பட்டதாகவும், அறிவுசார் விருத்தி நிலைகளுக்கு வழிவகுப்பதாகவும் கொள்ள முடியும். இவற்றுக்கு ஏற்பவே பிள்ளைகளுக்கு ஆரம்ப பிள்ளை பருவ நிலையில் இருந்தே அடிப்படை மொழிசார் திறன்களை உள்வாங்கவும், செவிமடுக்கவும், வாய்ப்புக்களை பாடசாலை, வீடு, சமூகச்செயற்பாடுகளில் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

தகவல் தொடர்பு நிலைக்கு உணர்வு பூர்வமாக செவிமடுத்தல் என்பது அடிப்படையானது. எவ்வித தடைகளும் இன்றி பேசுபவரின் கருத்தையும்,



உணர்வுகளையும் உள்வாங்குவதை இது குறிக்கும். இதன் மூலம் கருத்தை முன்வைப்பவர் சுமுகமான முறையில் தொடர்பை கட்டியெழுப்ப வாய்ப்பு ஏற்படுகிறது. உணர்வுபூர்வமான செவிமடுத்தலில் விடயங்களை கிரகித்தல், சொல்பவர் பக்கமே கேட்பவரின் முழுக் கவனமும் இருத்தல், கருத்தை கூறுபவரின் நிலைக்கு கேட்பவர் உட்படுதல் (ஒத்துணர்வு) பேசுபவரை ஊக்கப்படுத்தல், பேசுபவரின் செயற்பாடு ஏதேனும் காரணத்தினால் இடைநிறுத்தப்படின் அவர் கூறிய கருத்தை சுருக்கி தொகுத்தளித்தல், சிறிய கருத்தையும் உணர்வையும் சேர்த்துக் கொள்ளல், ஒத்துக் செல்லும் விடயங்களை குறித்துக் கொள்ளல் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

நேர்மய தொடர்பு நிலையிலும், ஆரோக்கிய தொடர்பு இயங்கு நிலைக்கும் உரிய விடயத்தை தெளிவாக கூறுதல் என்பதுவும், நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மற்றவரை பொறுப்புக்காட்டி கருத்தை முன்வைக்காது தன்னுடைய சுய கருத்து என்ற நிலையில் முன்வைத்தல் என்பதுவும் வலுவுடையதாகக் கூறப்படும் விடயங்களை நேர்மயமாகவும் ஆக்கபூர்வமாகவும் பெற்றுக்கொள்ளுதல், நேரடியாக கருத்தைக் கூறுதல், புறம் கூறும் தன்மையைத் தவிர்த்தல் முதலானவை ஆரோக்கியமான தொடர்பு நிலைகளை உருவாக்கும்.

உயிரின் தொடர்பு முறை செயற்பாட்டில் விடயங்களை பலவிதமாக கூறுதல், நிலைமையை திரிபுபடுத்தி பிறிதொரு வகையில் முன்வைத்தல் ஆரோக்கியமன்று. தீர்வு நோக்கிய வகையிலான மீள உருவகித்தல், அபிப்பிராயங்களை அறிந்து தொடர்பை உருவாக்குதல், பிரச்சினைக்கு தீர்வு காணும் அணுகுமுறையை முன்வைத்தல் என்பன வரவேற்கப்படுகின்றன. தொடர்பை தொடர்ச்சியாக பேணுதல் என்பது தொடர்பாளர்களை பொறுத்தது. முரண் நிலை உருவாகின் அதற்கான மாற்றுவழிகள் பற்றியும் சிந்திக்க வேண்டும். அதன் மூலம் உடன்பாடானதும், ஒத்துக் கொள்ளக்கூடியதுமான தீர்வுக்கு நகரமுடியும். இதன் மூலம் தொடர்பு வலுப்பெறும்.

- ஒரு பொதுவான புரிந்துணர்வுக்கு ஏற்ற வகையில் தகவலை விளக்குதல்

- அத் தகவலை சரியென்றாக்குதலும், அதன்படி ஒழுக வைத்தல் இந்தச் சிந்தனைகள் அபிவிருத்தி தொடர்பியலின் எண்ணவாக்கங்களாக சுட்டிக் காட்டப்படுகின்றன. தொடர்பியல் எண்ணக்கரு மனித மூளையமைப்புடன் செயன்முறைக்குட்படுத்தப்படுகின்றன. இதன் படிமுறை ஒழுங்கு தனிமனிதன், சமூகம என்ற அடிப்படையில் ஏற்படுவதாக குறிப்பிடப்படுகின்றன.


| | | |
|---|---|---|
| படி 1 | - | விழிப்புணர்வு |
| படி 2 | - | விருப்பம் |
| படி 3 | - | மதிப்பிடல் |
| படி 4 | - | முயன்றுபார்த்தல் |
| படி 5 | - | உள்வாங்குதல் |

இவற்றினூடான தொடர்பு நிலைகளில் பெறப்படும் தகவல் சாதகமாகவோ அல்லது நிராகரிக்கப்படவோ, விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படவோ பல சந்தர்ப்பங்கள உள்ளன.

தொடர்பு நிலையில் கருவிகள் அதாவது ஊடகங்கள் என்பனவும், அவற்றின் பயன்பாடுகளும் முக்கியமானவையாக காணப்படுகின்றன. அடிப்படை தகவல் செயன்முறைப் பரிமாற்றத்தை விடுத்து மக்கள்மயப்பட்ட தொடர்பு நிலைகளிலும், குழுசார்ந்த தொடர்பு நிலைகளிலும் தொடர்பு நிலைகளை மேலும் வினைத்திறனாக்கவும் விளைதிறனுள்ளதாக்கவும் தொடர்புக் கருவிகள் அதாவது தொடர்பு ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

கருவிகளை கையாட்சி செய்வது தொடர்பியல் திறன்வயப்பட்டதாக அமைகின்றது. இத்தகைய பின்னணியில் பிள்ளைகளிடத்தில் அறிகை விருத்தி மற்றும் தொடர்பியல் வழியான விருத்திநிலைகளை உருவாக்குவதற்கு தொடர்புக் கருவிகளை கையாட்சி செய்தவற்கும், அவற்றை பாராளமயப்படுத்துவதற்கும் சந்தப்பங்களை கொடுத்தல் முக்கியமாகின்றது.


தனிநபர் மற்றும் சமூகத்துடனான தொடர்பு கருவிகளின் இடைவினையின் போது தனிநபர் சார்ந்த



உளவியல் மற்றும் சூழல் காரணிகளும், சமூக இயங்கு நிலை கட்டமைப்புப் பின்னணிகளும், தொடர்பு ஊடகங்களின் பொறிமுறை, நுட்பவியலும் முக்கியம் இவற்றின் செல்வாக்குகளையும் பரவலாக அவதானிக்கலாம். இவற்றை பொறுத்தே தொடர்பு ஊடகங்களின் பணிநிலைகள், இயங்காற்றல் தன்மைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

அறிகை விருத்தியில் அதாவது கற்றல் செயன் முறையில் தொடர்பு நிலைகளை கட்டியெழுப்புவதற்கு விசேடமாக வகுப்பறையில் கற்பித்தல் தொடர்பு ஊடகங்களும், கற்பிக்க உதவும் துணைச் சாதனங்களும் பயன்படுத்தப்படுகின்றன. மாணவர்கள் தாமாகவே அறிவை பெறுவதற்கு பயன்படும் தொடர்பு கருவிகள்/ஊடகங்கள் "கற்பித்தல் ஊடகங்கள் என்றும் (புத்தகம், ஒலிநாடா, ஒளிபேழை, வானொலி, தொலைக்காட்சி, கணனி போன்றன) மாணவர் கற்பதற்கு எளிமையாக்கி கொடுக்கும் தொடர்புக் கருவிகள்" கற்பித்தல் துணைச் சாதனங்கள்" (கரும்பலகை, விளக்கஅட்டை, செயலட்டை, படம், மாதிரிகள் போன்றன) என்றும் வரையறுத்துக் கொள்ளலாம்.

கற்றல் - கற்பித்தல் அதாவது அறிகை விருத்தி சார்ந்த தொடர்பு நிலையில் தன்னோடு தான் தொடர்பு கொள்ளுதல், ஏனைய சகபாடிகள், ஆசிரியர்கள், சமூக உறுப்பினர்களுடன், தொடர்பு கொள்ளல் மற்றும் கருவிகளுடனும் தொடர்புகளை விரிவடையச் செய்தல் போன்றவற்றினூடாக தகவல்கள் பரிமாற்றப்படுகின்றன. இதனை வரைப்படம் 01 புலப்படுத்துவதாக அமைகிறது.




(வரைபடம் 1 மூலம் : கட்டுரையாசிரியரின் தயாரிப்பு)

அறிகை விருத்திசார் தொடர்பு ஊடக பயன்பாடு களில் குறிப்பாக வகுப்பறை செயற்பாட்டில் பின்வரும் வகைப்பாட்டில் அமைந்த தொடர்பு உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றமையையும் சுட்டிக்காட்ட முடியும்.

**தொடர்பு ஊடகங்கள்**

| எறிவையில்லாத கருவிகள் | எறிவை கருவிகள் |
|---|---|
| - கரும்பலகை | - மேந்தலை ஏறியி (OHP) |
| - வெண்பலகை | - வழுக்கி எறிவை (Slide) |
| - காந்தப்பலகை | - துரித எறிவை (Digital Presenter) |
| - பக்கப்புரட்டி | - பல்லூடக எறிவை (Multimedia) |

இவை தொடர்புநிலையின் இயங்குதிறனை வினைத்திறனுள்ளதாகவும், அறிகை செயன்முறையில் ஊக்களையும், கவர்ச்சியையும், தெளிவையும், ஆர்வத்தையும், விருப்பத்தையும், செயலூக்கத்தையும் அதிகரிக்கச் செய்யவும் உதவுகின்றன. அறிகை - தொடர்பை வலுவுடைய நிலையில் பேணுவதற்கு கருவிகளின் பயன்பாடு அர்த்தமுள்ளதாக்குகின்றது. இன்று ஊடக கருவி வழிமூலமான அறிகை விருத்தி நிலைகள் E-Learning என்ற அடிப்படையில் விரிவடைந்து வருவதையும் சுட்டிக்காட்ட முடியும்.

அறிகை விருத்தியில் தொடர்புக் கருவிகளின் பயன்பாட்டை பயனுள்ளதாகவும் பொருத்தமுள்ளதாகவும் மாற்றியமைப்பதில் ஆசிரியரின் அணுகுமுறை முக்கிய பங்கு வகிக்கின்றது. மாணவனை தொடர்பு கருவி கையாட்சிக்கு வழிப்படுத்துதல், தெரிவுக்கு உதவுதல் என பல நிலைகளில் உதவமுடியும். அறிவூட்டல், அறிவித்தல், அறிவுறுத்தல், விழிப்புணர்வுடையச் செய்தல் என்ற நிலைகளில் தொடர்பு கருவிகள் அறிகை மேம்பாட்டுக்கு பங்காற்ற முடியும்.

தொடர்பு முறைகளை அறிகை சார்ந்த நிலையில் உருவாக்கிக் கொள்வதிலும், தொடர்புக் கருவிகளை அறிகை சார்ந்த செயற்பாட்டுக்கு பயன்படுத்திக் கொள்வதிலும் பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவை:

- தனியாள் சார்பான அறிவு, திறன், உள நிலைகள்
- பாடசாலையின் சமூகப்பின்னணி
- கட்டுப்பாடுகள் மற்றும் அறிவுறுத்தல்கள்
- ஒழுக்க நியதிகள்
- ஊக்கநிலைக்குட்பட்ட காரணிகளும் வாய்ப்புக்களும்
- ஆசிரியரின் ஆளுமையும், அணுகுமுறைகளும்
- செலவு (மூலதனம், நடைமுறைச்செலவு)
- கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்
- நடைமுறை சிக்கல்கள் (பயிற்சி, பராமரிப்பு நேரம்)
- பாடப் பொருளுடன் தொடர்புபட்ட பயன்பாட்டு நிலைகள்.

மேற்குறித்த அம்சங்களை கல்வியியலாளர்களும் தொடர்பியலாளர்களும் பலவாறு விளக்குகின்றனர்.

பிள்ளையின் அல்லது உயிரியின் அறிகைக் கட்டுருவாக்க அபிவிருத்தி நிலைகளுக்கு தகவல்களை உள்வாங்குதல் பரிமாற்றிக் கொள்ளுதல் என்பது மிகவும் அடிப்படையான செயன்முறையாகவுள்ளது. இதனை தொடர்பு நிலை சார்ந்த பரிமாணங்கள், தொடர்பு ஊடகங்களின் பயன்பாட்டு வசதிவாய்ப்புக்கள் அதிக பங்களிப்பை வழங்குகின்றன. ஆளிடை மற்றும் சமூக தொடர்பு நிலைசார்ந்த திறன் தகவுநிலைகளை தழுவிக் கொள்வதற்கும், பிரயோக செயல்நிலைக்கு உட்படுத்துவதற்கும் தொடர்பியல் எண்ணக்கரு, அவை சார்ந்த அறிகை, திறன், மனப்பாங்கு, பயிற்சி நிலைகள் சமகால தகவல் தொடர்புலகில் அடிப்படையாக அமைவதையும்; அவைசார்ந்த முறைசார்ந்த கலைத்திட்ட உருவாங்கங்கள், கற்கைநெறிகள் தொடர்பு ஊடக வழி மூலமான அறிகை வாய்ப்புக்கள் முக்கியம் பெற்று வருவதையும் அவதானிக்க முடிகின்றது.



# கற்பித்தல் நுட்பமாக செயலடைவுக் கோவை

க. சுவர்ணராஜா

## கற்பித்தல் விருத்திக்கான ஒரு நுட்பமாக செயலடைவுக்கோவை சில குறிப்புக்கள்:

### அறிமுகம்

கற்பித்தல் திறனை சுயமாக விருத்தி செய்து கொள்வதற்கான ஒரு நுட்பமாக இன்று ஆசிரியர் கல்வியிலும், ஆசிரியர் பயிற்சியிலும் செயலடைவுக் கோவைகளின் பயன்பாடு பற்றி கலந்துரையாடப்படுகின்றது.

கற்பித்தல் திறனை சுயமாக விருத்தி செய்து கொள்வற்கான சுயமதிப்பீடு, செயற்றொடர் ஆய்வு, சகபாடி மேற்பார்வை, செயற்றிட்டங்கள் என்ற வரிசையில் எல்லா நுட்பங்களினதும் மூலாதாரமாகச் செயலடைவுக் கோவையைக் குறிப்பிடலாம்.

கற்பித்தல் தொடர்பான தத்துவங்கள், எதிர்பார்ப்புக்கள், பெற்ற அடைவுகள், வெளியீடுகள் இவை தொடர்பான பிரதிபலிப்புக்கள் என்பவற்றை ஒழுங்காக கோவைப்படுத்தி அவற்றைத் தொகுத்து நோக்கி சுயவிமர்சனம் செய்து கொள்வதற்கான ஒரு சிறந்த சந்தப்பத்தினை செயலடைவுக் கோவைகள் தருகின்றன.

ஐக்கிய அமெரிக்க நாட்டின் பாடசாலைகளில் ஆசிரியர்களினது செயலடைவுக் கோவைகளும் மாணவர்களின் செயலடைவுக் கோவைகளும் மிகப் பிரசித்தமான கற்றல் ஆவணமாகவும், ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் தேர்ச்சிகளை கணிப்பீடு செய்வதற்குரிய மூலாதாரமாகவும் விளங்குகின்றன.

இலங்கையில், தேசிய கல்வியியற் கல்லூரிகளின் ஆசிரியர்கல்விச் செயற்பாடுகளில் செயலடைவுக் கோவையை மாணவ ஆசிரியர்கள் பேணுதல் தொடர்பான ஓர் அம்சம் வலியுறுத்தப்படுகின்றது.

மேலும் இலங்கையின் கல்வி சார் பதவி உயர்வுகளுக்கான நேர்காணல்களின் போது செயலடைவுக் கோவைகளுக்கு தனியாக புள்ளி வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

இக்கட்டுரையானது கற்பித்தலுக்கான செயலடைவுக்கோவைகள் தொடர்பாகவும், அதில் உள்ளடங்கப்பட வேண்டிய விடயங்களை தொகுத்து நோக்குவதாகவும் அமைகின்றது.

### செயலடைவுக் கோவைகளின் பொது விம்பம்.

செயலடைவுக் கோவைகளின் பொது விம்பம் அழகியற் துறையிலிருந்தும் நிதி முதலீட்டு துறையிலிருந்தும் ஆரம்பமாகியது எனலாம்.

ஓவியர்கள் தமது பெறுமதிமிக்க ஓவியங்களை தோலிலான பைகளில், அல்லது கோவைகளில் சேகரித்து வைத்திருந்தமை செயலடைவுக் கோவையின் ஓர் ஆரம்பம் எனலாம்.

வேறு பல ஓவியர்கள் தமது ஓவியங்களை மட்டுமன்றி நாம் விரும்பும் வேறு ஓவியர்களின் ஓவியங்களையும், நிழற்படங்களையும் ஓவியங்கள் தொடர்பான கட்டுரைகள், வெளியீடுகள் என்பவற்றையும் தமது கோவைகளில் ஒழுங்குபடுத்தி வைத்திருந்தனர்.

ஓவியர்கள் இவ்வாறு தமது ஓவியங்களையும் ஓவியங்கள் தொடர்பான வேறு பல விடயங்களையும் பின்வரும் நோக்கங்களுக்காக ஒழுங்குபடுத்தி வைத்திருந்தனர். அவையாவன:-

* ஓவியக் கல்லூரிகளில் அனுமதி பெறும் நோக்கில் நேர்காணலில் சமர்ப்பதற்காக
* ஓவியத்துறையில் தமது சான்றுகளை சமர்ப்பித்து வேலை வாய்ப்பு பெறுவதற்காக
* எதிர்காலத்தில் ஓவியம் தொடர்பான கண்காட்சிகளைக் நடத்துவதற்காக, அல்லது ஓவியக் கண் காட்சிகளில் தமது ஓவியங்களைக் காட்சிப்படுத்துவதற்காக என்பவற்றிற்காக அமைந்தது.

நிதி முதலீட்டாளர்கள் பல்வேறு ஆவணங்களை ஒழுங்குபடுத்தி ஒரு கோவையைப் பராமரித்து வந்தனர். நிதி முதலீட்டாளர்களின் கோவையில் பங்குப் பத்திரங்கள், பிணை முறிகள், காப்புறுதிப் பத்திரங்கள், சொத்துப் பத்திரங்கள், பங்குச்சந்தை விபரங்கள், வங்கி வட்டிவீதங்கள் பற்றிய விபரங்கள், தோட்டங்களின் விபரங்கள் என்பன உள்ளடங்கிக் காணப்பட்டன.

இவ்வாறான ஆவணங்கள், சொத்துக்களின் இலாபகரமாக முதலீடு செய்தல், தமது சொத்துக்களை இலா பத்துடன் விற்றல், கையிருப்பிலுள்ள சொத்துக்களின்

பெறுமதியை அறிதல் வேறு நிதி முதலீட்டாளர்களை கவருதல் போன்ற நோக்கங்களைக் கொண்டிருத்தல்.

ஓவியங்களினதும், நிதி முதலீட்டாளர்களினதும் செயலடைவுக் கோவைகளின் உள்ளடக்கமானது பொதுவாக பின்வரும் நோக்கங்களைக் கொண்டிருந்தது. அவையாவன:-

* தமது செயலாற்றுகையை விருத்தி செய்தல், கட்டுப்படுத்தல், விரிவாக்குதல்
* தமது செயலாற்றுகை தொடர்பாக விரிவான சுய மதிப்பீட்டினை பெறுதல்
* தமது ஆக்கங்கள், வெளியீடுகள், சொத்துக்கள் மீது தொடர்ச்சியான பிரதிபலிப்பினைப் பெறல்.
* சேகரிப்பின் ஊடாக தத்தமது துறையில் உயரிய அறிவை விருத்தி செய்து கொள்ளல்.
* தமது செயற்பாடுகளின் சான்றாதாரமாக மற்றவர்களுக்கு வெளிப்படுத்தல், வாடிக்கையாளரை கவருதல்.
* தமது புகழை உயர்த்துதல்

என்பனவாகும்.

**கல்வித்துறையில் செயலடைவுக் கோவைகள்**


கல்வித்துறையில் 1980களின் மத்தியில் செயலடைவுக் கோவைகள் பிரபல்யம் அடையத் தொடங்கின எனலாம். ஆரம்பத்தில் மொழிவிருத்தி தொடர்பான ஒரு நுட்பமான செயலடைவுக் கோவைகள் கைக்கொள்ளப்பட்டன.

மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது கற்பித்தலின் ஒரு பகுதியாக நாட்குறிப்பொன்றினை எழுதுமாறு கேட்கப்பட்டனர். இவ்வாறு ஆசிரியர்கள் தினமும் எழுதும் நாட்குறிப்புக்களை (Journal) ஒரு கோவையில் தொகுத்து வைக்குமாறு பணிக்கப்பட்டனர். மொழி கற்பிக்கும் ஆசிரியர் பணிகள் மொழி கற்பித்தலில் பயன்படுத்திய நுட்பங்கள், மாணவர்களின் மொழித் தேர்ச்சி போன்றவற்றின் விபரங்கள் பதிவு செய்யப்பட்டன.

பின்னர் தொடர்ந்து வந்த காலங்களில் ஆசிரியர்கள் எழுதும் நாட்குறிப்பேடுகளுடன் மாணவர்களின் ஆக்கங்கள், வெளியீடுகள், ஆசிரியர்களின் கற்பித்தல் சாதனங்கள் என்பனவும் இணைக்கப்பட்டு கணிப்பீட்டிற்குள்ளாக்கப்பட்டன.

மொழி கற்பிக்கும் ஆசிரியர்களின் கோவைகள் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் முன்னேற்றத்தை கணிப்பிடும் ஆவணமாகவும், ஆசிரியர்கள் தமது சகபாடிகளுடன் கலந்துரையாடுவதற்கான ஒரு சாதனமாகவும் பயன்படுத்தப்பட்டன.

கோவைகளைப் பராமரிக்கும் நிலையில் ஆசிரியர்கள் கற்றல் - கற்பித்தலில் சுயமாகத் தம்மை நெறிப்படுத்திக் கொள்ள ஆர்வமூட்டப்பட்டனர்.



**கற்பித்தலுக்கான செயலடைவுக் கோவை : வரை விலக்கணம்**

- ஒருவரின் சிறப்பான கற்பித்தலை பிரதி நிதித்துவப்படுத்தும் ஆவணங்கள், குறிப்புக்கள், வெளியீடுகள் என்பனவற்றின் சேகரிப்பாகும். கற்பித்தலில் ஈடுபடும் ஒருவரின் ஆழ்ந்த உணர்வுகளையும், பிரதிபலிப்புக்களையும் வெளிப்படுத்தும் ஓர் ஊடகமாக கற்பித்தலுக்கான செயலடைவுக் கோவைகள் அமைகின்றன.

(Murry - 1994)


- கற்பித்தலுக்கான செயலடைவுக் கோவை என்பது ஒருவர் கற்பித்தலுக்காக எடுத்துக்கொண்ட பிரயத்தனத்தையும், அவர் கற்பித்தல் மூலம் உழைத்துப் பெற்ற உயர் நுண்திறனை சான்றுபகரும் ஓர் ஆவணமாக அமையும். அத்துடன் மிகவும் கவனமாக தெரிவு செய்யப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட விபரங்களையும், கற்பித்தலுக்கான சான்றுகளையும் இது கொண்டிருக்கும்.

(Zubizarreta - 1994)

- கற்பித்தலுக்கான செயலடைவுக் கோவை என்பது கற்பித்தலில் ஈடுபடும் ஒருவரின் தொழில்சார் விவரணமாகும். இது அவரின் தகுதிசார் கற்பித்தல் அடைவுகளையும், கற்பித்தல் தேர்ச்சிகளையும் அடையாளப்படுத்தும். வினைத்திறன்மிகு கற்பித்தலின் விருத்திப்படி நிலைகளை வெளிப்படுத்தும் ஆவணங்களையும் சாதனங்களையும், இது தன்னகத்தே கொண்டிருக்கும்.

(Seldin- 1991)

- மேற்கண்ட விரைவிலக்கணங்களிலிருந்து கற்பித்தலுக்கான செயலடைவுக் கோவை என்பது கற்பித்தல் சார் வலிமைகளையும் பிரதிபலிப்புக்களையும், அதன் விருத்தி நிலைப்படிகளையும் சான்றுபகரும் ஆவணங்களையும், வெளியீடுகளையும் வெளிக்காட்டும் ஒரு தொகுப்பாக கொண்டிருக்கும் ஒரு கோவை எனலாம்.



**செயலடைவுக் கோவையின் உள்ளடக்கம்.**

கற்பித்தலுக்கான செயலடைவுக் கோவையொன்றின் உள்ளடக்கம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கமாக கொண்டிருக்கலாம்.

## 1.0 ஆசிரியர் நம்பிக்கைகள்

ஓர் ஆசிரியர் கொண்டுள்ள வாழ்க்கைத் தத்துவத்தின் அடிப்படையில், அவர் கற்பித்தலுக்காக தெரிவு செய்துள்ள

*1.1.* கல்வித் தத்துவக் கோட்பாடுகள்

*1.2.* கல்விச் சிந்தனைகள்

*1.3.* கல்வி உளவியல் கோட்பாடுகள்

## 2.0 நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பு

நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பு என்பதனுள் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படும்.

*2.1* மாணவர்களின் எதிர்பார்ப்புக்கள் பற்றிய கூற்றுக்கள்

*2.2* உரிய பாடத்தினை/விடயத்தினை கற்பிப்பதற்கான நோக்கங்கள்.

*2.3* பாடத்திட்டம் தொடர்பான பிரதான இலக்குகள்

*2.4* கற்பித்தலில் ஈடுபடுவதற்கான வழிகாட்டல்கள்

*2.5* கணிப்பீட்டுக் கோட்பாடுகள்

*2.6* கற்பித்தலை ஒழுங்குபடுத்தும், ஆசிரியர் வினைத்திறன் பற்றிய கூற்று

*2.7* ஆசிரியர் வகிபாகம் பற்றி எதிர்வு கூறல்கள்.

*2.8* மாணவர் வகிபாகம் பற்றிய முன்னோக்குகள்

*2.9* கற்பிக்கும் விடயத்தை வாழ்க்கை நடைமுறையுடன் இணைக்கும் நுட்பங்கள்.

## 3.0 கற்பித்தல் ஒழுங்கு/கற்பித்தல் முறையியல்

*3.1* வினைத்திறன் மிகு கற்பித்தல் நுட்பங்கள்

*3.2* வினைத்திறன் மிகு பரிச்சயத்திற்கான திட்டமிடல்

*3.3* சிறந்த வகுப்பறை முகாமைத்துவ விதிகள்

*3.4* விடயத்தினை/பாடத்தினை முன்வைக்கும் ஒழுங்கு

*3.5* கற்றல் உளவியல், சமூகவியல் கோட்பாடுகளை கற்பித்தலில் பிரயோகித்துப் பார்ப்பதற்கான சட்டம்

*3.6* தாம் அவதானித்த சிறப்பான கற்பித்தலின் கூறுகள் என்பன கற்பித்தல் ஒழுங்கு என்பதனுள் அடங்கும்.

## 4.0. வாண்மைத்துவ விருத்தி

கற்பித்தலுக்கான செயலடைவுக்கோவையின் வாண்மை விருத்தி என்ற பகுதியினுள் பின்வரும் விடயங்கள் ஒழுங்கமைக்கப்படும்.

*4.1* ஆசிரியர் தனிப்பட்ட ரீதியில் அடைந்த பெறுபேறுகள், அடைவுகள் பற்றிய விபரங்கள்

- மாணவர்களின் கற்றல் விருத்திச் சான்றுகள் கற்றல் வெளியீடுகள்

- ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட கற்பித்தல் சாதனங்கள்
- கணிப்பீட்டுக் கருவிகள்

4.2 ஆசிரியரின் வளர்ச்சி, விருத்தி என்பவற்றை காட்டும் சான்றுகள்

- கற்பித்தலில் மேற்கொண்ட புதுமைகள்,
- கலந்து கொண்ட செயலமர்வுகள், கருத்தரங்குகள், மகாநாடுகள் பெற்றுக்கொண்ட புலமைப்பரிசில்கள் பற்றிய விபரங்கள், அதன் பிரதான அம்சங்கள்.
- அண்மையில் வாசித்த நூல்கள், கட்டுரைகள் பற்றிய விபரக் குறிப்புக்கள்
- நண்பர்களிடமிருந்து சகபாடிகளிடமிருந்து மேற்பார்வை மட்டத்திலிருந்து பெற்றுக் கொண்ட புதிய ஆலோசனைகள் கருத்துக்கள்
- வாண்மை விருத்திக்காக அங்கத்துவம் பெற்றிருக்கும் நிறுவனங்கள் பற்றிய விபரங்கள்
- ஆசிரியர் தமது சேவையை வழங்கும் பிறநிறுவனங்கள், சமூக அமைப்புக்கள் பற்றிய விபரங்கள் என்பனவாகும்.

## 5.0 தனிப்பட்ட அடைவுகள்

ஆசிரியர் தனிப்பட்ட ரீதியில் அடைந்த பெறுபேறுகள் அடைவுகள் பற்றிய விபரங்கள் இங்கு தரப்படலாம்

5.1 வகுப்பறை வீடியோ தூண்டல்கள்
5.2 வெளியிட்ட கையேடுகள்
5.3 வெளியிட்ட நூல்கள்
5.4 ஒற்றுகை வெளிப்பாடு (நடத்திய செயலமர்வுகள் மேடை நிகழ்ச்சிகள்)
5.5 செயற்றிட்டங்கள்
5.6 செயல் தொடர் ஆய்வுகள்/ஆய்வுகள்
5.7 எழுதிய ஆக்கங்கள்/கட்டுரைகள்
5.8 பெற்றுக் கொண்ட பட்டங்கள்
5.9 பெற்றுக் கொண்ட பதவி உயர்வுகள்
5.10 வேறுவிடயங்கள்

## 6.0 செயலடைவுக் கோவையை பராமரிக்கும் ஆசிரியரின் பிரதிபலிப்புக்கள்

6.1 எதிர்நோக்கிய சவால்கள், ஏமாற்றங்கள் மூலம் எழுந்த உணர்வுகள்
6.2 வகுப்பறைகளில் எதிர் நோக்கிய உணர்வு பூர்வமான விடயங்கள்
6.3 மாணவர்களின் பெறுபேற்று பகுப்பாய்வு தொடர்பான உணர்வுகள்
6.4 மேற்பார்வை மடத்திலிருந்து கிடைத்த அறிவுரைகள், ஆலோசனைகள் ஏற்படுத்திய உணர்வுகள்.
6.5 சுயமதிப்பீட்டுப் பகுப்பாய்வு
6.6 மாணவர்களின் பெற்றோர்களுடன் கலந்துரையாடல் மூலம் ஏற்பட்ட உணர்வுகள்
6.7 ஆசிரியர் தம்மை விருத்தியாக்குவதற்கான எதிர்காலத் திட்டங்கள், வினாக்கள்
6.8 எதிர்காலத்தில் பயன்படுத்தவிருக்கும் புதிய நுட்பங்கள், திறன்கள் என்பன இதனுள் அடங்கும்.

கற்பித்தலுக்கான செயலடைவுக் கோவைகளைப் பயன்படுத்துவதால் கற்பித்தலில் ஈடுபடும் ஒருவர் பின் வரும் பிரதான நன்மைகளை அடைகின்றார்கள்.

01. கற்பித்தல் தொடர்பான பிரதிபலிப்புக்கும், சுய மதிப்பீட்டிற்கும் ஒரு சிறந்த சாதனமாக கற்பித்தலுக்கான செயலடைவுக் கோவைகள் அமைகின்றன.

02. கற்பித்தல் தொடர்பான சான்றுகளையும், தேர்ச்சி நிலைகளையும், பெறுபேறுகளையும் ஒழுங்காக கோவைப்படுத்துவதன் மூலம் தமது செயலாற்றுகையை சான்றுப்படுத்துதல் இலகுவாகின்றது.

03. கற்பித்தல் தொடர்பான அறிவு, திறன் மனப்பாங்கு திட்டமிட்ட நிலையில் விருத்தியடைய ஒரு சுய ஊக்குவிப்பு நுட்பமாக அமைகின்றது.

04. கற்பித்தல் அனுபவங்களை மற்றவர்களுடன் பகிரவும், ஏனையோரை வழிப்படுத்தவும் ஒரு பிரதான மூலகமாக அமைகின்றது.

05. கற்பித்தலில் மனநிறைவு அடையவும், உண்மை நிலைகளுடன் தனது வலிமைகளையும் பலவீனங்களையும் பகுப்பாய்வு செய்தவற்கான ஒரு சுய எண்ணக்கரு விருத்தி நுட்பமாக செயலடைவுக் கோவைகள் அமைகின்றன.

06. கற்பித்தலுக்கான செயலடைவுக் கோவைகள் ஆசிரியரின் சுயவாண்மை விருத்திக்கான ஒரு நுட்பமாக அமைகின்றன. அத்துடன் அகத் தூண்டலுக்குரிய ஒரு சாதனமாகவும் விளங்குகின்றன.

சாதாரண செயல்திறனும் செயல்பட ஊக்கமூட்டும் வெகுமதியைத் தரும்வழிகளில் ஆசிரியர்களை உற்சாகப்படுத்தலாம். எனினும் அவர்களது உயர்ந்த பட்ச செயல்திறனை வெளிப்படுத்த அவர்கள் தங்களைத் தாங்களே ஊக்குவித்துக் கொள்ள வேண்டும்.



# செயலடைவுக்கோவை: கணிப்பீட்டிற்கான அணுகுமுறை:

சுப்பிரமணியம் பரமானந்தம்

கோட்பாட்டு ரீதியாகவும், செயன்முறை ரீதியியாகவும் பல்வேறு தேவைகளுக்காக செயலடைவுக் கோவை பயன்படுத்தப்படுகின்றது. எமது கலைத்திட்டத்தில் பொதுவாக கணிய ரீதியாலான கணிப்பீட்டு முறைகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருவதைக் காணலாம். மேலைத்தேய நாடுகளிலும் இவ்வாறானதொரு நிலை காணப்படுகின்ற போதிலும் செயலடைவுக் கோவை பண்புரீதியான மதிப்பீட்டு முறைக்கு ஒரு ஊடகமாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

செயலடைவுக்கோவை என்றால் என்ன என்பது பற்றி அறிஞர்கள் சிலரின் கருத்துக்கள்

குறித்த ஒரு விடயத்தில அல்லது பாடப்பரப்பில் ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட மாணவர்களின் சேகரிப்பு தொடர்பான முயற்சி, செயற்லாற்றுகை அல்லது அடைவாகும். இச்சேகரிப்பில் மாணவர்களின் பங்குபற்றல், தெரிவுக்கான வழிகாட்டல்கள், திறமையை மதிப்பிடுவதற்கான நியதிகள் மாணவர்களின் சுய பிரதிபலிப்புக்கான சான்றாதாரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

(Arter and Spandel, 1992)

குறிக்கப்பட்ட பாடப்பரப்பில் அல்லது விடயத்தில் மாணவரின் அடைவை கூட்டுநிலையியல் கணிப்பீட்டிற்கான ஒரு அதிகபட்ச சான்றாகக் கருத்தப்படுகின்றது. உள்ளடக்கப்பட்ட சான்றுகள் மாணவர்களின் அடைவை விளங்கிக்கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் கொள்ளப்படுகின்றது.

Forster & Masters (1996:2)

மாணவர்களின் கற்றல் அடைவை மதிப்பீடு செய்வதற்காக ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட முறைமை சார்ந்த தகவல் திரட்டு கணிப்பீடு எனக் கொள்ளப்படும். அந்தவகையில் செயலடைவுக் கோவையை கணிப்பீட்டுச் செயன்முறைக்கு பயன்படுத்துவதானது மாணவரின் கற்றல் அடைவை மேம்படுத்துவதற்கும், தேடல்களுக்கும் மாணவர்களின் அடைவு பற்றிய சுய்பிரதிபலிப்பிற்குமான ஆதாரமாக அமைகின்றது. இதிலிருந்து மாணவர் தமது நிலையில் என்ன செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்பதை அறிவதுடன், தனிப்பட்ட ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமைகின்றது.

**1. செயலடைவுக் கோவையை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள்:**

- மாணவரின் விருப்பு நிலை தகவல் சேகரிப்புக்களை உருவாக்குதல்
- மாணவரின் கற்றலில் தரத்தை உள்ளீடு செய்வதற்கான மாற்றீடுகளை தீர்மானித்தல்
- மாணவரின் தனியாள் வேறுபாடுகளை வெளிப்படுத்தல் அல்லது காட்சிப்படுத்தல்
- செயலடைவுக்கோவையில் செயல் முறைகள் மாதிரிகள், நிபணத்துவ வெளிப்படுத்தல்கள் காணப்படுதல்
- கற்போனின் வளர்சியை அல்லது கற்றலை வெளிப்படுத்தலுக்கான ஆதாரங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல்
- கற்றல் செயன்முறை அல்லது ஆக்கமுயற்சியின் ஆவணங்கள் காணப்படுதல்
  - முதன் நிலை பிரதியாக்கம்
  - செயல் மீதான பிரதிபலிப்பு
  - முழுமையான செயல்லொழுங்கின் தடைகள் மீதான பிரதிபலிப்புக்கள் போன்றவை உள்ளடக்கப்பட்டிருத்தல்

**2. கூட்டுநிலை செயலடைவுக்கோவை**
Summative Portfolio

கற்றல் வெயியீடுகளை குறிநிலைப்படுத்துவதற்கான செயன்முறையாக இது கருதப்படுகின்றது. அதாவது அறிவு அல்லது அறிகை, திறன்கள் தொடர்பான மதிப்பீட்டீற்காக அவை அமைக்கப்பட்டிருக்கும்.

மாணவர்களின் திறன்கள் தொடர்பான சான்றாதாரங்களைக் கொண்டிருக்கும்

கற்றல் செயற்பாடுகளை விட கற்றல் அடைவுகளுக்கான சான்றாதாரங்களை அதிகளவில் கொண்டிருக்கும்.

எழுத்துப் பரீட்சை, ஒப்படை, குறித்த கால இடைவெளியில், தவணை ரீதியில் அல்லது கற்கைநெறி நிறைவில் தரமிடல் செயற்பாடுகள் இடம்பெறும். *(Summative Assement)*

### 3. உருவாகுநிலை செயலடைவுக்கோவை: Formative Portfolio

கற்றல் செயற்பாடுகளை கணிப்பீடு செய்வதற்கான உருவாகுநிலை செயன்முறைகள் குறிநிலைப்படுத்தப்பட்டிருக்கும்.

கற்றல் அடைவுகளுக்களை விட கற்றல் செயற்பாடுகளுக்கான சான்றாதாரங்களையும் பிரதிபலிப்புக்களையும் கொண்டிருக்கும்.

கற்றல் கற்பித்தல் செயன்முறைகளின் போது மாணவர்களின் அடைவுமட்டத்தை நிபுணத்துவநிலைக்கு கொண்டு வருவதற்காக ஆசிரியர்களினால் வழங்கப்படும் பின்னூட்டல் செயன்முறைகள் (Summative Assessment) தரமிடலுக்காகப் பயன்படுத்தப்படும். அதாவது மாணவரின் செயற்பாடுகளின் போது ஆசிரியரின் கணிப்பீட்டுச் செயன்முறைகளும் பிரதிபலிப்புக்களும், பின்னூட்டல்களும் நடைபெறும் முக்கிய சான்றாதாரமாகக் கொள்ளப்படும்.

### 4. ஆய்வுச்சான்றுகள்

பரீட்சைகள் ஆசிரியர்களின் மேலாண்மையை வலுப்படுத்தக்கூடியவை

வினா முறை கணிப்பீடு உண்மையாக மதிப்பிட வேண்டிய விடயங்கள் தொடர்பான விமர்சன ரீதியான பிரதிபலிப்பைப் பெற முடிவதில்லை.

சில ஆசிரியர்கள் கணிய ரீதியான செயற்பாடுகளுக்கே முன்னுரிமை கொடுப்பதுடன்

பண்புரீதியான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்குவது குறைவாகக் காணப்படுகின்றது.

புள்ளிகளும் தரங்களும் மாணவரின் கற்றலுக்கு வேண்டிய பயன்தரு ஆலோசனைகளுடன் வழங்குவதற்கு பதிலாக குறைவாக அறிக்கை வடிவில் வழங்கப்படுதல்.

புள்ளிப்பகுப்பாய்வு, உருப்படிப்பகுப்பாய்வுச் செயன்முறைகள் மூலம் மாணவரின் தேவைகளை அறிந்துகொள்வதற்குப் பதிலாக பெரும்பாலும் அறிக்கைப்படுத்தலுக்கும், தரமிடுவதற்குமான ஒரு செயற்பாடாகவே புள்ளியிடல் நடைபெறுகின்றது.

மாணவர் தம்மை சுயவழிப்படுத்தவும், தமது நிலையை உயர்த்துவதற்கும் பதிலாக ஒப்பிட்டு நோக்குவதற்கும் போட்டி நிலையை உருவாக்கவும் ஒரு சுட்டியாக புள்ளிகளைப் பயன்படுத்துகின்றார்கள்.

பரீட்சைப்புள்ளிகள் குறைவாக மாணவர்கள் பெறும் போது வழங்கப்படும் பின்னூட்டல்கள் மாணவர்கள் சார்பாக எதிர்மறையான விளைவுகளை அதாவது தன்னால் கற்கமுடியாது என்ற எண்ணத்தை மாணவர்களிடத்தில் ஏற்படுத்த ஏதுவாகின்றது. (Black, Harrison, Lee, Marshall & Wiliam, 2003)



### 5. கற்றல் செயற்பாடுகளைக் கணிப்பிடுவதன் மூலம் அதாவது கற்றலுக்காக கணிப்பிடுவதன் மூலம்:

மாணவர்களின் தரத்தை மேம்படுத்தக்கூடியதும், குறித்த விடயத்தில் விளக்கத்தை அதிகரிக்கக்கூடியதுமாகும் (Black and Wiliam, 1998)

கற்றல் இலக்குகளை மாணவர்களுக்கு தெரியப்படுத்த உதவும்.

கற்றல் இலக்குகளின் முக்கியமான பகுதிகள் எவையென மாணவர் அறிந்துகொள்ளுவர்.

மாணவர்களும் சுய கணிப்பீட்டில் ஈடுபடுவர்

இதன் மூலம் ஆசிரியரின் கற்பித்தல் செயன்முறைகள் இலகுவாக்கப்படும்.

### 6. செயலடைவுக் கோவை மதிப்பீட்டிற்கான செயன முறைகள்:

Portfolio Assessment Processes

குறித்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட (கூட்டுநிலை, உருவாகு நிலை) உதாரணங்களை தெரிவு செய்தல்

மாணவர்கள் தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்களையும் நியதிகளையும் மாணவர்களுக்கு வழங்குதல்.

கற்றல் செயன்முறையில் காணப்படும் ஈடுபாட்டினளவை சகமாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் கலந்துரையாடுவதன் மூலம் விளங்கிக் கொள்ளுதல்

மாணவர்கள் தமது அடைவுகளை ஆவணமாக்குதல், கற்றல் அனுபவங்களையும், விழுமியங்களையும், தன்னிலை மாற்ற இயல்புகளையும் பகுப்பாராய்தல்

விமரிசன ரீதியிலான சுய மதிப்பீடு கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் என்ற ரீதியில் மாணவரின் அடைவுகளை மதிப்பிடுதல், கற்றல் பாங்குகளின் ஊடாட்டத்தை மதிப்பிடுதல்.



**7. கணிப்பீட்டிற்கும், கற்றலுக்குமான செயலடைவுக் கோவையை செயற்படுத்துதல்:**

செயலடைவுக்கோவையின் நோக்கத்தை வரையறுத்தல்

வெளியீடுகளை அல்லது அடைவுகளை முன்வைத்தல் செயன்முறைகளுக்காக செயலடைவுக்கோவைகளை எவ்வாறு பயன்படுத்துதல் என்பது தொடர்பான விளக்கமளித்தல்

பொருத்தமான ஆசிரியர்களை அல்லது வழிகாட்டுனருடனும், சகபாடிகளுடனும் தொடர்பு முறைகளை எவ்வாறு மேற்கொள்ளுதல் என்பது தொடர்பான விளக்கம்

சுயமதிப்பீட்டிற்கான பிரதிபலிப்புக்களுக்கு போதியளவு நேரத்தையும் அவகாசத்தையும் வழங்குதல்

**8. செயலடைவுக் கோவை கட்டுமானஞ் செய்வதற்கான படிமுறைகள்**

மாணவர்களிடம் விருத்தியை ஏற்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கும் திறன்களை விடய உள்ளடக்கத்தினுள் இனங்காணல்

இனங்காணப்பட்ட விடய உள்ளடக்கத்தை குறிப்பான கற்றல் வெளியீடாக மாணவர் அடையச் செய்ய வேலைப்பகிர்வுகளை திட்டமிட்டு செயற்படுத்துதல்.

கற்றல் வெளியீடுகளையும், செயலாற்றுகை தரங்கணிப்பீட்டு சான்றாதாரங்களை சேகரித்தல்

செயலாற்றுகை குறிகாட்டிகளை ஆதாரமாகக் கொண்டு மாணவர் அடைவை முன்வைக்க தயார்படுத்தல்

கணிப்பீட்டுக்கு ஏற்றவகையிலும், கணிப்பிடுவோர் இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையிலும் குறிகாட்டிகளை ஒழுங்குபடுத்தல்.

**9. செயலடைவுக் கோவை கட்டுமானஞ் செய்யும் போது கவனத்தில் கொள்ளவேண்டியவை:**

கையாளக் கூடியது அல்லது முகாமை செய்யக்கூடியதுமான கற்றல் இலக்குகளை வரையறை செய்தல்.

நேரம் வினைத்திறன் உடையதாக அமைதல். உண்மைத்தன்மையானதும், படிமுறையில் வழிப்படுத்தப்படக் கூடியதுமான கற்றல் இலக்குகள்

படிமுறை ஒழுங்கில் மதிப்பிடக்கூடியதான கணிப்பீட்டுச் செயன்முறைகள்

படிமுறை ஒழுங்கில் தரம் மேம்பாட்டையக் கூடியதான செயலொழுங்குகள்

மேற்படி செயலடைவுக் கோவை தற்போது பல்வேறு துறைகளில் பிரபல்யம் பெற்று வருவதுடன் இலத்திரனியல் செயலடைவுக் கோவைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆசிரியர்கள் இவ்விடயங்கள் தொடர்பான மேலதிக தேடல்களை மேற்கொள்வதுடன் இச்செயற்பாடுகளை மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்துவது சிறப்பானதெனக் கருதப்படுகின்றது.




# கலைத்திட்டம் : சில பிரச்சினைகள்

கி.புண்ணியமூர்த்தி

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண வகுப்புகளில் விருப்புக்குரிய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்.**


கலைத்திட்டம் என்பது தனியே மாணவர்களுக்கு அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு பாடமோ அல்லது பாடப் பகுதியோ அல்ல. மாறாக மாணவர்களுக்கு அனுபவங்களை வழங்குவதற்காகப் பாடசாலையினால் ஒழுங்கு செய்து முன்வைக்கப்படும் சகல அம்சங்களும், சகல செயற்பாடுகளும் கலைத்திட்டத்தில் அடங்கும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். அது தவிர முறைசார் பாடவிதானத்துடன் இணைந்து இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும், மறைக் கலைத்திட்டச் செயற்பாடுகளும் கூட கலைத்திட்டத்தினுள்ளேயே அடங்கும். மாணவர்களின் கட்டாயக் கலைத்திட்டத்துக்குப் புறம்பாக அவர்களது விருப்புக்கேற்ப, அவர்களது ஆற்றலுக்கேற்ப தெரிவு செய்யக்கூடிய கலைத்திட்டம் விருப்புக்குரிய கலைத்திட்டமாகும் (Optional Curri culum).

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண வகுப்புகளில் விருப்புக்குரிய கலைத்திட்டம் பிரதான மூன்று பகுதிகளாக, மூன்று கூடைப்பாடங்களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இக் கலைத்திட்டத்தில் கலையும் வர்த்தகமும், அழகியலும் நயத்தலும், தொழில்நுட்பம் ஆகிய மூன்று கூடைகள் உள்ளடங்கியுள்ளன. அவை ஒவ்வொன்றிலும் உள்ளடங்கியுள்ள பாடங்களை பின்வருமாறு காட்சிப்படுத்த முடியும்.




முதலாவது கூடையில் அதாவது கலையும் வர்த்தகமும் பாடத் தொகுதியில் ஐந்து பாடங்கள் உள்ளடங்கியுள்ளன. அவையாவன:

1. புவியியல்
2. குடியுரிமைக் கல்வியும் ஆட்சியியலும்
3. நவீன மொழியும் பாரம்பரிய மொழியும் (Modern Languages & Classical Languages)
4. இரண்டாம் தேசிய மொழி



5. முயற்சியாண்மை (Entrepreneurial Studies) என்பனவாகும். அதனைப் பின்வருமாறு காட்சிப்படுத்த முடியும்.

உள்ளடக்கப்பட்டுள்ளது. இம் மொழியின் கீழ் சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியும், தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியும் கற்றல் வேண்டும்.

இம் மொழித் தெரிவைப் பொறுத்த வரையில் பிரான்ஸ், ஜேர்மன், ஜப்பான், ஹிந்தி, பாளி, சமஸ்கிருதம், போன்ற மொழிகளைக் கற்பிப்பதற்கு ஓரிரு நகரப் பாடசாலைகளைத் தவிர நாட்டில் அனேகமான பாடசாலைகளில் ஆசிரியர்களே இல்லை எனலாம். அவ்வாறு இருந்தாலும் கூட அப் பாடங்களைத் தெரிவு செய்வதற்குப் பிள்ளைகளை வழிப்படுத்தப் பெற்றோரும் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இப் பாடங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் எதிர்பார்த்த பலனைப் பெற்றுக் கொள்ள முடியாமலே போகலாம். அத்துடன் இரண்டாவது தேசிய மொழியைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே இப் பாடம் நடைமுறையில் உள்ளது. இப் பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாததால் அனேகமான பாடசாலைகளில் இப் பாடம் முழுமையாகக் கற்பிக்கப்படுவதில்லை. அதே நிலமைதான் இப்போதும் தொடர்வதாக அதிபர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.


முயற்சியாண்மைப் பாடம் முதலாவது விருப்புப் பாடத் தொகுதிக்குள் முன் வைக்கப்பட்ட புதிய பாடமாகும். சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) தொழில்நுட்ப உதவியுடன் தேசிய கல்வி நிறுவகம் உருவாக்கிய இப் பாடம் வியாபாரமும் கணக்கியலும் என்னும் பெயரில் முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடத்தின் விரிவாக்கமாகவே அமைந்துள்ளது. இலகுவான வியாபாரத் திட்டமிடல், இலகுவான கணக்குகளைச் செய்து பார்த்தல் போன்றவற்றுக்கு இப் பாடத்தின் மூலம் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

நாளைய உலகுக்குத் தேவையான சுய விளக்கம், சந்தர்ப்பங்களையும் சவால்களையும் இனங்காண்பதற்காக அயல் சுற்றாடலை அவதானித்தல், மாற்றங்களுக்கு முகங்கொடுத்தல், ஏதாவதொன்றை ஆரம்பிப்பதற்கு முன்வருதல், சுய தீர்மானங்களை மேற்கொள்ளல் போன்ற தனியாள் விருத்திச் செயன் முறைகள் பல இப் பாடத்தினுள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. இவ் ஆற்றல்களை விருத்தி செய்வதன் மூலம இளைஞர் பரம்பரை சுயதொழிலைத் தாமாகவே தேடிக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கிறது. இதனால் தொழிலுக்காக அரசினை நம்பியிருப்பவர்களின் தொகையைக் குறைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.



ஆனால் நடைமுறையில் இப் பாடத்தை மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைவதற்காகத் தெரிவு செய்கிறார்களே தவிர இப் பாடத்தைக் கற்பதன் மூலம் அவர்களது தனியாள் விருத்திச் செயன்முறைகள் விருத்தி செய்யப்படுவதாகத் தெரியவில்லை எனப் பெற்றோர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அத்துடன் இப் பாடத்தைக் கற்பதனால் தொழிலுக்காக அரசினை நம்பியிருப்பவர்களின் தொகையைக் குறைக்க முடியும் என்ற கூற்றையும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அதிபர்கள் சிலர் கருத்துத் தெரிவித்தனர். தவிர கணக்கியல் பாடத்தைக் க.பொ.த சாதாரண தரத்தில் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது அவசியமானது எனவும் சில பெற்றோரும் அதிபர்களும் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர்.

அழகியல் பாடத் தொகுதியினுள் அழகியல் பாடங்கள் ஏழும் இலக்கியமும் நயத்தலும் என்னும் பாடத்துடன் தொடர்புபட்ட பாடங்கள் நான்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அது புதிய கலைத்திட்டத்தின் குறிப்பிட்டுக் கூறக்கூடிய முக்கிய விடயமாகும். அவற்றைப் பின்வருமாறு காட்சிப்படுத்த முடியும்.



அழகியல் பாடத் தொகுதியினுள் சங்கீதம், நடனம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் (Drama &Theatre) ஆகிய பாடத் துறைகள் உள்ளடங்கியுள்ளன. சங்கீதத்தினுள் மூன்று பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன அவையாவன:

1. சிங்கள சங்கீதம்
2. கர்நாடக சங்கீதம்
3. மேலைத்தேய சங்கீதம் என்பனவாகும்.

சங்கீதத்தைப் பொறுத்த வரையில் மேலைத்தேய சங்கீதத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் அதனைத் தெரிவு செய்ய விரும்பிய போதும் அத் தெரிவு பாடசாலைகளால் நிராகரிக்கப்படவேண்டிய சூழ்நிலை காணப்படுவதாகச் சில அதிபர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

நடனத்தினுள்

1. சிங்கள நடனம்,
2. பரத நடனம் (பரத நாட்டியம்)


ஆகிய இரு பாடங்கள் அடங்கியுள்ளன. சித்திரம் தனியாகவே உள்ளடங்கியுள்ளது. இங்கு சிங்கள, தமிழ் சித்திரங்கள் வேறுபடுத்தப்படவில்லை எனினும் இவ் விரண்டுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளதாகக் கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சித்திரத்தில் சிங்கள சித்திரங்களின் உள்ளடக்கம் ஒப்பீட்டு ரீதியில் மிகவும் அதிகமாக அமைந்திருப்பதாகவும் சில சித்திர ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். சித்திரத்தைப் போல் நாடகமும் அரங்கியலும் தனிப் பாடமாகவே கற்பிக்கப்படுகின்றன. எனினும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் விரும்பிய மொழியில் மாணவன் இதனைக் கற்க முடியும் என்பது அப்பாடத்தைத் தெரியும் மாணவர்களுக்குரிய வரப்பிரசாதமாகும்.

அழகியல் பாடத் தொகுதியிலுள்ள 11 பாடங்களில் நான்கு பாடங்கள் இலக்கியமும் நயத்தலும் என்னும் பாடத்துடன் தொடர்புபட்ட பாடங்களாகும் (Literature &Appreciation) அவையாவன:

1. சிங்கள இலக்கியமும் நயத்தலும்
2. தமிழ் இலக்கியமும் நயத்தலும்
3. ஆங்கில இலக்கியமும் நயத்தலும்
4. அராபிய இலக்கியமும் நயத்தலும் என்பன வாகும்.

இஸ்லாமிய மாணவிகள் தமது மத கலாசார அடிப்படையில் அடிப்படை அழகியல் பாடங்களைக் கற்பதற்கு விரும்புவதில்லை. அதனால் அவர்களது தேவைகளையும் விருப்பங்களையும் கவனத்தில் கொண்டே அராபிய இலக்கியமும் நயத்தலும் என்னும் பாடம் விருப்புக்குரிய கலைத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அது குறிப்பிட்டுக் கூறக்கூடிய விசேட அம்சம் எனினும் இதனைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாமையானது இதனை நடைமுறைப்படுத்துவதில் பாரிய சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது.

அடுத்ததாக மாற்றுக் கலைத்திட்டத்தில் தொழில் நுட்பப் பாடங்கள் எட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைப் பின்வருமாறு காட்சிப்படுத்த முடியும்:



தொழில்நுட்பப் பாடங்களில் மூன்றாவது தொகுதியாக சுகாதாரமும் உடற்கல்வியும் என்னும் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை முக்கிய அம்சமாகும். இப் பாடம் ஒரு தொழில் நுட்பப் பாடம் அல்ல என்பது நாம் அறிந்த விடயம். இருந்தும் இப் பாடம் இத் தொகுதியினுள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை மாணவர்களுக்கும் பாடசாலை அதிபர்களுக்கும் பல பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது.

ஒரு மாணவன் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண பரீட்சையில் ஒன்பது பாடங்களுக்குத் தோற்றுதல் வேண்டும். அதற்காக மையப்பாடங்களான கணிதம், தாய்மொழி, ஆங்கிலம், சமயம், விஞ்ஞானம், வரலாறு, ஆகிய ஆறு பாடங்களுடன் தெரிவுப் பாடங்கள் மூன்றைத் தெரிவு செய்தல் வேண்டும். அவ்வாறு அவன் தனது தெரிவை இலகுவாக மேற்கொள்வதற்கோ அல்லது பாடசாலை அதிபர் தனது விருப்புக்கேற்ப சுதந்திரமாக நேரசூசியில் பாடங்களின் எண்ணிக்கையை வரையறுப்பதற்கோ வழியில்லாமல் இப்பாடத்தைத் தொழில்நுட்பப் பாடத்தினுள் உட்புகுத்தியுள்ளமை இருபாலாருக்கும் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது.

தொழில்நுட்பப் பாடங்களைக் கொண்ட பாடத் தொகுதியில் விவசாயத்துடன் தொடர்புடைய பாடங்கள் இரண்டும் அடிப்படைத் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய பாடங்கள் இரண்டும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும்
2. மீன்பிடியும் உணவுத் தொழில்நுட்பவியலும் ஆகிய இரண்டுமாகும்.


விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் என்னும் பாடத்தில் விவசாயத்துடன் தொடர்புடைய விடயங்களுடன் விலங்கு வளர்ப்பு, பூந்தோட்டக்கலை போன்ற பகுதிகளும் உள்ளடங்கியுள்ளன.

மீன்பிடியும் உணவுத் தொழில்நுட்பவியலும் என்னும் பாடத்தில் சமுத்திரத்துடனும் நன்னீருடனும் தொடர்புடைய உயிர் வளத் தொழில்நுட்ப அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன. இப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கம் மாணவர்களுக்கு உணவுத் தொழில்நுட்பத்துடன் பரிட்சயத்தை ஏற்படுத்துவதற்காகும்.

வடிவமைப்புத் தொழில்நுட்பம் (Design & Technology), கைத்திறன் கலைகள் (Arts&Crafts) ஆகிய பாடங்கள் அடிப்படைத் தொழில்நுட்பத்தின் கீழ் வரும் பாடங்களாகும்.

**வடிவமைப்பும் தொழில்நுட்பம்** (Design & Technology)

முன்னர் வெவ்வேறாக நடைமுறைப்படுத்தப்பட்ட தச்சு வேலை, மேசன் வேலை, உலோகவேலை, மோட்டார் தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள் தற்போது வடிவமைப்புத் தொழில்நுட்பத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. வேறு வார்த்தையில் கூறுவதானால் கட்டுமானத் தொழில்நுட்பம், இயந்திரத் தொழில் நுட்பம், மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் ஆகிய பகுதிகள் வடிவமைப்புத் தொழில்நுட்பத்தின் கீழ் உள்ளடங்கியுள்ளன. இருந்தும் இப் பாடத்தின் பிரதான கவனம் வடிவமைப்பில் குவியும் வண்ணம் ஏதாவதொரு பாடம் தொடர்பாக நிபுணத்துவம் வாய்ந்த ஒரு ஆசிரியர் இப் பாடத்தினை ஒரு ஒன்றிணைந்த பாடமாகக் கற்பிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.




**கலையும் கைப்பணியும்** (Arts & Crafts)

மட்பாண்டத் தொழில்நுட்பம், நெசவுக் கைத்தொழில், வர்ணம் தீட்டுதல், கைப்பணி போன்ற பாடங்கள் கலையும் கைப்பணியும் என்னும் பாடத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பத் துறைசார் ஆசிரியர்களின் பற்றாக்குறை இப் பாடங்களை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. தொழில் நுட்பப் பாடநெறியினைக் கொண்டுள்ள கல்விக் கல்லூரிகளில் கூட இப் பாடநெறியினைப் போதிப்பதற்குத் தேவையானளவு நிரந்தர விரிவுரையாளர்கள் இல்லாமை இப் பாட நெறியினைப் பூரணமாக நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்களைத் தோற்வித்துள்ளது. இந் நிலையில் பாடசாலைகளில் இதனை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சிக்கல்களைக் கூறவேண்டியதில்லை.

தொழில் நுட்பப் பாடத் தொகுதியில் மிகுதிப் பாடங்களாக வருவன தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் (ICT) மனைப் பொருளியல், வேக எழுத்தும் தட்டெழுத்தும், தொடர்பாடலும் ஊடகவியலும் ஆகிய நான்கு பாடங்களுமாகும்.

மனைப் பொருளியல் பாடத்தினை நடைமுறைப்படுத்தவதற்குப் பல பாடசாலைகளில் மனைப் பொருளியல் ஆசிரியரும், மனைப் பொருளியல் அறையும் பற்றாக்குறையாகவுள்ளமை முக்கிய பிரச்சினையாகும். மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தினை



நடைமுறைப்படுத்த தொடர்பாடல் தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற ஆசிரியரும் கணினி ஆய்வு கூடமும் (Computer Lab) இணைய (Internet) வசதியும் அவசியமாகின்றன. இவ் வசதிகளற்ற பாடசாலைகளில் இப் பாடத்தைத் தெரிவு செய்யப் பல மாணவர்கள் விரும்பிய போதும் அவர்களது விருப்பும் ஆர்வமும் மறுக்கப்படுகிறது.

இலங்கையில் விளைதிறனுள்ள ஊடகவியலாளர்களை உருவாக்கும் பொருட்டே தொடர்பாடலும் ஊடகவியலும் என்னும் பாடம் தொழில்நுட்பப் பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஊடக அனுபவமுள்ள ஆசிரியர்கள் மிகக் குறைந்தளவேயுள்ளனர். அத்துடன் பாடசாலையை ஒட்டி ஊடக நிறுவனங்களின் உதவிகளைப் பெறக்கூடிய வாய்ப்புக்களும் பொதுவாகக் கிடைப்பதில்லை.

எனவே விருப்புக்குரிய கலைத்திட்டத்திலுள்ள பாடங்கள் மாணவர்களது பல்வேறு வகையான ஆற்றல்களை வெளிக் கொண்டு வருவதற்கேற்ற விதத்தில் அமைந்திருந்த போதும் ஆசிரியப் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை, பெற்றோரினதும் ஆசிரியர்களதும் புரிந்துணர்வின்மை காரணமாக நடைமுறைப்படுத்த முடியாதவைகளாகவுள்ளன. இது தவிர அனேகமான பாடசாலைகளில் பழைய பாடங்களையே தொடர்ந்தும் தெரிவு செய்யும் தன்மையும் காணப்படுகிறது.

மாற்றிடாக தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தை அதிகமான மாணவர்கள் தெரிவு செய்வதை அவதானிக்க முடிகிறது. இந்தப் பாடம் மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கத்தைப் போல் வேறு எந்த விருப்புக்குரிய கலைத்திட்டப் பாடமும் ஏற்படுத்தவில்லை எனலாம். கல்விக் கல்லூரிகளின் அனுமதிக்காக வடிவமைப்புத் தொழில்நுட்பம் (Design & Technology), கைத்திறன் கலைகள் (Arts & Crafts) ஆகிய பாடங்களை ஒரு சில மாணவர்கள் தெரிவு செய்வதை அவதானிக்க முடிகிறது. எனவே விருப்புக்குரிய கலைத்திட்டத்திலுள்ள அனேகமான பாடங்கள் வெறுமனே பயன்படுத்தப்படாமலுள்ள பாடங்களாகவேயுள்ளன எனலாம். மறு வார்த்தையில் கூறுவதானால் விருப்புக்குரிய கலைத்திட்டத்திலுள்ள அனேகமான பாடங்கள் மாநகரப் பாடசாலைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாகவேயுள்ளன எனலாம்.

விருப்புக்குரிய கலைத்திட்டத்தின் உருவாக்கத்தின் மூலம் தேசிய தேவைகளும், மாணவர்களின் தேவைகளும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஆனால் நடைமுறையில் பாடசாலைகளில் இப் பாடங்களைக் கற்பிப்பதற்குத் தகைமை பெற்ற ஆசிரியர்கள் இல்லாமையும்; இப் பாடங்களை ஏன் கற்கவேண்டும் என்ற மாணவர்களதும் பெற்றோரதும் அலட்சிய மனப்பாங்கும்; நடைமுறைச் சூழல் பிரச்சினைகளும் இப் பாடங்களை நடைமுறைப்படுத்துவதில் பாரிய சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளன.

அத்துடன் இவ் வகைப் பாடங்களை நடைமுறைப்படுத்தவதற்குத் தேவையான வசதி வாய்ப்புக்களையும் வளங்களையும் ஒழுங்கமைப்பதில் காணப்படும் பிரச்சினைகள் காரணமாக இக் கலைத்திட்டத்திலுள்ள பாடங்கள் வெறுமனே பட்டியல்படுத்தப்பட்டு நூல் நிலையத்தில் பயன்படுத்தப்படாமல் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பெறுமதிமிக்க புத்தகங்கள் போல் காட்சியளிக்கின்றன.



# பாடசாலைகளின் ஒன்றிணைந்த வளப்பயன்பாடு ஒரு விமர்சன நோக்கு

க.பேர்ணாட்

## அறிமுகம்

எந்தவொரு நிறுவனத்தின் மேம்பாட்டிற்கும் தொடர்ச்சியான பயன்தரு தன்மைக்கும் அந்நிறுவனத்தின் ஆரோக்கியமான வளப்பயன்பாடுகள் அவசியமானதாகும். ஆரோக்கியமான வளப்பயன்பாடு என்பது கைவசமிருக்கும் வளங்களை உத்தமமாக பயன்படுத்துதல், புதிய வளங்களை இனங்கண்டு பயன்படுத்துதல். பயன்படுத்தப்படும் வளங்களை தொடர்ச்சியாக நல்ல பயனைத் தரக் கூடிய வகையில் பராமரித்தல், விருத்தி செய்தல், வளங்களை செம்மையாகப் பாதுகாத்தல் போன்ற பல விடயங்களை உள்ளடக்கிதாகும்.

பாடசாலையும், ஒரு சமூக நிறுவனமாகும். சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்துகொள்ளவும், சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களை எதிர் கால சந்ததியினருக்கு ஊடு கடத்தவும், சமூகத்தின் விரிகையுடன் சமூகத்தின் ஊடாகவே உருவாக்கிய ஒரு ஒழுங்கமைப்பாகும்.

பாடசாலை என்ற நிறுவனத்தின் வளங்களை நாம் இரண்டு வகையாக பிரித்து நோக்கலாம். அவையாவன.

1. மனித வளம்
2. பௌதீக வளம்

பாடசாலை ஒரு நிறுவனம் என்றவகையில் மனித வளத்தையும், பௌதீக வளத்தையும் ஆரோக்கியமாக பயன்படுத்துவதன் ஊடாகவே, பாடசாலையின் பிரதான இலக்கினையும் தேர்ச்சிமிக்க மாணவர்களையும் அவர்களிடமிருந்து உச்ச பெறுபேறுகளையும் உருவாக்க முடியும்.

இக்கட்டுரையானது பாடசாலைகளின் பிரதான வளமாகிய ஆசிரிய வளத்தினையும், பௌதீக வளத்தினையும்,கட்டிடங்கள், கற்றலுக்கான தர உள்ளீடுகள் மற்றும் உபகரணங்கள் விசேட அறைகள், விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றையும் இணைந்த ஒரு வளப்பயன்பாடு பற்றி நோக்குவதாக அமைகின்றது.

## பாடசாலையொன்றின் விளைதிறனை வெளிக்காட்டும் காட்டிகள்

வினைத்திறன்மிகு பாடசாலையொன்று பின்வரும் பண்புகளை கொண்டதாக அமைந்திருக்கும்.

- பாடசாலையின் சக்திக்குப் பொருத்தமானவாறு மாணவர்களின் பெறுபேறுகள் உச்சமட்டத்தில் காணப்படும்.
- பாடசாலையின் கற்றல் - கற்பித்தல் கருமங்கள் மிக தெளிவாக தீர்மானிக்கப்பட்டிருக்கும்
- பாடசாலையின் ஒவ்வொரு மட்டத்திலும் முன் மாதிரியான தலைமைத்துவம் காணப்படும்.
- பொறுப்புணர்ச்சியுடன் செயற்படும் சுய ஊக்கமுடைய ஆசிரியர் குழாம் காணப்படும்.
- பாடசாலையினுள் நற்பண்புகளினை அடிப்படையாகக் கொண்ட தனியாள் இடைத்தொடர்பு கட்டியெழுப்பப்பட்டிருக்கும்.
- காணப்படும் பௌதீக வளங்கள் உத்தமமாகப் பயன்படுத்தப்படும்.
- பாடசாலைக்கும் பாடசாலை சார்ந்த சமூகத்திற்கும் இடையிலான நல்ல தொடர்பு காணப்படும்.
- மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வரக்கூடிய வகையிலான இணைபாடவிதானச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும்.
- உயர்மட்ட எதிர்பார்ப்புக்களைக் கொண்ட கலா சாரமொன்று கட்டியெழுப்பப்பட்டிருக்கும்.
- பாடசாலை அபிவிருத்தி மீதான பெற்றோர்கள், பழைய மாணவர்களின் அக்கறை உச்சமட்டத்தில் காணப்படும்.

மேற்காட்டிய பத்துவிடயங்கள் வினைத்திறன்மிகு பாடசாலையொன்றினை அடையாளம் காட்ட எமக்கு உதவுகின்றன.

மேற்கண்ட பாடசாலையின் வினைத்திறனுக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகள் சிறப்பாக செயற்படுவதற்கு அடிநாதமாக அமைவது பாடசாலையின் வளமுகாமைத்துவமும் வளப்பயன்பாடுமாகும்.

பாடசாலையின் மனித பௌதீக வளங்கள் சிறப்பாக திட்டமிட்டு பயன்படுத்தப்படாவிடின் பாடசாலையொன்று வினைத்திறன்மிகு தன்மையை அடைவது இயலாத விடயமாகும். பாடசாலையின் வளமுகாமைத்துவமும் புத்திசாலித்தனமான வளப்-

பயன்பாடும் பாடசாலையின் வினைத்திறனையும் விளைத்திறனையும் அதிகரிக்கும்.

**பாடசாலையின் பிரதான மனித வளம் ஆசிரியர் வளமாகும்.**

பாடசாலை என்ற சமூக நிறுவனத்தின் மையச் சக்கரமாக செயற்படுபவர்கள் ஆசிரியர்களே. கல்வி அமைச்சு, தொழிலாளர்கள் பெற்றோர், பாடசாலை முகாமைத்துவம், மாணவர்கள் போன்ற பல வகைப்பட்ட பொறுப்பு மிக்கவர்கள் பாடசாலையின் தொழிற்பாடுகளில் பங்கேற்கின்றனர். எனினும் அவர்கள் அனைவரையும் விட ஒருபடி உயர்ந்தவர்களாக ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்.

பாடசாலைகளின் ஆசிரியர் வளத்தினைப் பொறுத்த வகையில் பாடசாலைகளை மூன்று வகையாக பிரித்து நோக்கமுடியும். அவையாவன:

- ஆசிரியர்கள் போதுமான அளவு கொண்டிருக்கும் பாடசாலைகள்.
- ஆசிரியர்கள் பற்றாக்குறையாக கொண்டிருக்கும் பாடசாலைகள்.
- விசேட நிலைமைகள், காரணங்கள் தொடர்பாக தேவைக்கதிகமான ஆசிரியர்களைக் கொண்டிருக்கும் பாடசாலைகள்.

என்பனவாகும்.

பொதுவாக ஆசிரியர் வளம் ஒருமனிதவளமாகும். சூழலுடன் தொடர்ச்சியாக இடைத்தாக்கம் புரிந்து சூழலை வெற்றிக்கொண்டு, சூழலிருந்து கிடைக்கும் அருமையான வளங்களை மனித பயன்பாட்டுக்காக வெற்றிகரமாக மாற்றியமைக்கும் தனிப்பெருமை மனிதவளத்திற்கே உரித்தான ஒருபெரும் சிறப்பாகும். இந்தவகையில் சிறப்பான மாபெரும் மனித வளமாக ஆசிரியர்கள் திகழ்கின்றனர்.

**பாடசாலைகளின் பௌதிக வளம்**

ஒரு பாடசாலையின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ள பௌதீக வளங்கள் அவசியமாகின்றன. தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்ளல், பராமரித்தல். பாதுகாத்தல் என்பன கிரமமாக நடைபெறும் ஒரு பாடசாலையில் கல்வி இலக்குகளை அடைந்துக்கொள்வது இலகுவானதாகும். பாடசாலையின் பௌதீக வளங்களைப் பின்வருமாறு பட்டியல் படுத்தலாம்.

- பாடசாலைத் தோட்டம்/வளவு
- கட்டிடங்கள்
- வகுப்பறைகள்/விசேட அறைகள்
- நூலகம்
- ஆசிரியர் ஓய்வறை
- சிற்றுண்டிச்சாலைகள்
- மரத்தளபாடங்கள்
- கழிப்பறைகள்
- பருகும் நீர், மினசாரம்
- விளையாட்டு மைதானம
- தொழிற்நுடப சாதனங்கள்
- திட்டமிடப்பட்ட கற்றல் கற்பித்தல் சாதனங்கள்


என்பனவாகும்.

பாடசாலையின் பௌதீக வளங்கள் அருமையானவை விரைவில் தீர்ந்து போகக்கூடியன. பாடசாலைகளைப் பொறுத்து பௌதீக வளங்களும் போதியளவு பற்றாக்குறை, மேலதிகம் என்ற நிலையில் பாடசாலையில் காணப்படுகின்றன.

**பாடசாலைகளின் ஆசிரியர் வள பௌதீக வள ஒருங்கிணைந்த அபிவிருத்தி எண்ணக்கரு.**

பாடசாலைகளின் பிரதான மனிதவளமாகிய ஆசிரியர் வளமும் பௌதீக வளமும் ஒருங்கிணைந்த நிலையில் அபிவிருத்தி செயற்படும் நிலையிலேயே பாடசாலையில் ஆரோக்கியமான வளப்பயன்பாட்டினை உருவாக்கி வினைத்திறன்மிகு பாடசாலைக்கொன்றுக்கான இலக்குகளை அடைந்து கொள்ளல் முடியும்.

உதாரணமாக வகுப்பறையொன்றில் நிகழும் கற்றல் கற்பித்தல் நிலைமையினை நாம் பின்வருமாறு நோக்கலாம்:



மேற்கண்ட எண்ணக்கரு வரைபடமானது ஒரு கற்றல் கற்பித்தல் நிலைமையில் மாமணவர்களின் தேர்ச்சி நிலையை அடைவதற்கு

- நிபுணத்துவமிகு ஆசிரியர்கள்
- கற்றல் ஆர்வமுடைய மாணவர்கள்
- நன்கு திட்டமிடப்பட்ட தரஉள்ளீடுகள்
- நன்கு பராமரிக்கப்பட்ட வகுப்பறைகள்

என்ற நான்கு பிரதான காரணிகள் ஒன்றில் ஒன்று தாக்கம் செலுத்துவதை எம்மால் உணரக்கூடியதாக உள்ளது. மேற்கண்ட நிலையில் ஒரு காரணியில் ஏற்படும் தாக்கம் அல்லது குறைபாடு மாணவர்களின் தேர்ச்சியில் வீழ்ச்சியினை ஏற்படுத்தக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

பாடசாலைகளின் வளப்பயன்பாட்டுக்கான முகாமைத்துவத்தினை நோக்கின் அங்கு இவ்வாறான நிலைகள் காணப்படுகின்றது.

| வகை | ஆசிரிய விருத்தி | பௌதீக வள விருத்தி |
|---|---|---|
| A | அதிகம் | அதிகம் |
| B | அதிகம் | குறைவு |
| C | குறைவு | அதிகம் |
| D | குறைவு | குறைவு |

மேற்கண்ட அட்டவணையை நோக்கின் முகாமைத்துவ வகை A ஆசிரிய வளம், பௌதீக வளம் இரண்டினது விருத்தியிலும் சமாந்தரமான அக்கறையை வெளிப்படுத்தும் தலைமைத்துவத்தைக் கொண்ட முகாமைத்துவம் காணப்படுகின்றது. இந்நிலை பாடசாலையின் இலக்குகளை அடைவதில் இலகுவான நிலைக்கு இட்டுச்செல்லும். பாடசாலைகளில் ஆசிரியர் வளவிருத்தி பௌதிக வளவிருத்தி தொடர்பான வளமுகாமைத்துவம் காணப்படுமிடத்து அந்நிலை பாடசாலையின் வினைத்திறன், விளைத்திறன் சுட்டிகளில் சாதகமான வெளிப்பாடுகளைக் காட்டி நிற்கும்.

**பாடசாலைகளின் வளப்பயன்பாடு தொடர்பாக ஆசிரியர்கள் சிலரின் கருத்துக்கள் வருமாறு**

1. பாடசாலைகளின் தலைமைத்துவம் பாடசாலை கட்டிடங்களை அலங்கரித்தல், பாடசாலை வளவினை அழகுபடுத்தல், பாடசாலையை இலத்திரனியல், கருவிகளைக் கொண்டு நிரப்புதல் போன்ற அளவுசார் விடயங்களிலேயே அக்கறை செலுத்தும் இதே நேரம் கற்றல் கற்பித்தலுக்கான வள பயன்பாட்டிலும் அதிக அக்கறை செலுத்துதல் வேண்டும். பாடசாலை தொடர்பான வெளிக்கவர்ச்சி நிலையை பேணுவதற்காக மட்டும் அதிக நிதியை செலவிடுவது பாடசாலைகளின் உயரிய இலக்குகளை அடைவதற்கு உதவமாட்டாது

**2. பாடசாலைமட்ட ஆசிரிய வாண்மை விருத்திச் செயற்பாடுகளில் பின்வரும் நிலைமை பேணப்படல் வேண்டும்.**

I. நன்கு திட்டமிட்ட நிலையில் செயலமர்வுளை நடாத்துதல்.

II. ஒதுக்கப்பட்ட நிதியை செலவழிக்கும் நோக்கில் வெறுமனே தரம் குறைந்த செயலமர்வுகளை நடாத்தாது செயலமர்வின் தரம் தொடர்பாக அக்கறை செலுத்துதல்.

III. வாண்மைவிருத்தி செயலமர்வுகளை நடத்த வேண்டிய தேவை, ஆசிரியர்களின் தேவைகள் விருப்பு வெறுப்புக்கள் கவனத்தில் கொண்டு செயலமர்வுகளை ஒழுங்கமைத்தல்.

IV. செயலமர்வுகளில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள், வகுப்பறைகளில் மாணவர்களின் கற்றல் தேர்ச்சிக்காக பயன்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் பின்னூட்டலுடனான நிகழ்ச்சி திட்டம் என்பன நடைபெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

V. மேற்படி செயலமர்வுகளில் தரமிக்க வளவாளர்களை பயன்படுத்த முயற்சித்தல்.

**3. பாடசாலைக்கு தேவையான தர உள்ளீடுகளின கொள்வனவு, பகிர்ந்தளிப்பு போன்ற விடயங்களில பின்வரும் விடயங்களில் பாடசாலை தலைமைத்துவம் உயரிய அக்கறை கொண்டிருத்தல்.**

1. பாடசாலையின் தர உள்ளீடுகள் கற்றல்-கற்பித்தல் தேவைகளைக் முன்னாய்வு செய்து கொள்வனவு செய்யப்படுதல்
2. சில பாடசாலைகளில் கொள்வனவு செய்யப்பட்ட தர உள்ளீடுகள் ஒழுங்கான முறையில் ஆசிரியர்களின் தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்கப்படுதல்.
3. ஆசிரியர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் தர உள்ளீடுகள் வகுப்பறைகளில் பொருத்தமாக பயன்படுத்ததலை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகளை போதியளவில் பாடசாலைகளில் உருவாக்குதல்.

4. தர உள்ளீடுகளை கொள்வனவு செய்தல் தொடர்பாக எல்லா ஆசிரியர்களினதும் விருப்பங்களை பெருமளவில் கருத்தில் கொள்ளப்படுதல்.

5. தர உள்ளீடுகள் கற்பித்தல் தேர்ச்சியை விருத்தியாக்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் இனங்காணும் திறன் ஆசிரியர்களிடையே விருத்தியாக்கப்படுதல் வேண்டும்.

**4. பௌதீக வளப்பயன்பாடு தொடர்பான கருத்துகள்**

1. பௌதீக வளங்கள் நேர்த்தியாக பராமரிக்கப்படுதலை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகளை பாடசாலையில் திட்டமிட்டு உருவாக்குதல்.
2. சில பௌதீக வளங்கள் குறிக்கப்பட்ட ஆசிரியர்கள் சிலரின் பொறுப்பில் உள்ள நிலைமையை தவிர்த்து எல்லா ஆசிரியர்களும் அவற்றை பயன்படுத்தும் நிலைமையை எளிதாக்கல் வேண்டும்.
3. நிதி பிரமாணங்கள் தொடர்பில் எழும் பயம் காரணமாக சில கற்பித்தல் உபகரணங்களை இலத்திரணியல் சாதனங்களை பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் பயன்படுத்த அனுமதி வழங்க தயங்கும் நிலை மாற்றப்பட வேண்டும் :

**5. ஆசிரியர் வள நிர்வகிப்பு தொடர்பான கருத்துகள்.**

1. ஆசிரியர்களின் நியமனவகை, திறன், ஆற்றல், அவர்களது ஆக்கமலர்ச்சி என்பவற்றிற்குப் பொருத்தமான பாட ஒதுக்கீடுகள் வழங்கப்படுதல் வேண்டும்.
2. நேரசூசி தயாரிப்பில் ஆசிரியர்களின் விருப்பு எதிர்பார்ப்புக்கள், கருத்தில் கொள்ளப்படும் நிலை விருத்தியாக்கப்படுதல் வேண்டும்.
4. பாடங்களை மட்டும் கருத்திற்கொண்டு ஆசிரியர்களது திறன்களை கணிப்பீடு செய்யாது ஆசிரியர்களினது முழு செயலாற்றுகையும் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.
5. திறமையுள்ள ஆசிரியர்களை தனித்து பாடசாலை அலுவலக வேலைகளுக்காக மட்டும் பயன்படுத்தாமல் ஆசிரியர்களது ஆக்கமலர்ச்சி, சிந்தனையாற்றல், சிருஷ்டிப்பு ஆற்றல் என்பவற்றையும் கருத்தில் கொண்டு வேறு செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடவும் ஊக்குவிக்கப்படல் வேண்டும்
6. திறமையுள்ள ஆசிரியர்களை புதிய ஆசிரியர்களுக்கான தொழில்வழிப்படுத்துனர்களாக
7. நியமித்து பாடசாலையில் ஒருங்கிணைந்த கற்றல் கலாசாரத்தை உருவாக்குதல் வேண்டும்.

மேற்கண்ட பாடசாலை வளப்பயன்பாடு தொடர்பாக ஆசிரியர்களால் சுட்டிக்காட்டப்படும் கருத்துகள் பாடசாலை மட்டத்தில் காணப்படும் வினைத்திறன் குறைவான வளப்பயன்பாட்டு முகாமைத்துவத்தை நீக்குவதற்கும் ஒருங்கிணைந்த வளப்பயன்பாட்டு எண்ணக்கருவை விருத்தியாக்கவும் உதவும்.

**பாடசாலையின் வளத்தேவைகளைத் தீர்மானித்தல்.**

பாடசாலையின் வளத்தேவைகளைத் தீர்மானிக்கும் காரணிகள் பல உண்டு. இவற்றுள் விஷேடமாக பின்வரும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வளத்தேவையை தீர்மானித்தல் வேண்டும்.

1. பாடசாலையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை
2. பாடசாலையிலுள்ள வகுப்புக்கள், சமாந்திர வகுப்புக்களின் எண்ணிக்கை
3. பாடசாலையின் முறைசார் கலைத்திட்டத்தின் இலக்குகள்
4. பாடசாலையின் இணைபாடவிதான செய்பாடுகள்
5. பாடசாலையின் ஆசிரியர் எண்ணிக்கை
6. பாடசாலையின் தூரநோக்கு, பணி இலக்கு
7. பாடசாலையின் எதிர்கால முன்னுணர்வு

மேற்கண்ட காரணிகளின் அடிப்டையில் பாடசாலையின் வளத்தேவைகளைத் தீர்மானிக்கும் போது அவை பொருத்தமான வளங்களாகவும், பாடசாலையின் வினைத்திறன் தன்மையினை பேணுவதற்கு அவசியமான வளங்களாகவும் அமையும்.

**ஆசிரியர் வளத்தினை விருத்தி செய்வதற்கான நுட்பங்கள்**


ஆசிரியர் வளத்தினை விருத்தியாக்கும் போது

- ❖ கூட்டுத்தலைமைத்துவம்
- ❖ பங்குகொள்ளும் பண்பு
- ❖ செயலாற்றத்தூண்டு சூழ்நிலை
- ❖ தனிநபர் - பாடசாலை உடன்பாடு

என்ற முகாமைத்துவ அடிப்டை எண்ணக்கருக்களை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

மேற்கண்ட முகாமைத்துவ அடிப்படை எண்ணக் கருக்களின் அடிப்படையில்

- ○ தகைமை ஈடுபாடு அடிப்படையில் கற்பித்தலுக்கான பாடங்களை ஒதுக்கீடு செய்தல்
- ○ பௌதீக வளத்தை இனங்காண்பதிலும், அதனை உரிய முறையில் பயன்படுத்துவதிலும் புதிய வளங்களை உருவாக்குவதிலும், ஆசிரியர்களின் பங்களிப்பினை பெறுவதற்கான பயிற்சிகளும், ஊக்குவிப்புக்களும் வழங்கப்படல் வேண்டும்.
- ○ பாடசாலையின் சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் ஆசிரியர்களின் பங்களிப்பு பொறுப்பு தொடர்பான தெளிவான அறிவுறுத்தல்கள் காலத்திற்கு காலம் வழங்கப்படல் வேண்டும்.



○ பாடசாலை ஆசிரியர் பாடசாலையிலுள்ள பௌதீக வளங்களை பொறுப்பேற்கவும் அதனை மாணவ விருத்திக்காக பயன்படுத்தவும் அது தொடர்பான வகை கூறலை கொண்டிருக்கவும் பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.

○ பாடசாலைகளுக்கான வளங்களை கொள்வனவு செய்யும் போது அது தொடர்பாக ஆசிரியர்களிடம் வெளிப்படையாக கருத்துக்களை முன்வைக்க சந்தர்ப்பமளித்தல் வேண்டும்.

○ பௌதீக ரீதியாக பாடசாலையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் அபிவிருத்திகள் புதிய உருவாக்கங்கள் என்பன மாணவர்களின் கற்றலை விருத்தியாக்குவதற்கு எவ்வாறு உதவும் என்ற விளக்கம் ஆசிரியர்களிடம் தெளிவாக ஏற்படுத்தப்படல் வேண்டும்.

○ பாடசாலையின் வளங்களின் பாதுகாப்பு தொடர்பான பொறுப்புணர்வு எல்லோருக்கும் உரியது என்ற மனப்பாங்கு விருத்தியாக்கப்படல் வேண்டும்.

○ ஆசிரியர்களின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்பார்வைக்கு உள்ளாக்கப்படல் வேண்டும். இம் மேற்பார்வையின் போது எந்தளவுக்கு வளப்பயன்பாடு ஆசிரியரால் கருத்திற் கொள்ளப்படுகின்றது என்பது கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.


○ தர உள்ளீடு முறைப்பயன்படுத்தல் தர உள்ளீடுகளை பயன்படுத்துவதால் மாணவர்களின் கற்றலில் உருவாக்கும் மாற்றல்கள் தொடர்பாக உரிய பயிற்சியும் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களும் ஆசிரியர்மட்டத்தில் இடம்பெற வழியேற்றப்படுத்துதல் வேண்டும்.

○ பாடசாலையின் செயற்பாடுகளில் எல்லா ஆசிரியர்களும் தமது பங்களிப்பினை வழங்குவதற்கான சந்தர்ப்பங்கள் பாடசாலையில் உருவாக்கப்படல் வேண்டும்.

மேற்கண்டவாறு பௌதீகவளத்தினையும், ஆசிரிய வளத்தினை ஒன்றிணைந்து பாடசாலை வளப்பயன்பாட்டினை விருத்தியாக்குவதால் பாடசாலையின் விளைத்திறன் அதிகரிக்கும்.

## முடிவுரை

நாட்டின் தேசிய கல்வி இலக்குகளை முழுமையாக அடைந்து கொள்வதில் பாடசாலைகளே அதிகளவு பங்காற்றவேண்டிய தேவை காணப்படுகின்றது. தேசிய கல்வி இலக்குகளை அடைதல் நாட்டில் ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும். இந்நோக்கில் பகிர்ந்தளிக்கப்படும் சகல வளங்களும் பயனுறுதி வாய்ந்ததாக பயன்படுத்தப்பட பாடசாலையின் சகல மட்டத்திலும் வள முகாமைத்துவம் தொடர்பாக உயரிய கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். பாடசாலையின ஒன்றிணைந்த வளப்பயன்பாடு தொடர்பாக கலந்துரையாடப்பட்ட விடயங்கள் இக்கருத்தினையே வலியுறுத்துகின்றன. பாடசாலைகள் வினைத்திறன்மிகு குறிக்காட்டிகளை மேம்படுத்திக்கொள்ள ஒன்றிணைந்த வளப்பயன்பாட்டினை விருத்தியாக்குவதில் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.



# தேவை ஒரு தேடல்

நெடுந்தீவு மகேஷ்

பள்ளிக்கூடம் விட்டதும் மாணவர்கள் பட்டாம் பூச்சிகளாகி வீடு நோக்கிப் பறந்தனர். நானும் எனது கையொப்பத்தை மேசையில் இருந்த பதிவுப் புத்தகத்தில் போட்ட கையோடு பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறினேன்.

என் இதயம் கனத்தது.

பத்தாம் வகுப்பில் எனது தமிழ்ப்பாடத்தின்போது மாணவன் விமலனை நன்றாக அடித்துவிட்டேன். அவன் எழுத்து வேலைக்கெனத் தனியான கொப்பி எதனையும் வைத்திருக்கவில்லை. ஒரு கொப்பியிலேயே தான் கற்கும் இரண்டு அல்லது மூன்று பாடங்களுக்கான குறிப்புக்களையும் எழுத்து வேலைகளையும் செய்திருந்தான். அதுபற்றி, ஏன்? எதற்கு? என்று விசாரிக்காமலேயே நான் அவனைத் தண்டித்து விட்டேன்.

அவனோ எனது பாடம் முடியும் வரையும் அழுது கொண்டே இருந்தான்.

எனது சிந்தனை முழுவதும் அவனிடமாக நான் எனது வீட்டுக்குப் போகும் பேருந்தில் அமர்ந்திருக்கிறேன்

பேருந்து இன்னமும் புறப்படவில்லை என்னருகில் ஒரு சிறுமி இருந்தாள். அவள் எனது பள்ளிக்கூட மாணவிதான். ஆறு வயதிருக்கும், இரண்டாம் வகுப்பில் படிக்கிறாள் என நினைக்கிறேன்.

அவளின் கண்கள் கலங்கியிருக்க முகம் சோரக் கைகளால் கண்களைக் கசக்கினாள் விம்மினாள் எதற்காகவோ அழுகிறாள் என்பதை உணர்ந்து கொண்டேன்.

அவளைப் பார்த்ததும் எனக்கு அனுதாபம் ஏற்பட்டது. அவள் அழுவதற்கான காரணத்தை அறிய" "ஏனம்மா அழுகிறாய்? என்ன நடந்தது? எனக் கேட்டேன்." என் கேள்வி அவளுக்கு வேதனையைக் கூட்டியதோ என்னவோ? அவளது விம்மல் இப்பொழுது பேரழுகையாய் வெடித்தது. அவளது அழுகையை நிறுத்த நான் எடுத்த முயற்சி வெற்றியளித்தபோது அவள் எனது கேள்விக்கு விடையளித்தாள்

"பஸ்ஸூக்கு". ரிக்கெற்றுக்கு'.. அஞ்சு ரூபா கொண்டந்தனான் அது துலைஞ்சு போச்சு சேர்" என்ற வார்த்தைகளுடனே மீண்டும் அவள் அழத் தொடங்கினாள்.

"அழாதே, அழவேணாம் நான் உனக்கு பஸ்ஸூக்குரிய ரிக்கற்றை எடுத்துத்தாறன்" என்றேன் சிறிது பெருமிதத்தோடு.

அவளது அழுமை நின்றது அமைதியானாள்

அவளது பெயரை விசாரித்தேன்

"கலா"

இருக்குமிடம் விசாரித்தேன்

"துறைமுகம்"

சகோதரர்கள், தாய், தந்தை, உறவினர்கள் பற்றி எல்லாம் விசாரித்தேன். எனது அனைத்துக் கேள்விகளுக்கும் அவள் மிகவும் உற்சாகமாகப் பதிலளித்தாள் நான் மகிழ்ந்து போனேன்.

பேருந்து புறப்பட ஆயத்தமானபோது நடத்துநர் "எல்லாரும் மாத்தின காசு வைச்சிருங்கோ" என்ற தனது வழமையான ராகத்தோடு ரிக்கற் கொடுக்கத் தொடங்கினார் எனது பயணத்துக்கான முழு ரிக்கற் ரூபா பத்தையும் சிறுமி நித்தியகலாவிற்குத் துறைமுகம் வரையிலான பயணத்துக்குரிய அரை ரிக்கற்றுக்கான மூன்று ரூபாவையும் நான் ஒப்புக்கொண்டபடி நடத்துநரிடம் கொடுத்து ரிக்கற்றுக்களைப் பெற்றுக் கொண்டேன்.

பேருந்து புறப்பட்டது. சிறுமியின் மூன்று ரூபாய் ரிக்கற்றை அவளிடமே கொடுத்தேன். அதை அவள் வாங்கிக் கொண்டாள். சிறுமிக்குச் செய்த சிறு உதவியால் எனக்குள் விளைந்ததோ ஓர் உல்லாசம் மிகுந்த எண்ணப் பேருலா. நான் மகிழ்ந்திருந்தேன்.

ஆனால் அவளின் முகத்தில் மகிழ்ச்சிக்குப் பதிலாக இருள் குவியத் தொடங்கியது. கண்களைக் கசக்கினாள். அவள் விம்மலுடன் மீண்டும் அழத் தொடங்கினாள்.

என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவள் ஏன் அழுகிறாள்? என் மனம் குழம்பியது.

சிறிது நேரத்திற்கு முன்னர் நான் கொண்டிருந்த பெருமிதம் அவளது செயற்பாட்டினால் வீழ்ந்து நொருங்கியது. அவளது அழுகைக்கான காரணம் எனக்குப் புரியவில்லை.

அவளிடமே கேட்டேன்

"ஏனம்மா அழுகிறாய்?"

"மிச்சக்காசு". "அவள் வாக்கியத்தை முடிக்காமலேயே இழுத்தாள்.

மிச்சக்காசு என்னை உசுப்பியது என் மகிழ்ச்சி குலைந்தது

நான் அப்பொழுதுதான் அவளது விசேட தேவையைத் தெரிந்து கொண்டேன். தொலைந்து போன காசில் பஸ்ஸுக்கான ரிக்கற் காசு போனால் மீதியான இரண்டு ரூபா இல்லாமல் அவள் வீட்டுக்குப் போக முடியாது அப்படி வீட்டுக்குப் போனால் காசைத் தொலைத்தமைக்காகப் பெற்றோர் அவளை ஏசுவார்கள், அடிப்பார்கள்.

அதற்குப் பயந்தவள் காசைத் தொலைத்தமையை பெற்றோர் அறியாதிருக்க வேண்டுமெனில் அவளுக்கு மிச்சக்காசு வேண்டும்.

அந்த மிச்சக் காசையும் நான் கொடுத்தாக வேண்டும்.

அவளது பிரதான தேவை அந்த மிச்சக்காசுதான்.


பத்தாம் வகுப்பில் அன்று என்னிடம் அடிவாங்கி அழுது கொண்டிருந்த விமலனை எண்ணிப்பார்த்தேன். அவனிடம் எதனையும் விசாரிக்காமல் அவனை நான் எண்ணியபடி தண்டித்தமை பெரிய தவறாகத் தோன்றியது.

அவன் எல்லாப் பாடங்களுக்கும் ஒரேயொரு கொப்பியைப் பயன் படுத்துவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அக்காரணங்களை அவனிடமே கேட்டறிந்தாற்தான் அவனது பிரச்சினைகளை அறிந்து கொள்ளலாம். அந்தப் பிரச்சனைகளுக்கான காரணங்கள் பலவேளைகளில் அவனுடைய பக்கத்தின் நியாயங்களாகவே இருக்கலாம். எந்த உண்மைகளையும் அறிந்து கொள்ள முயற்சிக்காமலேயே எமது தீர்மானங்களை நாமே எடுப்பதனால் ஏற்படும் பாரிய தவறுகளுக்கு நாமே காரணராகி விடுகிறோம்.

ஒவ்வொரு பிள்ளையினது தேவைகளும் சிந்தனைகளும் தனித்துவமானவை. அவற்றை அறிந்து கொள்ளாமல் உணர்ந்து கொள்ளாமல் செயற்படுதல் மிகப் பெரிய தவறு என்பதை நித்தியகலாவின் தேவை எனக்கு விளங்க வைத்தது.

நான் செய்யும் ஒவ்வொரு செயற்பாடும் வேறொருவரின பூரண விசாரணைக்கும் ஆய்வுக்கும் உட்படுத்தப்படுமாயின் நானே குற்றவாளியாகும் சந்தர்ப்பங்கள் நிறையவே இருக்கின்றன. எனவே எனது செயற்பாடுகளை நானே ஆய்வுக்கு உட்படுத்தி என்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற முழுமைக்குள் எனது சிந்தனை பயணப்பட்டது.

ஆசிரியனொருவன் நீதிமானாக இருக்காதவரை கற்பித்தல் இலகுவானதல்ல..



விமலன் வகுப்பில் அழுது கொண்டிருந்த காட்சி என் உள்ளத்தை உறுத்தியது.

அவன் பெற்றோரின்றி ஏழைப்பாட்டியின் பராமரிப்பில் வளர்பவன்.

என் கண்கள் கலங்கின, என் மனச்சாட்சி என்னை வேதனைக்குள் புரட்டியது.

நான் ஒவ்வொரு பிள்ளையிடமிருந்தும் எதிர்பார்க்கும் விடயத்தைப் பெறுவதற்காகப் பிள்ளையின் எதிர்பார்ப்புகளை அலட்சியம் செய்து செயற்பட்டமையை உணர்கிறேன்

என்னிடம் உளவியல் அறிவு இல்லை என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்.

ஆசிரியனாக நான் தேடித் தொடரும் பயணம் நீள்கிறது.

கற்றல் கற்பித்தல் அனுபவங்கள் தரும் உளவியல் விளக்கங்களால் விளைந்த அறிவினை ஏற்றுச் செயற்பட வேண்டும் என்பதை இப்பொழுது உணர்கிறேன். ஒவ்வொரு மாணவனையும் அவனது எண்ணங்களையும் அவனது செயற்பாடுகளையும் தெரிந்து அவதானித்துக் காரணங்களைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப என்னை நானும், அவனை அவனும் மாற்றி கொள்ளப் பரிகாரம் காணுதல் அவசியமாகிறது.

எமது ஊறு விளைக்கும் தண்டனையை விலக்கி எம்மால் வழங்கப்படும் அறிவுரையும் வழிகாட்டல்களும் செறிவான சிந்தனைக்கும் செயற்பாட்டுக்கும் தூண்டும் எனத் துணிதல் வேண்டும்

சிறுமி நித்தியகலா எதிர்பார்த்த இரண்டு ரூபாவை இப்பொழுது அவளிடம் கொடுப்பதன் மூலம் களவு, பொய் என்பவற்றை ஊக்குவிப்பதாக அது அமைந்து விடக் கூடாது என்பதனால் அவளின் பெற்றோரைக் காணும் ஆவலோடு இப்பொழுது நான் அவளுடன், அவளின் வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்.



# நான்காம் தரம் : தேசிய மட்டத்திலான கணிப்பீடு

மா. கருணாநிதி

**2008இல் நான்காம் தரத்தில் கற்ற மாணவர்களின் அடைவுமட்டம் பற்றிய தேசியமட்டத்திலான கணிப்பீடு - 2009**

நான்காம் தரத்தில் கற்ற மாணவரின் அடைவுமட்டம் தொடர்பாக 2009ஆம் ஆண்டில். மூன்றாவது முறையாக மேற்கொள்ளப்பட்ட தேசிய மட்டத்திலான கணிப்பீடு பற்றிய முடிவுகள் இக்கட்டுரையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இதனை ஒத்த ஆய்வுகள் 2003 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டதுடன் அவ்ஆராய்ச்சிகள் பற்றிய முடிவுகள் கல்வி அமைச்சுக்கும் மாகாணக் கல்வி அமைச்சுகளுக்கும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவனம் மற்றும் நிதி ஆணைக்கழு ஆகியனவும் இத்தகைய முடிவுகளை அறிவதில் ஆர்வம் காட்டுவதுடன் அத்தகைய முடிவுகளின் அடிப்படையில் பல கொள்கைத் தீர்மானங்களையும் மேற்கொண்டு வருகின்றன.

தமது கல்வி மேம்பாட்டில் அக்கறைகொண்டுள்ள மாகாணங்களும் கல்வி வலயங்களும் பல விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதன விளைவான மாணவர் அடைவில் மாற்றங்கள் ஏற்பட்டுவருவதனை ஆராய்ச்சிகள் இனங்கண்டுள்ளன. ஆயினும் சில மாகாணங்களின் நிலைமைகளில் பாரிய மாற்றங்கள் இன்னும் ஏற்படாமல் உள்ளன.

தேசிய கல்வி ஆணைக்குழு 2003இல் வெளியிட்ட அறிக்கை கல்வியில் நியாயத்தன்மையை உறுதிசெய்தல மற்றும் உன்னதத்தை மேம்படுத்துதல், இலங்கையின் கல்வி முறையிலுள்ள வேறுபாடுகளைக் குறைத்தல் என்னும் விடயங்களை விரிவாக எடுத்துக் காட்டியுள்ளது. கல்வியமைச்சின் கல்வித்துறைசார் அபிவிருத்திக்கான சட்டகம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் (ESDFP) தொடர்பான அறிக்கையிலும் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியில் நியாயத்தன்மையுடன் கூடிய வாய்ப்புகளை வழங்குவதுடன் கல்வியின் தராதரம் பேணுதல் பற்றியும் பிள்ளைகளின் தேவைக்கும் ஆற்றலுக்கும் ஏற்பக் கல்வியை வழங்குதல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையத்தின் ஆராய்ச்சி நோக்கங்கள் மேற்கூறிய விடயங்கள்பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் முன்னெடுத்துச் செல்லும் வகையில் அமைந்துள்ளன.

தேசிய மட்டத்திலான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்குப் பல நோக்கங்கள் அடிப்படையாக உள்ளன.

1. இலங்கையில் நடைமுறையிலுள்ள கல்விமுறையின் கீழ் மாணவர்கள் எவ்வளவுதூரம் கற்று வருகின்றனர்?
2. எமது எதிர்பார்ப்புகளும் கலைத்திட்ட இலக்குகளும் நிறைவேற்றப்படுகின்றனவா? மாணவர்கள் கற்றலுக்கு ஆயத்தப்படுத்தப்படுகின்றனரா?
3. மாணவரின் அறிவு மற்றும் திறன்கள் தொடர்பான பலம் மற்றும் பலவீனங்களுக்கான சான்றுகள் உள்ளனவா?
4. குறிப்பிட்ட உபகுழுக்கள் கணிப்பீட்டுப் பரீட்சையில் குறைந்த மட்டத்தில் செயற்படுகின்றன. ஏன்? உதாரணமாக அடைவுமட்டத்தில் (அ) ஆண்கள் மற்றும் பெண்கள் (ஆ) நகரம் மற்றும் கிராமம் (இ) தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலம் (ஈ) நாட்டின் பிராந்தியங்கள் என்ற அடிப்படைகளில் உள்ள குறைபாடுகளை அறிதல்
5. வளங்களைப் பகிர்ந்தளிப்பதில் தராதரங்கள் பேணப்படுகின்றனவா?
6. காலப் போக்கில் மாணவர் அடைவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றனவா?

இத்தகைய வினாக்களுக்கு விடைகாணும் பொருட்டு தேசிய மட்டத்திலான அடைவுமட்டம்பற்றிய கணிப்பீடு இன்றியமையாதது.

2009இல் தேசிய கல்வி ஆராய்ச்சி மதிப்பீட்டு நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஒரு மாகாணத்திலிருந்து 51 பாடசாலைகள் என்ற அடிப்படையில் 9 மாகாணங்களிலிருந்தும் மொத்தமாக 458 பாடசாலைகளும் அவற்றிலிருந்து 12699 மாணவர்களும தெரிவுசெய்யப்பட்டனர். ஆயினும் வடமாகாணத்தில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து 19 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பரீட்சை நடத்தப்பட்ட காலத்தில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்தமை மையால் பரீட்சைகளில் பங்குபற்ற முடியவில்லை.. சிங்கள மற்றும் தமிழ்

மொழி மூலம் தோற்றிய ஏனைய மாணவர்கள் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகள் முக்கியமான பல தகவல்களை வெளிக் கொணர்ந்துள்ளன.

இச்சோதனை 2009 மே மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. பரீட்சை நடைமுறைகளைக் கண்காணிப்பதற்கென மேற்பார்வையாளர்களுடன் மேலதிகமாக 458 கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர்."

நாடளாவிய ரீதியில் மாணவரின் அடைவுக் கோலங்களை அவதானிக்கும் பொழுது, சிங்கள மொழி, தமிழ்மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திருப்திகரமான நிலை காணப்படுவதுடன் கூடுதலான சதவீதமான மாணவர்கள் உயர் புள்ளிகளையும் பெற்றுள்ளனர். முதல்மொழி என்ற அடிப்படையில் நோக்குமிடத்து சிங்கள மொழியிலும் பார்க்க தமிழ்மொழியில் மாணவர் அடைவுமட்டம் குறைவாக உள்ளதுடன் குறைந்த சதவீதமான" மாணவர்களே உயர்புள்ளிகளைப் பெற்றுள்ளனர். அவ்வாறே ஆங்கில மொழியிலும் அடைவுமட்டம் பொதுவாக உயர்மட்டத்தில் காணப்பட்டாலும் இப்பாடத்தில் இரண்டு வகைப்பட்ட போக்கினை இனங்காண முடிந்தது."

முதல் மொழியில் மாணவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளைப் பரிசீலிக்கும் பொழுது பல ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் காணலாம். சிங்கள மொழியில் தேசிய சராசரி 75.55 ஆகும். மேல், வடமேல், சப்ரகமுவ மாகாணங்கள் தேசிய சராசரியிலும் பார்க்கக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளன. மத்திய, வட மத்திய மற்றும் தென் மாகாணங்கள் தேசிய சராசரிக்கு அண்மிய நிலையிலும் ஊவா மாகாணம் தேசிய சராசரியிலும் குறைவாகவும் உள்ளது. ஆயினும் அம்மாகாணத்தின் சராசரிப் புள்ளியும் 60.0 இன் மேலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்மொழியில் தேசிய சராசரி 63.38 ஆகும். சிங்கள மொழிச் சராசரியுடன் ஒப்பிடுகையில் 12.6 வேறுபாடு காணப்பட்டுள்ளது. தமிழ்மொழி அடைவுமட்டத்தைப் பொறுத்த வரையில் வட மாகாணம் முதல் நிலையில் உள்ளது (72.35). வட, மேல், தென், மற்றும் வடமேல் மாகாணங்கள் தேசிய சராசரியிலும் பார்க்கக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளன. கிழக்கு மாகாணம் தேசிய சராசரிக்கு மிக அண்மியதாக உள்ளது. மத்திய, வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் அடைவுமட்டம் குறைவாகக் காணப்படுகின்றது. (பார்க்க அட்டவணை: 1)"

### அட்டவணை 1

இடைப்பெறுமானங்கள் மாகாண அடிப்படையில் 2009

| மாகாணம் | சிங்கள மொழி | தமிழ் மொழி | ஆங்கிலமொழி | கணிதம் |
|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | 73.17 | 59.25 | 51.78 | 67.59 |
| தென் மாகாணம் | 71.10 | 66.34 | 57.04 | 75.73 |
| கீழ் மாகாணம் | 75.61 | 62.15 | 46.68 | 63.80 |
| வட மத்திய மாகாணம் | 72.30 | 58.30 | 51.02 | 73.34 |
| வடமேல் மாகாணம் | 79.54 | 66.07 | 57.91 | 78.32 |
| வட மாகாணம் | 60.54 | 72.35 | 52.15 | 68.69 |
| சப்பிரகமுவ மாகாணம் | 75.73 | 59.35 | 56.17 | 76.27 |
| ஊவா மாகாணம் | 68.83 | 54.68 | 50.96 | 70.36 |
| மேல் மாகாணம் | 77.74 | 65.96 | 63.76 | 76.95 |

ஆங்கில மொழியில் மாணவர் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் தேசிய சராசரி 55.91 ஆகும். மேல் மாகாணத்தில் மாணவர்களில் பெரும்பாலானோர் சராசரியிலும் பார்க்க கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். தென் மாகாணம் வடமேல் மாகாணம் மற்றும் சப்பிரகமுவ மாகாணம் தேசிய சராசரியிலும் பார்க்க உயர்வான புள்ளிகளைப் பெற்றுள்ளன. மத்திய, வட மத்திய, வட மாகாணங்கள் இடைநிலையிலும ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்கள் தேசிய சராசரியிலிருந்தும் பெரிதும் விலகியும் உள்ளன. (பார்க்க அட்டவணை-1) அத்துடன் ஆங்கில மொழியில் மாகாண மட்ட அடைவுமட்டத்தில் காணப்படும் வேறுபாடுகள் ஏனைய மொழிகளில் காணப்படுவதிலும் பார்க்க கூடுதலாக உள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்

அட்டவணை 2 மாகாண அடிப்படையில் மூன்று பாடங்களிலும் 50 புள்ளிகளிலும் பார்க்கக் குறைவாகப் புள்ளிகள் பெற்ற மாணவர்களின் சதவீதத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

**அட்டவணை: 2**

**50 இலும் குறைவாகப் புள்ளிகள் பெற்ற மாணவர் சதவீதம் - 2009**

| மாகாணம் | சிங்கள மொழி | தமிழ் மொழி | ஆங்கிலமொழி | கணிதம் |
|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | 13.08 | 35.40 | 44.09 | 23.24 |
| தென் மாகாணம் | 13.14 | 30.00 | 37.61 | 14.85 |
| கீழ் மாகாணம் | 14.57 | 29.00 | 58.10 | 29.84 |
| வட மத்திய மாகாணம் | 14.15 | 38.50 | 49.42 | 18.24 |
| வடமேல் மாகாணம் | 10.29 | 28.90 | 35.20 | 13.63 |
| வட மாகாணம் | 40.54 | 15.10 | 45.80 | 20.55 |
| சப்பிரகமுவ மாகாணம் | 11.67 | 35.60 | 38.99 | 12.94 |
| ஊவா மாகாணம் | 15.43 | 42.60 | 48.15 | 19.18 |
| மேல் மாகாணம் | 10.22 | 24.70 | 25.91 | 13.51 |

சிங்களமொழியில் மேல்மாகாணத்திலும் வடமேல் மாகாணத்திலும் இத்தகைய மாணவர் சதவீதம் ஏறக்குறைய 10.5 சதவீதமாக உள்ளது. ஏனைய மாகாணங்களில் சராசரியாக 14 சதவீதத்தினர் அத்தகைய நிலையில் உள்ளனர். தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் 50 சதவீதத்திலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களின் தொகை மிகஉயர்வாக உள்ளது. மத்திய, வட மத்திய, சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் 35 சதவீதத்திற்கு மேற்பட்டோர் இத்தகையோராகக் காணப்படுகின்றனர். ஏனைய மாகாணங்களில் இத்தகையோர் 15 சதவீதத்திற்கும் மேலாகக் காணப்படுகின்றமை பாரதூரமான விளைவாகும். ஆங்கில மொழியைப் பொறுத்தவரையில் அடைவுமட்டத்தில் முதல்நிலையிலுள்ள மேல் மாகாணத்தில்கூட ஏறக்குறைய 26 சதவீதத்தினர் 50 இலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளன கீழ்மாகாணத்தில் இத்தகையோர் 58 சதவீதத்திலும் மேலாகக் காணப்படுகின்றமை அம்மாகாணத்தில் ஆங்கில மொழியின் தராதரம் மிகவும் குறைந்த நிலையிலுள்ளது என்பதற்குச் சான்றாகின்றது. ஏனைய மாகாணங்களில் சராசரியாக 40 சதவீதத்திற்கு மேற்பட்டோர் இவ்வாறான நிலையில் உள்ளனர். கணித பாடத்தில் மத்திய மாகாணமும் கீழ் மாகாணமும் 50 இலும் குறைவாகப் புள்ளிகள் பெறும் மாணவர் தொகையைக் கூடுதலாகக் கொண்டுள்ளன. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் பொழுது பொதுவாக எல்லாப் பாடங்களிலும் பெருந்தொகையான மாணவர்கள் உரிய தேர்ச்சியை அடையவில்லை என்பது தெளிவாகின்றது.

**அட்டவணை 3.**

**பாடசாலை வகையின் அடிப்படையில் இடைப்பெறுமானம் - 2009**

| பாடசாலை வகை | சிங்கள மொழி | தமிழ் மொழி | ஆங்கிலமொழி | கணிதம் |
|---|---|---|---|---|
| 1AB | 82.01 | 77.58 | 68.29 | 81.25 |
| 1C | 74.89 | 66.86 | 54.94 | 73.94 |
| 2 | 70.67 | 59.76 | 49.97 | 68.41 |
| 3 | 78.79 | 60.46 | 50.08 | 73.49 |
| நாடளாவிய | 75.55 | 66.16 | 55.91 | 73.18 |

பாடசாலை வகையின் அடிப்படையிலான இடைப் பெறுமானங்கள் அவற்றுக்கிடையில் நிலவும் தராதர வேறுபாடுகளை எடுத்துக்காட்டுகின்றன. 1AB வகைப பாடசாலைகள் சகல பாடங்களிலும் முதல் நிலையில் உள்ளன. இலங்கையிலுள்ள பாடசாலைகளின் தொகையின் இத்தகைய பாடசாலைகளின் தொகை மிகக் குறைவாகும். என்னவெனில் 3 ஆம் வகைப் பாடசாலைகளின் அடைவுமட்டம் 1C பாடசாலைக்கு

இணையாக உள்ளதுடன் 2ஆம் வகைப் பாடசாலைகள் சகல பாடங்களிலும் குறைந்த மட்டத்தில் செயலாற்றுகின்றன என்பது இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய விடயமாகும். அடைவுமட்ட மேம்பாடு குறித்து 2ஆம் வகைப் பாடசாலைகள் கூடுதலான கவனம் எடுக்க வேண்டும் என்பதனை எமது ஆய்வு முடிவுகள் தொடந்தும் எடுத்துக்காட்டி வந்துள்ளது.

**அட்டவணை 4**

*பால் வகையின் அடிப்படையில் இடைப்பெறுமானம் - 2009*

| பாடசாலை வகை | சிங்கள மொழி | தமிழ் மொழி | ஆங்கிலமொழி | கணிதம் |
|---|---|---|---|---|
| பெண்கள் | 80.25 | 68.31 | 59.77 | 76.88 |
| ஆண்கள் | 70.70 | 58.31 | 51.90 | 69.39 |
| நாடளாவிய | 75.55 | 63.88 | 55.90 | 73.18 |

2003 மற்றும் 2007 ஆம் ஆண்டு ஆய்வுகளில் அறியப்பட்டுள்ளமையைப் போலவே 2009ஆம் ஆண்டிலும் பெண் பிள்ளைகளின் அடைவுமட்டம் ஆண் பிள்ளைகளின் அடைவுமட்டத்திலும் பார்க்க உயர்வாக இருக்கின்றமையை அட்டவணை 4 எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய செல்நெறியை சகல மாகாணங்களிலும் தெளிவாக இனங்காணலாம்.

அவ்வாறே நகர்புறப்பாடசாலைகளின் அடைவு மட்டமானது கிராமப்புறப்பாடசாலைகளிலும் உயர்வாக உள்ளமையை அட்டவணை 5 இல் காணலாம்.

**அட்டவணை 5**

*இடைப்பெறுமானம் - அமைவிட அடிப்படையில் 2009*

| | சிங்கள மொழி | தமிழ் மொழி | ஆங்கிலமொழி | கணிதம் |
|---|---|---|---|---|
| நகரம் | 77.66 | 71.77 | 53.23 | 77.76 |
| கிராமம் | 74.96 | 61.37 | 65.88 | 71.96 |
| நாடளாவிய | 75.55 | 63.38 | 55.90 | 73.18 |

2009ஆம் ஆண்டிற்கான தேசிய கணிப்பீட்டின் முடிவுகள் 2007 ஆம் ஆண்டிலே இனங்காணப்பட்ட கற்றல் விளைவுகளின் சாதகமான செல்நெறியை உறுதிசெய்வதாக உள்ளது. இத்தகைய முடிவுகள் இலங்கையின் ஆரம்பக் கல்வியின் தராதரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றமையை குறிப்பிடுகின்றது.

தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்ற கல்விச் சீர்திருத்தம் மற்றும் கல்வித்துறைசார் அபிவிருத்திச் சட்டக நிகழ்ச்சித்திட்டங்களும் மாகாணங்களுக்கு இடையில் நிலவிவருகின்ற வேறுபாடுகளைக் குறைத்து நியாயத்தன்மையை அடைதல் நோக்கிச் செயற்படுகின்றது என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றது.

கடந்த மூன்ற ஆண்டு காலப்பகுதியில் சிங்களமொழி மற்றும் ஆங்கிலமொழியில் மாகாண மட்டத்தில் சாதகமானதொரு போக்கு காணப்படுகிறது. மேலும் 2ஆம் வகைப் பாடசாலைகளை ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிடும்பொழுது வினையாற்றலில் குறைவான தன்மை காணப்பட்ட போதிலும் கற்றல் விளைவுகளை அடைவதில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

ஆயினும் சில எதிர்மறையான செல்நெறிகள் என்ற வகையில் கணித பாடத்தின் சராசரி வினையாற்றல், தமிழ் மொழிமூலம் பயிலும் மாணவரின் வினையாற்றல் காணப்படும் குறைந்த நிலை, பாடசாலைகளின் அமைவிடம் சார்ந்த வேறுபாடுகள் போன்றவை கல்விக் கொள்கை உருவாக்குவோரின் கவனத்தையும் அந்தந்த மாகாணக் கல்வியமைச்சுகள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களின் கவனத்தை வெகுவாக ஈர்க்கும் எனக் கருதுகின்றோம். கல்வித் தராதரத்தை மேம்படுத்துவதில் அவர்கள் திட்மிட்டமுறையில் துரித நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் எனவும் எதிர்பாக்கின்றோம்.

கலாநிதி மா. கருணாநிதி
தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையம், கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக் கழகம்



# சமூக மாற்றமும் இலக்கணம் மற்றும் மொழியியல் வளர்ச்சியும்

சு. இராசாராம்

மொழி என்பது ஒரு சமூகச் செயற்பாங்கு. எந்தவொரு தனிமனிதனும் தனக்கென ஒரு மொழியை உருவாக்கிக் கொள்ள முடியாது. குழந்தை ஏற்கெனவே மொழி வழங்குகிற ஒரு சமுதாயத்தில் பிறக்கிறது. குழந்தை தன் சமுதாயத்தினர் பேசும் மொழியைக் கற்க ஆரம்பிக்கும்போது அச் சமுதாயத்தினரின் உலகத்தைப் பற்றிய கருத்தையும் தெரிந்து வளர்கிறது. இம்மொழி கற்றலில் குறிகளுக்கும் அவை உணர்த்தும் கருத்துப் படிவங்களுக்கும் இடையேயுள்ள தொடர்பைக் குழந்தை கற்றுக் கொள்கிறது. இத்தொடர்பு இயற்கையானது என்பதைவிட மரபுவழிப்பட்டது; ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டது; குறிப்பிட்ட மொழிக்கே உரியது எனலாம். எனவே, மொழி என்பது நம் எண்ணப் போக்குகளின் மீது வலிந்து புகுத்தப்பட்ட பழமை முயற்சி என்பது பொருந்தும்.

> "மொழியிலுள்ள சொற்களின் பொருள் ஒரு சமுதாயத்தின் ஏற்கெனவே வரையறுக்கப்பட்ட அறிவுக்கிடங்கு ஆகும். இப்பொருளைக் கற்பதன் மூலமாகக் குழந்தை சமூக மற்றும் பண்பாட்டு மதிப்புக்களைக் கற்றுக் கொள்கிறது. இக் கற்றல், மொழி என்னும் ஊடகம்வழி நடைபெறுகிறது. இக் கற்றல் மூலம் குழந்தை தான் பிறந்த சமுதாயத்தின் ஏற்ற பாத்திரமாக - ஏற்கெனவே நிலைநிறுத்தப்பட்டுள்ள நம்பிக்கைகளுக்கு உரிய பாத்திரமாகத் தன்னை உருவாக்கிக் கொள்கிறது"

எனக் கூறுவார் ரோஜர் பௌலர் (Roger Fowler) என்பார்.

சமுதாயத்திற்கும் மொழிக்கும் இடையேயுள்ள இவ்வுறவை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். சமுதாயம் மாறும் தன்மையது. இப் பேருண்மையை ஏற்றுக் கொண்டால் மொழி நிலையானது என்னும் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. காலந்தோறும் மொழியின் உள்ளேயும் புறத்தேயும் மாற்றங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. இவை இவ்வுறவை உறுதிப்படுத்துகின்றன. இம் மாற்றங்களை ஏற்கெனவே ஒழுங்குபடுத்தப்பட்ட மொழி விதிகளோடு ஆவணப்படுத்தவே இலக்கணங்கள் தோன்றுகின்றன. இவ்விலக்கணங்களின் பரிணாம வளர்ச்சிதான் மொழியியல்.

மொழியின் பரிணாம வளர்ச்சி மாறிவரும் சமுதாயத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டது. இவ்வகையில் இலக்கணமும் மொழியியலும் நிறைவேற்றி வந்திருக்கின்ற சமூகத்தேவைகளை வரலாற்று நோக்கில் காண்பதும், இன்றைய தேவைகளை இனங்கண்டு இலக்கணம் மற்றும் மொழியியல் பயன்பாட்டை வலியுறுத்துவதும் இக்கட்டுரையின் நோக்கங்களாகும்.

தமிழ் இலக்கண வளர்ச்சி வரலாற்றைக் காலந்தோறும் மாறி வந்திருக்கின்ற தமிழ்ச் சமுதாய வளர்ச்சி வரலாற்றோடு இணைத்துப் பார்ப்போமேயானால் முக்கியமாக ஐந்து காலக்கட்டங்களில் தமிழ் இலக்கணம் புதுவடிவம் பெற்று வளர்ந்து வந்துள்ளதை அறியலாம். தொல்காப்பியம், வீரசோழியம், பிரயோக விவேகம், ஐரோப்பியத் தமிழ் இலக்கணங்கள், மொழியியல் இலக்கணங்கள் என்னும் ஐவகை இலக்கண மரபுகள் இக்காலக் கட்டங்களைப் பிரதிபலிக்கின்றன. இவற்றுள் தொல்காப்பிய இலக்கணமரபைப் பழைய இலக்கண மரபோடு ஒப்பிடலாம். பழைய கிரேக்க இலக்கண அறிஞர்கள் 'இலக்கணம்' என்னும் சொல்லுக்குப் 'படித்தல்' மற்றும் எழுதல் கலை (art of reading and writing)' எனப் பொருள் கூறுவர். இவ் விளக்கம கிரேக்க இலக்கண அறிஞர்களின் இலக்கியச் சார்பைக் காட்டுகின்றது.

'இலக்கியத்தினின்று எடுபடுவது இலக்கணம்' என்னும் தமிழ் இலக்கண மரபு இக்கிரேக்கக் கோட்பாட்டை உடையது எனலாம். ஆனால், தொல்காப்பியத்திற்குப் பின்னால் எழுதப்பட்ட சில தமிழ் இலக்கணங்கள் இம்மரபிலிருந்து மாறித் தனி இலக்கணக் கோட்பாடுகளை உருவாக்கின. இக் கோட்பாட்டு உருவாக்கத்திற்குத் தமிழ் சமுதாய மாற்றங்கள் அவ்வப்போது அடிப்படையாயின. களப்பிரர் காலந்தொட்டு மாறிவந்த தமிழ்ச் சமுதாயத்தில் இலக்கணத்தின் தேவையும் பயன்பாடும் மாறி வந்துள்ளன என்பதை நம்மால் அறிய முடிகிறது. இடைக்காலச் சோழர் காலத்தில் எழுதப்பட்ட வீரசோழியத்தை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இடைக்காலச் சோழர் காலத்திலிருந்து இலக்கண உருவாக்கம் சமுதாய அமைப்பை அடிப்படையாகக் கொண்டு வளர ஆரம்பித்தது எனலாம். ஒரு மொழிச் சமுதாயமாக இருந்து வந்த தமிழகம் களப்பிரர் காலந்தொட்டுப் பன்மொழிச் சமுதாயமாக மாறியது. தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், பாலி, பிராகிருதம் ஆகிய ஏழுமொழிகள் அடங்கிய பன்மொழி நாடாகத் தமிழகம் வளர்ந்தது. தமிழ் அக்-

காலச் சேர, சோழ, பாண்டிய நாட்டுப் பகுதிகளிலும், தெலுங்கு வேங்கிநாட்டுப் பகுதியிலும். கன்னடம் மைசூர்ப் பகுதியிலும், மலையாளம் தகுநிலை பெறா மொழிகளாகச் சேரநாட்டின் சில பகுதிகளிலும் பேசப்பட்டு வந்தன. சோழப் பேரரசுக்கு உட்பட்ட இவ்வனைத்துப் பகுதிகளிலும் சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி ஆகிய மொழிகள் சமய மொழிகளாகவும் இலக்கிய மொழிகளாகவும் இருந்தன.

இம் மொழிகளைத் தவிரக் கடல்கடந்த தென்கிழக்காசிய நாடுகளான இலங்கை, பர்மா, சீனம், கம்பூச்சியா, கம்பூச்சியாவிற்குக் கிழக்கே இன்று தென் வியட்நாம் என்று அழைக்கப்படும் அன்றைய சம்பா, கெட்டா, மலாக்கா, சாவகம், சுமத்திரா ஆகியவற்றோடு கொண்டிருந்த வாணிகம் மற்றும் நட்புறவினால் பல்வேறு இந்தோபர்மிய மொழிகளுக்கும் சோழர்கள் அறிமுகமாகியிருந்தனர். இதன் விளைவாகச் சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி முதலிய சொற்களோடு அந்தந்த நாட்டு மொழிச் சொற்களும் மிக அரிதாகத் தமிழில் இடம் பெற்றன. இவ்வாறு தமிழ்ச் சமுதாயம் பல மொழி பேசும் பன்மொழிச் சமுதாயமாகச் சோழர் காலத்தில் உருவானது.

இப் பன்மொழிச் சமுதாயத்தில் வடமொழிகளான சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி ஆகியவை தனிச் செல்வாக்கு பெற்றிருந்தன. இலக்கியத்தமிழில் வடமொழியின் கலப்பு, அக்கால இலக்கிய வழக்கிலும் உலக வழக்கிலும் வழங்கி வந்த வடமொழிக் கதைகள் தமிழிலக்கியங்களில் வடமொழி இலக்கிய வடிவங்களின் தாக்கம் முதலானவை இச்செல்வாக்கைக் காட்டுவனவாகும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இப் பன்மொழிச் சமுதாயச் சூழமைவு மொழிக் கல்வியில் புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்தது. தமிழ் மட்டுமே அறிந்திருந்த மக்கள் பிறமொழிக் கல்வியில் ஆர்வம் காட்ட ஆரம்பித்தனர். குறிப்பாக, சமஸ்கிருத மொழியாளர்கள் தமிழைக் கற்கவும், தமிழ் தாய்மொழியாளர் சமஸ்கிருதத்தைக் கற்கவும் வேண்டிய சமூக, சமய, அரசியல், மொழிச் சூழல்கள் இக்காலத்தில் உருவாயின.

சமயங்களைப் பொறுத்தவரையில் சமயச் சார்வை இனங்காட்டும் குறியீடாக மொழிகள் வளர்ந்தன. இதன் விளைவாக மொழி கற்றல், கற்பித்தல் உணர்வு சமயவாதிகளிடையே பெருகியது. வைதீக சமயத்தைத் தழுவிய தமிழறிஞர்கள் சமஸ்கிருத மொழியிலும். பௌத்த சமயத்தைத் தழுவிய தமிழறிஞர்கள் பாலி மொழிகளிலும் சிறந்து விளங்கினர். இவர்களுள் வைதீக சமயத்தினர் வேதங்கள் சமஸ்கிருத மொழியில் மட்டும் எடுத்துரைக்கப்பட வேண்டும் என்னும் கருத்துடையவராக இருந்தாலும், எல்லாச் சமயத்தினராலும் சமஸ்கிருதம் விரும்பிக் கற்கப்பட்டதாலும் கருத்துப் பரிமாற்றத்திற்காக மற்றொரு மொழியைக் கற்பதில் ஆர்வம் காட்டவில்லை. ஆனால். பௌத்த சமயத்தினர் புத்தரின் கருத்துகள் பாமரரைச் சென்றடைய அவரவர் தாய்மொழியிலேயே எடுத்துரைக்கப்பட வேண்டும் என்னும் நோக்கமுடையவராய் இருந்



தனர். இந்நோக்கத்தை நிறை வேற்றப் புதிய மொழிகளைக் கற்க வேண்டியதன் தேவை உருவானது. இத்தேவை அதுகாறும் வழக்கிலிருந்த ஒருமொழி இலக்கண மரபில் *(Monolingual Grammatical Tradition)* இருமொழி இலக்கண அணுகுமுறையை அறிமுகப்படுத்தக் காரணமானது. தமிழும் வட மொழியும் கலந்த வீரசோழியம், பௌத்த சமயத்தைச் சார்ந்த புத்திமித்திரரால் வீரராசேந்திர சோழன் கேட்டுக் கொண்டதற்கிணங்க எழுதப்பட்டது.

வீரசோழியம் ஒரு புடைமாற்று ஒப்புமை இலக்கணம் *(Transfer Grammar)* ஆகும். இவ்விலக்கணம் தாய்மொழியைத் தவிர மற்றொரு மொழியைக் கற்பிக்க எழுதப்பட்டது. தாய்மொழி இலக்கண அறிவைத் தூண்டுவதன் மூலமாகக் கற்பிக்கப்படும் மொழியின் இலக்கணத்தை எளிதாகக் கற்பிக்கலாம் என்பதும், தாய்மொழி இலக்கணத்திற்கும் கற்பிக்கவிருக்கும் மொழியின் இலக்கணத்திற்கும் இடையே காணப்படும் அமைப்பொற்றுமைகள் கற்றலையும் கற்பித்தலையும் எளிதாக்கும் என்பதும் இவ்விலக்கணத்தின் தற்கோள்களாகும். இத்தற்கோள்களின் அடிப்படையில் தாய்மொழி இலக்கணம், கற்கும்மொழியின் இலக்கணத்திற்குப் புடைமாற்றப்படுகிறது. *(இராசாராம் 1992:265)*

புத்தமித்திரனார் வடமொழியாளர்க்குத் தமிழ் கற்பிக்க வீரசோழியத்தை எழுதினார். வடமொழியாளர்களின் தாய்மொழி இலக்கணமான சமஸ்கிருத இலக்கண அமைப்பை விளக்கி, அவ்விலக்கண அமைப்பைத் தமிழ் இலக்கண அமைப்புக்குப் புடைமாற்றித் தமிழ் இலக்கணத்தைக் கற்பிக்கும் பாங்கு வீரசோழியத்தில் காணப்படுகிறது. நூற்பா அமைப்பும், மகடூஉ முன்னிலையில் கற்பித்தல் உத்தி கையாளப்படுவதும் இதனைக் கற்பித்தல் இலக்கணம் என நிறுவப் போதிய சான்றுகளாகும்.


உலக மொழிகளின் இலக்கண வரலாற்றில் இடைக்காலத்தில் தோன்றிய இலக்கண வடிவம் இது. பழைய ஆங்கிலமொழி இலக்கணங்களுள் சில இலத்தீன் மொழி இலக்கணத்தின் அமைப்பில்

எழுதப்பட்டவை என்பர். ஆங்கில இலக்கணத்தைப் புரிந்துகொள்ள அக்கால ரோமானியர்களுக்கு இப்புடைமாற்று ஒப்புமை இலக்கணங்கள் பயன்பட்டிருக்க வேண்டும் என்கிறார் ஹாலிடே (Halliday 1966:120). இவ்வகையில் சாதாரண ஒரு மரபிலக்கணத்தைக் காட்டிலும் புடைமாற்று ஒப்புமை இலக்கணம் அழுத்தமான நோக்கமுடையது.

கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டுகளில் இலக்கணத்தைப் பற்றிய சிந்தனைப் போக்கில் முக்கியமான மாறுதல் ஏற்பட்டது. இக்காலச் சமுதாயத்தில் சமஸ்கிருதம் எல்லா நிலைகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தது. வடமொழிக்கும் தமிழுக்கும் பெரும்பான்மையும் இலக்கணம் ஒன்றே என்னும் கருத்து பெரும் புலவர்களிடையே நிலவியது. வடமொழி இலக்கண மரபையும் தமிழ் இலக்கண மரபையும் ஒப்பிட்டு நோக்கி இவற்றினிடையேயுள்ள பொதுமைக்கூறுகளை விளக்கும் இயல்பு வளர்ந்தது. இதனடிப்படையில் எழுதப்பட்ட ஒரு ஒப்பமை இலக்கணமாகக் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் சுப்பிரமணிய தீட்சிதர் எழுதிய பிரயோக விவேகம் என்னும் நூலைக் குறிப்பிடலாம். தமிழ் இலக்கண வரலாற்றில் மூன்றாவது இலக்கணக் கோட்பாடாக இவ்விலக்கண முறையைக் கருதலாம்.

கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து தமிழ் கற்பித்தலை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் புடைமாற்று ஒப்புமை இலக்கணங்கள் எழுதப்பட்டன. இடைக்காலச் சோழர் காலத்தில் இப்புடைமாற்று ஒப்புமை இலக்கணம் சமஸ்கிருத இலக்கண மாதிரியில் எழுதப்பட்டது என்றால் ஐரோப்பியர் காலத்தில் ஆங்கிலம் முதலான ஐரோப்பிய இலக்கண மாதிரியில் புடைமாற்று ஒப்புமை இலக்கணங்கள் தமிழில் எழுதப்பட்டன எனலாம். சீகன்பால்கு (1716) சென்னை ஆங்கில மிஷினரி (1778), பெஸ்கி (1882), லாசரஸ் (1878), ஆர்டன் (1934) ஆகியோரால் இத்தகைய இலக்கணங்கள் எழுதப்பட்டன. இவை அக்கால ஐரோப்பிய இலக்கணங்களைப் போல் மனப்பாடக் கற்றலுக்கு (Rote Learning) முக்கியத்துவம் அளித்தன. இலக்கண மொழிபெயர்ப்பு முறை (Grammatical Translation Method) சிறந்த கற்பித்தல் முறையாக இக்காலத்தில் கருதப்பட்டது. எனவே, இவற்றில் இலக்கண வாய்பாடுகளும் (Grammatical Paradigms) தொடரிலக்கண விதிகளும் (Syntactic Rules) இடம்பெற்றன.

தமிழ் இலக்கண மரபையொட்டிய இவ் வளர்ச்சி காலந்தோறும் மாறி வளர்ந்து வந்திருக்கின்ற தமிழ்ச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்றது. சமுதாயத் தேவைகள் மொழியில் ஏற்படுத்திய கட்டாய வடிவங்களே இலக்கண வளர்ச்சியில் நாம் காணும் இப் பல்வேறு மாதிரிகள் எனலாம். இவ்வாறு இலக்கணம் சமுதாயம் வற்புறுத்தும் மொழி மாற்றங்களை உள்வாங்கி வளர்கிறது. இதன்மூலம் ஒரு சமூகத் தேவையை நிறைவு செய்வதும் அதன் நோக்கமாகி விடுகிறது. இருபதாம் நூற்றாண்டின் அறுபதுகளில் தமிழகத்தைப்



பொறுத்தவரையில் ஒரு பல்கலைப் பாடமாக மொழியியல் அறிமுகமானது. இலக்கணத்தின் பரிணாம வளர்ச்சியின் உச்சநிலையாக மொழியியல் அறிமுகமானாலும் இரண்டாயிரமாண்டு மரபிலக்கணச் சிந்தனையில் ஊறிவிட்ட மரபிலக்கணத்தாரிடம் இவ்விலக்கண அணுகுமுறை எளிதாகச் செல்வாக்குப் பெற முடியவில்லை. இருப்பினும், இந்திய மொழிகளுள் எந்த மொழியிலும் இல்லாத அளவிற்கு மொழியியல் கோட்பாடுகளின் அடிப்படையில் மொழியியல் இலக்கணங்கள் (Linguistic Grammars) தமிழுக்கு எழுதப்பட்டன. இவ்விலக்கணங்களைத் தமிழ் மொழியின் இலக்கண அமைப்பை முழுவதுமாக விளக்க முற்பட்ட இலக்கணங்கள் எனக் கூறுவதைவிடக் கோட்பாட்டு மொழியியல் கொள்கைகளை மதிப்பீடு செய்த இலக்கணங்கள் எனக் கூறலாம்.

எழுபதுகளில் தொடங்கி மொழியியல் பல்வேறு துறைசார்ந்த பிடிப்பாகச் சமுதாய மொழியியல், கல்வி மொழியியல், உளவியல் மொழியியல், வர்ணனை மொழியியல், பயன்பாட்டு மொழியியல் என வளர்ந்தபோது உலக நாடுகளின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகான உதவியது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இக்காலத் தமிழுக்குப் புதிய இலக்கணம் எழுதல். மொழி பயிற்றுவித்தல் உன்ன-

தம் காணுதல், இலக்கியத் திறனாய்வில் மொழிநடையை ஆராய்தல், மொழிச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் வகையில் மொழித்திட்டமிடுதல், மலைவாழ் மக்களின் மொழிகளை மேம்படுத்தல் ஆகிய இன்றைய சமுதாயக் கட்டாயங்களை நிறைவேற்ற மொழியியல் சிறந்த பங்காற்ற முடியும். ஆனால் இப்பகுதிகளில் மொழியியலறிவு இன்னும் முழுவதுமாகப் பயன்படுத்தப்படவில்லை. இதனைச் சற்று விரிவாகக் காண்போம்.

ஒரு மொழியின் இலக்கண உருவாக்கம் சமூகத் தேவையை அடிப்படையாகக் கொண்டது எனப் பார்த்தோம். காலமாற்றத்திற்கேற்ப இலக்கண உருவாகத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்து வந்திருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட தொல்காப்பியம் இக்காலத் தமிழ் அமைப்பை விளக்கப் போதுமானதாக இல்லை என்ற உண்மை ஒன்றே ஓர் இலக்கணத்தின் நோக்கமும் அவ்விலக்கணம் மேற்கொண்ட மொழித்தரவும் காலந்தோறும் வெவ்வேறு மொழிச்சூழலையும் நோக்கத்தையும் கொண்டு இலக்கணங்கள் எழுதப்பட்டு வந்திருக்கின்றன. என்பதை விளக்கப்போதுமானவையாகும். ஆங்கில மொழியை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இம்மொழியில் ஒரு நூற்றாண்டுக்குள் பல்வேறு வகையான இலக்கணங்கள் எழுதப்பட்டுள்ளன. வரலாற்று இலக்கணம் (Historical Grammar), வருணனை இலக்கணம் (Descriptive Grammar), ஆக்கமுறை இலக்கணம் (Generative Grammar), மாற்றிலக்கணம் (Transformational Grammar), முறையிலக்கணம் (Systemic Grammar), அடுக்கு நிலை இலக்கணம், (Stratificational Grammar), உறவுமுறை இலக்கணம் (Relational Grammar), வேற்றுமை இலக்கணம் (Case Grammar), வகைத்தர இலக்கணம் (Scale and Category Grammar), பயிற்று இலக்கணம் (Pedagogic Grammar), உறழ்வு இலக்கணம் (Contrastive Grammar), ஒப்பியல் இலக்கணம் (Comparative Grammar), பொது இலக்கணம் (Generative Grammar)இருமொழிய இலக்கணம் (Universal Grammar) போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இவற்றுள் அறிவியல் இலக்கணம் எனப்படும் மொழியியல் இலக்கணம், பயிற்று இலக்கணம், உறழ்வு இலக்கணம், நோக்கீட்டு இலக்கணம் ஆகியவற்றை எழுத உதவும் அடிப்படை இலக்கணமாகக் கருதப்படுகிறது. இவ்விலக்கணங்கள் மட்டுமல்லாமல் இனிவரும் சமூகத் தேவைகளுக்கேற்ற இலக்கணங்களை இவ்விலக்கண அறிவின்றி எழுதவியலாது. மொழியியல் இலக்கணத்தின் பல்வேறு வகைகளான வரலாற்றிலக்கணம். வருணனை இலக்கணம். மாற்றிலக்கணம் ஆகியவை சமுதாயத் தேவைகளை உள்வாங்கி உருவானவையாகும். மொழியியல் ஒரு சிறந்த சமூக விஞ்ஞானமாக இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது இதனடிப்படையில்தான். மொழியியல் கோட்பாட்டு வளர்ச்சியை ஆழமான ஆய்வுக்கு உட்படுத்திப் பார்ப்போமேயானால் ஒவ்வொரு கோட்பாட்டிலும் துல்லியமாக இழையோடும் சமூக விழிப்புணர்வை நாம் காணமுடியும். இரண்டாவது உலகப்போரைத் தொடர்ந்து உருவான மொழிச் சிக்கல்களுக்கும் மொழி மேம்பாட்டுக்கும் இச் சமூக விஞ்ஞானத்தின் பயன்பாடு அளப்பரிது.

ஆங்கிலத்தைப் போல் இத்தகைய வளர்ச்சி தமிழில் இல்லை. ஆனால், முன்னர்க் குறிப்பிட்டது போல சமூகத் தேவைகளின் அடிப்படையில் அவ்வப்போது இலக்கணங்கள் எழுதப்பட்டு வந்துள்ளன என்பதில் இருவேறு கருத்தில்லை. தொல்காப்பியம், வீரசோழியம், பிரயோக விவேகம், ஐரோப்பியத் தமிழ் இலக்கணங்கள் எனப் படிப்படியான வளர்ச்சிநிலை, தமிழ்ச சமூக வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன. ஆனால் இன்றையத் தேவைகளை நிறைவுசெய்யப் பல இலக்கணங்கள் தேவைப்படுகின்றன. தாய்மொழி, இரண்டாம் மொழி, அயல்மொழி என்னும் நிலைகளில் தமிழ உலகெங்கும் கற்பிக்கப்பட்டு வருகிறது. இத் தமிழ்க் கல்வியை மேம்படுத்தப் பயிற்று இலக்கணங்களும், நோக்கீட்டு இலக்கணங்களும். கருத்துப் புலப்படுத்த இலக்கணங்களும் (Communicative Grammar) எழுதப் பட வேண்டும். கணிப்பொறிக்குப் புதிய இலக்கணம் இன்று தேவைப்படுகிறது. இக்காலத் தமிழில் சிறந்த ஆளுமையை வளர்க்கப் பயன்பாட்டிலக்கணம் (Usage Grammar) ஒன்று தேவைப்படுகிறது. முதனூலாசிரியன் விரித்துச் செய்த்தனைத் தொகுத்துச் செய்தலும். தொகுத்துச் செய்ததனை விரித்து செய்தலும், அவ்விருவகையினையும் தொகை விரியாகச் சொல்லுதலும், வடமொழிப் பனுவலை மொழிபெயர்த்துத் தமிழ்மொழியாற் செய்தலும்" என்னும் வழிநூல் மரபிற்கு மேலாகச் சமூகப் பிரக்ஞையுள்ள இலக்கண வகைகள் உருவாக வேண்டியது இன்று காலத்தின் கட்டாயமாகும்.

தமிழ் இலக்கண வளர்ச்சியில் பின்னடைவு, ஏற்பட்டிருப்பதற்கு ஒரு முக்கியமான காரணத்தை இங்குச் சுட்டலாம். இக் காரணம் தமிழ் இலக்கணம் அறிஞர்களின் மொழி உணர்வோடும், மொழியியல் மீதுள்ள மனப்பாங்கோடும் தொடர்புடையது. மொழி மாறும் தன்மையது என்னும் யதார்த்தத்தை நம் இலக் கண அறிஞர்கள் இன்றும் ஏற்றுக்கொள்ளத் தயாரா இல்லை. மொழி மாற்றம் தவிர்க்கப்பட வேண்டும் என்பது இவர்களது கருத்து. தொல்காப்பியரும் நன்னூலாரும் விடுவித்துள்ள இலக்கண விதிகளுக்கு மிஞ்சிய மொழித் தரவுகள் இவர்களது இலக்கண வரம்பிற்கு உட்பட்டவை அல்ல. ஆனால் பேச்சிலும் எழுத்திலுமாகக் காலந்தோறும் மாறி வளர்ந்துள்ள தமிழ் இலக்கணம், இலக்கணம் எழுத முனைவோருக்குச் சவாலாக முன்நிற்கிறது. இச் சவாலை எதிர்கொள்ள வேண்டுமானால் பாரம்பரிய இலக்கண உத்திகள் போதா. சில நவீன உத்திகள் தேவைப்படுகின்றன. இவ்வுத்திகளை மொழியியல் வழங்கவல்லது. இலக்கணம் வரையப்படாத அமெரிக்க இந்திய மொழிகளுக்கு இலக்கணம் எழுத உருவான உத்திகளின் தொகுப்பே மொழியியல் என்பதை இங்குச்

சுட்டிக்காட்ட வேண்டும். இக்காலத் தமிழுக்கு இலக்கணம் எழுத முனையும்போது ஏற்படும் பல தயக்கங்களுக்கு மொழியியல் உத்திகளால் விடைகாண முடியும்.

இலக்கணவிதிகளை நூற்பாக்களாகத் தொகுத்துச் சொல்வது மரபிலக்கண அணுகுமுறை. நூற்பாக்களை மனப்பாடம் செய்து ஒப்புவித்தல் என்னும் மொழிக்கல்வி மரபிற்கேற்ற அணுகுமுறை என இதனைக் கூறலாம். இன்று இலக்கணத்தின் தேவை மொழிக் கல்வியோடு மற்ற நிலைகளுக்கும் விரிந்துள்ளது. எனவே, வருணனை இலக்கண அமைப்பு உலக இலக்கண உருவாக்கத்தால் இன்று போற்றப்படுகிறது. தமிழில் இவ்விலக்கண அணுகுமுறையை மேற்கொள்ள தெரிந்தோ தெரியாமலோ மொழியியல் மீது வளர்ந்துள்ள எதிர்மனப்பாங்கு தடையான உள்ளது. இத்தடை அகற்றப்பட்டாலொழிய தற்கால மொழித் தரவுகளின் அடிப்படையில் இலக்கணம் எழுதுவது சாத்தியமன்று.

இலக்கணங்கள் எழுதுவதற்கான உத்திகளை வரையறுத்ததோடு மட்டுமன்றிச் சமூகத்தின் எல்லா நிலைகளிலும் பொதுவான மொழி மேம்பாட்டை நோக்கி 1940-களில் மொழியியல் வளர ஆரம்பித்தது. பயிற்று இலக்கணங்கள் எழுதுவதற்குக் கோட்பாட்டு மொழியியல் அளித்துள்ள நன்கொடை ஏராளம். அத்துடன் மொழி பயிற்றுவிக்கும்போது எதிர் கொள்ளும் சிக்கல்களுக்குத் தீர்வு காணப் பயிற்று முறைகள், பயிற்று உத்திகள், பாடநூல்கள் தயரித்தல், மொழிக்கல்வி உளவியல் மற்றும் சமூகவியல் பிரச்சினைகள் என இன்னோரன்ன வகைகளில் மொழியியல் சாதித்துள்ள சாதனைப் பட்டியல் மிக நீளமானது. இன்று உலகெங்கும் சுமார் ஒரு கோடித் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களுள் பலர் தமிழைத் தாய்மொழியாகக் கற்று வருகின்றனர்; பலர் இரண்டாவது மொழியாகக் கற்று வருகின்றனர்; சிலர் அயல்மொழியாகக் கற்ற வருகின்றனர்.

இப் பயிற்றுச் சூழலுக்கேற்ற தமிழ்ப் பயிற்று முறைகள், பாடநூல்கள் ஆகியவை இன்னும் சரியாகவும், பொருத்தமாகவும் உருவாக்கப்படவில்லை. தாய்மொழிக் கல்வியிலேயே இன்று ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன. இவற்றை அரசின் மொழிக்கல்விக் கொள்கை, மொழிச்சூழல், கற்போரின் சமூகப் பொருளாதாரப் பின்னணி, பாட நூல்கள், ஆசிரியர் பயிற்சி, பயிற்றுமுறை, தேர்வு முறை என்பனவற்றின் அடிப்படையில் அறிவியல் நோக்கில் ஆய்வு மேற்கொண்டு மொழிக்கல்வித் தரத்தை உயர்த்துவதில் பல இடர்ப்பாடுகள் இருந்து வருகின்றன. இவ் ஆய்வுப் பணிகளில் மொழியியலறிவும் மொழியியலறிஞரும் பொருத்தமாகப் பயன்படுத்தப்படவில்லை. ஆங்கிலக் கல்வியை வளர்ப்பதிலும் பரப்புவதிலும் இன்று மொழியியலாளர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.



'மொழி பயிற்றுவித்தல்' அல்லது 'மொழி கற்பித்தல்' என்பது பயன்பாட்டு மொழியியல் (Applied Linguistics)' எனக் கோட்பாட்டு மொழியியலுக்கு இணையாக இன்று வளர்ந்து வருகிறது. உலகப் போரில் அமெரிக்கா தோல்வியைத் தழுவியதற்குச் சப்பானிய மொழியும், செருமன் மொழியும் இராணுவ வீரர்களுக்குத் தெரியாமல் போனதும் ஒரு காரணம் என மொழியியலாளர் கருத்து தெரிவித்தபோதுஇம் மொழிகளைக் கற்பிக்க அமெரிக்கா எடுத்த முயற்சியின் வளர்ச்சி வடிவமே இன்றைய இம் மொழியியல் பிரிவின் தனி வளர்ச்சி என்றால் மிகையில்லை. இன்று தாய் மொழியாளர்க்கு இணையாகப் பிற மொழியாளர் தமிழ்மொழி, பண்பாட்டு இலக்கியம், சமூகம் ஆகியவற்றின் மீது ஈடுபாடு காட்டி வருகின்றனர். இவர்களின் தேவைகளை நிறைவு செய்வதில் மொழியியலுக்கு மிகுந்த பங்கு உண்டு.

அடுத்தாற்போல், இன்றைய இலக்கிய வளர்ச்சியில் மொழியியல் சிறந்த பங்காற்றி வருகிறது. மொழியியல் வரலாற்றில் அமைப்பு மொழியியலைப் (Structural Linguistics) பற்றிய சிந்தனை வளரத் தொடங்கிய காலத்திலேயே இலக்கியவியலிலும் கவிதை மொழியை அமைப்பியல் கொள்கைகளின் அடிப்படையில் விளக்கும் போக்கு வளர ஆரம்பித்தது. இலக்கியத் திறனாய்வில் மொழியியலின் பங்கை ஹெரால்டு ஒயிட்ஹால் (Harold Whitehall) என்பவர், "கணிதத்தை விட்டு எந்த அறிவியலும் வளர்ந்துவிட இயலாது என்பது போல் எந்த இலக்கியத் திறனாய்வும் அதன் மொழியை விட்டு வளர்ந்துவிட முடியாது" என்று கூறுகிறார். ஒயிட்ஹாலின் இக்கூற்றைச் சற்று மிகைக் கூற்றாகக் கொள்ளலாம். இருந்தாலும் இலக்கியத் திறனாய்வில் சில இலக்கியத் திறனாய்வாளர்கள் கூறுவதுபோல் மொழியியலின் பங்கை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட முடியாது.

மொழியலாளர்களும் இலக்கியத் திறனாய்வாளர்களும் இலக்கிய மொழியை (Literary Language), பல்வேறு கோணங்களில் அணுகி ஆராய்ந்து வந்துள்ளனர். பிராகு மொழியியல் சிந்தனையாளர்கள் சாதார-

ணக் கருத்தாடலுக்கும் (Ordinary Discourse), கவிதைக் கருத்தாடலுக்கும் (Poetic Discourse) இடையேயுள்ள முக்கியமான வேறுபாடுகளை ஆராய்ந்துள்ளனர். கவிதைக் கருத்தாடல் சாதாரணக் கருத்தாடலின் பின்னணியில் வடிக்கப்பட்ட ஒன்று என்பது இவரது கருத்து. வின்பிரட் நவொத்தே (Winfred Nowottay) என்பார் சாதாரணக் கருத்தாடலிலிருந்து கடுமையான முயற்சிக்குப் பின் வடிவத்தெடுக்கப்பட்டு இலக்கியக் கலைஞன் பயன்படுத்தும் கருத்தாடல் கவிதைக் கருத்தாடல் என்கிறார். இக் கவிதைக் கருத்தாடலை விளக்கும் இலக்கியப் படிப்பாக இலக்கிய நடையியல் (Literary Stylistics) இன்று மேலை நாடுகளில் வேகமாக வளர்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் இலக்கியத் திறனாய்வுக்குப் புத்துயிரும் புது ஊக்கமும் அளிக்க மொழியியல் படிப்பால் இயலும். இருப்பினும் கவிதை மொழியாய்வுக்க மொழியியலின் பங்களிப்புப் பற்றித் தமிழ் இலக்கியத் திறனாய்வாளர்கள் இன்னும் ஐயம் உடையவர்களாகவே உள்ளனர். ஒரு சிலர் கவிதைமொழி ஆய்வில் மொழியியலுக்கு எவ்விதப் பங்கும் இல்லை என்னும் தீவிரப் போக்கு உடையவராகவும் உள்ளனர். மொழியியலாளர்களுக்கும் இலக்கியத் திறனாய்வாளர்களுக்குமிடையே அர்த்தமுள்ள கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்த இயலாமையால் இலக்கிய ஆய்வில் மொழியியலின் பங்கு இன்று வரை உணரப்படாமலேயே இருந்து வருகிறது. ஆனால், இலக்கிய மாணவர்க்கும் இலக்கியத் திறனாய்வாளர்க்கும் மொழி எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றிய அறிவு இருத்தல் அவசியம். இலக்கிய ஆய்வின் போது சில பகுதிகளில் மொழிநுட்பம் பற்றிய அறிவு (Mechanics of Language) தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டாக, யாப்பமைப்பைக் கூறலாம். மொழியியல் இது குறித்த தகுந்த விளக்கத்தையும், பகுப்பாய்வு உத்தியையும் தரவல்லது. எல்லாவற்றக்கும் மேலாக மொழியியல் முன்னேறி வருகின்ற ஒரு விஞ்ஞானம், இலக்கியம், இலக்கியத் திறனாய்வு என்னும் மொழி பற்றிய சிந்தனைகளை வளர்க்க மொழியியல் உதவும். இச் சமூக விஞ்ஞானத்தை நாம் இன்னும் புறத்தள்ளுவோமேயானால் இலக்கிய நடையியல், இலக்கியக் கருத்தாடல், இலக்கியத் திறனாய்வு என்னும் இலக்கிய ஆய்வுப் போக்குகளில் மேலும் பின் தங்கிவிடுவோம் என்பது உறுதி.

முனைவர் சு. இராசாராம்
மொழியியல் பேராசிரியர் தமிழ்நாடு.

## தமிழ் மொழியின் பயன்பாட்டு வழக்கு

தமிழ் மொழியில் இரு பயன்பாட்டு வழக்குகள் பயன்படுத்தப்பட்டு வருவதை நாம் காண்கிறோம். அவையாவன 1. இலக்கிய வழக்கு 2. பேச்சு வழக்கு. இவ்விரு வழக்குகளையும் மேம்படுத்தி செம்மைப்படுத்த அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தமிழ் மொழியின் வரலாறு நமக்குக் கூறுகிறது. தமிழ் மொழியில் ஆய்வு செய்துவரும் சமுதாய மொழியியலாலர் இத்தகைய மொழிச் சூழலை இருநிலைத்தன்மை / இருவழக்குச் சூழல் என்று வருணித்து இவ்விரு வழக்குகளுக்கும் பயன்பாட்டு ரீதியில் வேறுபாடுகளைக் கண்டறிந்துள்ளனர். தமிழ்மொழியின் இலக்கிய வழக்கானது இலக்கியம், கல்வி, தகவல் தொடர்பு, சட்டம், ஆட்சி, மதம் போன்ற துறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. முறைப்படியான கூட்டங்களிலும், அலுவலகக் கடிதங்களிலும், ஆவணங்களிலும், வகுப்பறைகளிலும், காலமுறை இதழ்களிலும், இலக்கியப் படைப்புக்களிலும், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றிலும், நூல்கள், அச்சிடப்பட்ட பிரசுரங்கள், படக்காட்சிகள், அரசு ஆவணங்களிலும் இன்னும் இவை போன்ற பிறவற்றிலும் இலக்கிய வழக்கின் பயன்பாடு காணப்படுகிறது. இலக்கிய வழக்கானது தனக்கென ஒரு சொற்கோவையையும் தொடரமைப்பு முறைகளையும் கொண்டுள்ளது.

தமிழ் மொழியை அறிவியல், தொழில் நுட்பம், தகவல் தொடர்பு ஊடகம், கல்வி, ஆட்சி போன்ற பல்வேறு துறைகளிலும் மேம்படுத்துவதிலும் வளப்படுத்துவதிலும் காட்டப்பட்ட உற்சாகத்தின் காரணமாக தனியாரும் அரசு நிறுவனங்களும் தமிழ்ப் பயன்பாட்டையும் தமிழ் வழக்குகளையும் பொருட் குறியீடு செய்தல் பொருள் விரிவாக்கம் செய்தல், புதுமையாக்கம் செய்தல் போன்ற பணிகளில் தற்போது ஈடுபட்டுள்ளனர். இத்தகைய சூழலில், தமிழ் மொழியின் வழக்குகளை வளப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியது தேவையா? அல்லது தேவையில்லையா? என்னும் வினா எழுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரும் வினாவானது, நமது பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் இக்கால தமிழ்ச் சமுதாயத்தின் அன்றாடப் பணிகளைச் செய்து முடித்திட போதுமானவையாக உள்ளனவா என்பதாகும்.

(கி. கருணாகரன், வ. ஜெயா, பக் : 78-79)

3, Torrington avenue, Colombo - 07
Tel : 011-2506272, Fax: 011-2585190
Email:- ahavili2004@yahoo.com,
ahavili2004@gmail.com

## சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர் (முழுப் பெயர்) : ____________

கற்பிக்கும் பாடசாலை : ____________

பாடசாலை முகவரி : ____________

தொலைபேசி/தொலைநகல் இல. : ____________

மின்அஞ்சல் முகவரி : ____________

கற்பிக்கும் பிரிவு : ____________ ஆரம்பம்/இடைநிலை/உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி : ____________

இத்துடன் ரூபா [    ] க்கான காசோலை/காசுக் கட்டளையை

இல [    ] இணைத்துள்ளேன்.

____________
கையொப்பம்

திகதி : ____________

காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் AHAVILI எனப் பெயரிட்டு அனுப்புக. காசுக் கட்டளையாயின் AHAVILI எனப் பெயரிட்டு HAVELOCK TOWN தபால் நிலையத்தில் மாற்றக் கூடியவாறு மட்டுமே அனுப்பி வைக்கவும்.

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

## சந்தா செலுத்த சில எளிய வழிமுறைகள்

அகவிழி சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் அகவிழி வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்.

அகவிழி, கொமஷல் வங்கி, வெள்ளவத்தை நடைமுறைக் கணக்கு எண் 1100022581 Commercial வங்கியின் எந்த கிளைகளிலிருந்தும் அகவிழி கணக்கு எண்ணுக்கு சந்தா அல்லது புத்தக விலையை பணமாக வைப்பு செய்யலாம்.

வங்கி கமிஷன் இல்லை

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் VILUTHU - AHAVILI பெயருக்கு காசோலை எழுதி அகவிழி கணக்கு எண்ணைக் குறிப்பிட்டு உள்ளூர் Commercial வங்கியில் வைப்பு செய்யலாம்.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புவர்கள் செலுத்தப்பட்ட தொகை, தேதி, இடம், நாள் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டு அகவிழி தலைமை அலுவலக முகவரிக்கு கடிதம் எழுதவேண்டுகிறோம். அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனி இதழ் | : 50/= |
| ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) | : 700/= |
| இரு வருடச் சந்தா | : 1200/= |

## அகவிழி விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின் அட்டை | : 7000/- |
| உள் அட்டை (முன்) | : 6000/- |
| உள் அட்டை (பின்) | : 5000/- |
| உள் பக்கம் | : 4000/- |
| நடு இருபக்கங்கள் | : 6500/- |

**தொடர்புகட்கு**

**Colombo**
3, Torrington Avenue, Colombo - 07.
Tel: 011-2506272

**Jaffna**
189, Vembadi Road, Jaffna.
Tel: 021-2229866

**Trincomalee**
81 A Rajavarodayam Street, Trincomalee
Tel: 026-2224941

**Batticaloa**
37, Old Rest House Road,
Tel: 065-2222097


சேமமடு பதிப்பகம்
அரசியல் விஞ்ஞானம்
அரசு பற்றிய கற்கையும், அரசை இனங்காணுதலும்
விலை : 360.00
அரசியல் விஞ்ஞானம்
அரசியல் செயற்பாடும், அரசியல் செயல்முறையும்
விலை : 400.00
விலை : 390.00
விலை : 280.00
விலை : 280.00
விலை : 480.00
விலை : 280.00
சேமமடு பொத்தகசாலை
யூ.ஜி. 50,52 பீப்பள்ஸ் பார்க் கொழும்பு -11
தொ.பே: 011-2472362, தொ.ந:011-24448624
மின்னஞ்சல்: chemamadu@yahoo.com
பத்மம் பதிப்பகம்
விலை : 60.00
விலை : 60.00
விலை : 60.00

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

முரளி கொமினிகேஷன்
185, டன்பார் வீதி,
ஹற்றன்
தொ.பே.இல: 051-2222041/42/43

குமரன் ரேட் சென்டர்
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா.
தொ.பே.இல: 052-2223416

நியூ கேசவன் புக்ஸ்டோல்,
56, டன்பார் வீதி,
ஹற்றன்.
தொ.பே.இல: 051-2222504
051-2222977

தனலட்சுமி புத்தகக்கடை
29, பிரதான வீதி,
கப்புற்றல
தொ.பே.இல: 057-2268205

கிரிசான் புத்தக நிலையம்
07, தபால்நிலைய வீதி,
மஸ்கெலியா.
தொ.பே.இல: 071-9531554

அகவிழி நிலையம்
81ஏ, இராஜவரோதயம் வீதி
திருகோணமலை.
தொ.பே.இல: 026-2224941

அறிவாலயம் புத்தகக்கடை
190B, புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
தொ.இல: 024-4920733

ஜானு புத்தக நிலையம்
ஆஸ்பத்திரி வீதி,
களுவாஞ்சிக் குடி.
தொ.பே.இல: 077-6446046

ABI புத்தக நிலையம்
(எலக்ரோனிக் கடை)
பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி
தொ.பே.இல: 065 22 50 950

நூர் மொகமட் நியுஸ் ஏஜன்ஸ்
132, பிரதான வீதி,
கிண்ணியா 03
தொ.பே.இல: 026-2236266

அகவிழி நிலையம்
37, ஓல்ட் ரெஸ்ற் கவுஸ் றோட்,
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 065-222-2097

பி. ஜெகதீஸ்வரன்
அமரசிங்கம் வீதி, ஆரயம்பதி
மட்டக்களப்பு .
தொ.பே.இல: 077-1261718
கை.தொ.இல: 077-9028679

அன்பு ஸ்ரோஸ்
14, பிரதான வீதி,
கல்முனை
தொ.பே.இல: 067-2229540

புக் லாப்
172, ராமனாதன் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290
கை.தொ.இல: 0771-285749

எஸ். ஏ. முஹீர்
ஆசிரிய நூலகர்
மர்க்கஸ் வீதி
மூதூர் - 05
தொ.பே. இல: 060 226 1158,
077 991 7758

கவிதா புத்தகக் கடை
வவுனியா
தொ.பே.இல: 0572223556

S. ஏகாந்தராஜன்
50/9, றாகல பஜார்,
ஹல்கிறனோயா,
தொ.பே.இல. 072-3715909

பராசக்தி ஏஜன்சீஸ்
71, பிரதான வீதி
பண்டாரவளை
தொ.பே.இல: 0572223556

M.T.M தௌசீர்
127/2, கண்டி வீதி
திகாரிய
தொ.பே.இல: 033-2292736/
0777-411543/071-4493154

பூபாலசிங்கம் புத்தகக் கடை
202, செட்டித் தெரு,
கொழும்பு - 11
தொ.பே.இல: 011-2422321

பூபாலசிங்கம் புத்தகக் கடை
309- A 2/3, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல: 4515775/2504266

சேமமடு புத்தகக்கடை
UG 50, 52 பீப்பில்ஸ் பார்க்
கொழும்பு 11.
தொ.பே.இல: 011- 2472362

அல்குரசி புத்தக நிலையம்
28,1/2, புகையிரத வீதி
மாத்தளை.
தொ.பே.இல: 066 3662228

அகவிழி நிலையம்
189, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-2229866

அகவிழி நிலையம்
66, பேராதனை வீதி,
கண்டி.
தொ.பே.இல: 081-2224041
கை.தொ.இல: 077-9148987

A.L. அனீஸ் அலி
302/A, நெசவு நிலைய சந்தி,
பொத்துவில் - 02
தொ.பே.இல. 077-9183597/060-2635567

ISSN 1800-1246